



ARCHIVES AND HISTORICAL
28 சன 1977
EGMORE, MADRAS
RR 25177
106

# திருவேட்டீசுவரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவில்



திருவேட்டீசுவரர் திருக்கோயில் தல வரலாற்று நூலை ஆணையர் முன்னாள் முதல்வர் கனம் எம். பக்தவத்சலம் அவர்களிடம் வழங்குதல்



திருவேட்டீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில் தமிழக ஆளுநர்
மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களும்,
அவர்தம் துணைவியாரும் பங்கு பெறுதல்

(106)

முகப்பு : கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலின் அழகிய தோற்றம்.

# திருக்கோயில்

மாலை : 18 20 | நள ஆண்டு—ஐப்பசித் திங்கள் அக்டோபர்—1976 | மணி : 1

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

'திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்' களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி ஜனவரித் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தா தாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவருது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனை யாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

திருவண்ணாமலைத் தீபச்சிறப்பு
—திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,

செஞ்சொற் கவி இன்பம்—ஆசிரியர்.

உறக்கத்தில் விளைந்த உள மாற்றம்
—டாக்டர் திரு தெ. பொ. மீனுட்சி சுந்தரனர்.

அம்பிகையின் அழகு வெள்ளம்
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

பவள விழா வாழ்த்துப் பாக்கள்
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

வீடணன் விரும்பிய அரசு
—வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

ஞான சாரம்—ஆசிரியர்.

இரு பேச்சுடையான்
—நீதிபதி மு. மு. இஸ்மாயில்.

திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றங்கரையான்
—திரு. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம். ஏ., பி. எச். டி

வாலி வழக்கு
—திரு. புரிசை சு. முருகேச முதலியார்.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

உரை 211, 858
876.19-1

# திருவண்ணாமலைத் தீபச் சிறப்பு

**திரு எம்.கே.பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,**
ஆணையாளர், அறநிலையத்துறை சென்னை-34.

158617

## முன்னுரை :

நமது அருமைத் தமிழ்நாட்டிற்குப் பெருமைதரும் எண்ணற்ற பல தலங்களுள், திருவண்ணாமலை மிகவும் தலைசிறந்த தொன்றாகும். பஞ்சபூதத் தலங்களுள், நெருப்புத் தலம் எனினும், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலம் எனினும், இதனைப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் எனச் சமய இலக்கியங்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்து கூறும். இவ்வரலாற்றுக் கேற்ப நிலநூல் அறிஞர்களும (Geologists). இம்மலை நெருப்பினல் அமைந்தது; நெருப்புத் தன்மை உடையது (Igneous Rocks) என்று ஆராய்ந்து கூறுகின்றனர்.

## திருவண்ணாமலைச் சிறப்பு :

திருவண்ணாமலையை, அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள் தமது திருப்பாடல்களில் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள்பெற்று விளங்கியவராவர். குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும் இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானிய மடம் என்பது அமைந்து சிறந்து விளங்கி வருகின்றது. குன்றக்குடி ஆதீனத்தின் முதற்பெருங் குரவராகிய தெய்வசிகாமணி தேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியவராவர். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களாகிய சாமர்செட்மாம் (Somerset Maugham), பால்பிரண்டன் (Paul Brunton) முதலிய மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்புடையவராகிய ஸ்ரீரமண மகரிஷி அவர்கள் வாழ்ந்து அமைத்த ரமணாசிரமமும், இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது. சேஷாத்திரி சுவாமிகள் என்பவரும் இங்குத் தவம் செய்து அருள்பெற்றார். சேரர் சோழர் பாண்டியர் இராட்டிரகூடர் ஒய்சளர் துளுவர் முதலிய அரசர்கள் பலர், திருவண்ணாமலைக் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். கோயிற் பரப்பும், கோபுரச் சிறப்பும் கண்டு களிக்கத்தக்கவை.

## நினைக்க முத்தி :

திருவண்ணாமலையின் தன்னிகரற்ற பெருஞ்சிறப்பினை நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர்; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காஞ்சி; ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

> "துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்
> துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
> உவப்புடன் நிலைத்து மரிக்கும்ஓர் பதியும்,
> ஒக்குமோ நினைக்கும் நின் நகரை?"

என இத்தலத்தின் சிறப்பினைத் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் திறந் தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்து மகிழ்ந்துள்ளார்.

இங்ஙனம் திருவண்ணாமலையின் சிறப்பினைப் போற்றிப் பாடும் சிவப்பிரகாசர், அங்கு நிகழும் கார்த்திகைத் தீபச் சிறப்புப் பற்றிப் பாடாமல் இருப்பாரோ? அதனைத் தம் வாழ்நாளில் அவர் பலகாலும் தரிசித்து மகிழ்ந்திருப்பாரன்றோ! தாம் பலகால் தரிசித்து மகிழ்ந்த கார்த்திகைத் தீபத்தின் சீர்த்தியினை மிகவும் வியந்து போற்றி, அவர் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

(1) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, புற இருளை மட்டுமேயன்றி, அதனைக் கண்டு வழிபடும் அன்பர்களின் அகஇருள் ஆகிய அறியாமையையும் போக்கி, மெய்யுணர்வு ஒளியை நல்கி நலம் புரிந்து விளங்குகின்றது.

> "கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
> கண்டவர் அகத்திருள் அனைத்தும்
> சாய்த்துநின் றெழுந்து விளக்குறுஞ் சோண
> சயிலனே கயிலைநா யகனே"

(2) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்பெறும் சிறுசிறு விளக்குப்போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒரு பெரும் ஒளிவிளக்கு எனும்படிச் சிறந்து திகழ்கின்றது

" சீர்தரும் மணியின் அணிந்தன எனக்கட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்
கார்தரும் உலக விளக்குஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே "

(3) திருவண்ணுமலையில் கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் மலையுச்சியின் மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனிய காட்சியானது, எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளைகொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழு வெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதனருகே செழுஞ்சுடர்ப் பேரொளி விளக்குச் சுடர்விட்டு எரிதலும், கவின்மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக் களிதுளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப்போலவும், அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணிலாவின் தோற்றம் அத்தாமரை மலரின அருகு சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும், அமைந்து காணப்படுகின்றது.

" மடலவிழ் மரைமாட் டெகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சயிலனே கயிலைநாயகனே."

(4) திருவண்ணுமலைக் கார்த்திகை விளக்கீடு, ஒ கலங்கரை விளக்குப் போல, உயர்ந்து எரிந்து ஒ தந்து விளங்குகின்றது. அது பிறவி ஆகிய கடலை கடந்து, வீடுபேறு ஆகிய கரையினை அடைய விரும் பவர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப் நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத் உய்யும்படி செய்து உதவுகின்றது.

" பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே "

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருவண்ணு மலையையும், அங்கு நிகழும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினையும், நாம் அனைவரும் அன்புடன் கண்டு, வழிபட்டு, அண்ணுமலை அண்ணலின் அருளைப் பெற்று உய்ய முற்படுவோமாக.

❖ ❖ ❖



28-12-1976 அன்று காஞ்சிபுரம் குமரகோட்டத்தில், அருள்திரு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், அருள்திரு கச்சபேசுவரர் திருக்கோயில், அருள்திரு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், அருள் திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய கோயில்களின் சார்பில் நடைபெற்ற பாவை மாநாட்டில் இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம், I. A. S. அவர்கள், தலைமையுரை ஆற்றுகிருர். சென்னைத் துணை ஆணையர் திரு. M. சூர்யராஜ், காஞ்சிபுரம் உதவி ஆணையர் திரு. K. நடராசன், திருப்பாவை திருவெம்பாவை மத்தியக் குழுச் செயலர், மற்றும் குமர கோட்டம் தக்கார் திரு. V. K. R. K. கோவிந்தராஜ முதலியார் ஆகியோர், உடன் உள்ளனர்.

# "செஞ்சொற் கவியின்பம்"

## முன்னுரை :

மக்களாகப் பிறந்தார் பெற்றுத் துய்த்தற்குரிய இன்பங்கள் பல. அவற்றுள், சிறந்த இலக்கியம் அல்லது கவிதையினைப் படித்து உணர்ந்து மகிழும் இன்பமும் ஒன்ருகும். உலகியல் வாழ்வில் நம்மனோர் எய்தும் இன்பங்களுள், நலம் மிக்கதாய்த் தீமைக் கலப்பின்றித் தூய்மையுற்றுச் சிறந்து திகழ்வது, அழகிய இனிய கவிதையொன்றினைப் படித்துச் சுவைத்து, நாம் அடையும் இன்பமே எனலாம். "செஞ்சொற் கவி இன்பம்" என இதனைக் கம்பநாடர் புகழ்ந்து கூறுகின்ருர்.

"கவிதையானது, நம் இளமைக்கு வலிவும் அறிவும் ஊட்டுகின்றது; முதுமையில் மகிழ்ச்சி விளைவிக்கின்றது. செல்வச் செழிப்பில் நம்மைச் சிறப்புறுத்துகின்றது; நாம் வீட்டில் இருப்பின், நல்ல பொழுது போக்கின்பம் நல்குகின்றது; வெளியிடங்களுக்குச் செல்லின், நமக்கு உறுதுணையாக உதவி புரிகின்றது." (1).

சிறந்த இனிய கவிதையினை அறிந்து சுவைக்குந் திறம், எல்லோர்க்குமே அமைந்துவிடுவதில்லை. "கண் இல்லாத குருடரும், காதில்லாத செவிடரும், வாயில்லாத மூங்கையரும் உலகிற் பலர் உளராதல் போல, எத்துணையோ பலர் கவிதைச் சுவையறிந்து களிக்குந் திறம் இல்லாதவர்களாக உலகிற் காணப்படுகின்றனர்." என ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் (W. H. Hudson) குறிப்பிடுகின்ருர்.

## வடமொழிச் சுலோகம் :

இவ்வுண்மையினையே, பின்வரும் கருத்து அமையும்படி, ஒரு வடமொழிச் சுலோகம் அழகுற உணர்த்துகின்றது. "கவிதை என்னும் அழகிய பெண்ணனவள் இலக்கணம் கற்று வல்லவனைத் தந்தை என மதித்து அவனை அணுகுவதில்லை; தருக்கநூற் புலமையில் தேர்ந்தவனைச் சகோதரன் என்று கருதி, அவன்பால் நெருங்குவதில்லை. வேத அத்தியயனம் செய்தவனையும், சந்தம் ஒன்றை மட்டுமே கவனிப்பவனையும், சண்டாளன் போலக் கண்டு அஞ்சி வெருவி அகன்று ஓடி விடுகின்ருள்; மீமாஞ்சைப் பனுவல்களின் ஆராய்ச்சியாளனை நபும்சகன் என்று நினைத்து, அவமதித்துப் புறக்கணிக்கின்ருள்; ஆனல், காவிய அலங்கார சாத்திரம் அறிந்த நல்ல சுவைஞ(ரசிக)னைக் கண்ட மாத்திரத்திற் களிதுளும்பி மகிழ்ந்து, அவனையே தன் கொழுநன் எனக் கொண்டு மணந்து இன்புறுகின்ருள்" என்பது அதன் பொருள்.

" இலக்கணத்தில் வல்லவனைத் தந்தையெனக்
கொண்டணுகாள்; தருக்கம் என்னும்
உலப்பிலியல் உணர்ந்தவனை உடன்பிறந்தான்
எனக்கலவாள்; உயர்ந்த சந்த
நலந்திறமே கணிப்பவனை நனிவெருள்வாள்;
மீமாஞ்சன் நபும்சன் என்பாள்;
கலைத்திறஞ்சேர் கவிதைநல்லாள், காப்பியச்சீர்ச்
சுவைஞனையே காதலிப்பாள்."

—தமிழாக்கம், ந. ரா. மு.

## கவிதையின் மாண்பு :

சிறந்த இனிய கவிதைகளைத் தேர்ந்துணர்வதும், அவற்றைத் திறம் தெரிந்து சுவைத்து மகிழ்ந்து இன்புறுவதும், நம் மனித வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளும் வழிகளுள் ஒன்ருகும். ஆசிரியர் திருவள்ளுவர் அறிவுறுத்தியது போலப் 'பயில்தொறும் இனிக்கும் பண்புடையார் தொடர்பு போல, நவில்தொறும் நயம் பயக்கும் இயல்புடையன' நல்ல கவிதைகள். 'அறிதோறு அறியாமை கண்டற்ருல்' என்றது போல, நினைத்தொறும் புதியபுதிய உணர்வும், சுவையும் கருத்தும் தோற்றுவித்துக் கற்பாரைக் களிப்பூட்டுதல், கவிதையின் மாண்பாகும்.

நலஞ்சிறந்த ஓர் இனிய கவிதையானது வாழ்வியற் கவலைகளால் வருந்தி நிற்கும் மனங்களுக்கு நோய் தணிக்கும் மருந்தாகப் பயன்படுகின்றது. உலகியற் கொடுமைகளை யுணர்ந்து சில்லிட்டுப்போன உள்ளங்களுக்குத் தென்பூட்டி உணர்வளிக்கும் காலைக் கதிரவனின் ஒளிமிகுந்த கதிர்களாக விளங்குகின்றது; கொடிய பழி நெறிகளிலேயே பழகி, இழிதகவான நடத்தையே பயின்று கறைபடிந்து போன இதயங்களுக்கு, அழுக்கு அகற்றும் அழகிய தெளிநீர் ஓடையாகத் திகழ்கின்றது. அறிவும் ஆற்றலும் மிக்குப் பண்பட்ட தூய அகங்களுக்கு அரும்பெறல் இன்ப விருந்தாக மிளிர்கின்றது.

மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
ஞாயிருய்த் தெள்ளமிழ்த் வான்யாருய்த் தேனூற்ருய்
மாவிருந்தாம் நற்கவிதை மாண்பு.

—தமிழாக்கம், ந. ரா. மு.

---

(1) " Poetry nourisheth and instructeth our youth; delights our age; adorns our prosperity; comforts our adversity; entertains us at home; keeps us company abroad. "

—Ben Jonson

(2) The soothing power of poetry is great and its influence on our mind is vivid and sweet. To hearts eatan away by sorrow and worldly cares, the reading of poetry comes as a healing balm; to hearts chilled by the icy hand of cruelty, it appears like the warming rays of the morning sun; and to hearts stained with the blackest crime and the basest vice, it comes as the washing water of a crystal rill. Ah! How lovely are the changes wrought by poetry in the mind of man; and how profound and permanent are the moral effects it brings into his inward nature!"

—Maraimalai Adigal

## சிறந்ததொரு செய்யுள்மணி :

இத்தகைய நல்ல இனிய கவிதைகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தெய்வ நலம் செறிந்த சேக்கிழார் சுவாமிகள் அருளிய செய்யுள் ஒன்றை மட்டும், ஈண்டு இயன்ற பெற்றி கண்டு அமைவோம் :

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்"

எனவரும் பெரியபுராணத் திருப்பாடலைச் சிவநேயச் செல்வர்கள் அனைவரும் பெரும்பாலும் அறிந்திருப்பர். பெரியபுராணத்தின்கண் பேரொளி வீசிச் சுடர் விட்டுத் திகழுமசிறந்துயர்ந்த செய்யுள் மணிகள் பல வற்றுள், இஃதொன்றாகும்.

## செய்யுள் விளக்கும் செய்தி :

ஆளுடைய பிள்ளையார் ஆகிய திருஞானசம்பந்தர், மூன்றாண்டுச் சிறுகுழந்தையாக இருந்தபொழுது, நீராடி வரப் புறப்பட்ட தம் தந்தையாருடன் தாமும் சென்று, சீர்காழித் தலத்தில் பிரமதீர்த்தக் கரையில் திருத்தோணிச்சிகரம் பார்த்து, 'அம்மே அப்பா' என அழைத்துத் தம்மேலைச் சார்புணர்ந்தோ,சாரும் பிள்ளை மையினாலோ அழுத சமயத்தில், யாவருக்கும் தந்தை தாய் என விளங்கும் சிவபெருமானும் தேவியாரும் எழுந்தருளி, எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்து ஊட்டியருளிய நிலையில், அவர் அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரியவரிய பொருளாகும் தாவில் தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினார், என்னும் செய்தியினை விளக்குவது, இச் சிறந்த பெரிய புராணச் செய்யுள்.

## செய்யுளின் பொருள் :

"சிவபெருமானின் திருவடிகளையே சிந்திக்கின்ற அருட்செல்வம் பெறுதற்குக் காரணம் ஆகிய நல்ல ஞானத்தையும்; பிறவிக்குக் காரணம் ஆகிய மலமாயா கன்மங்களை அறவே ஒழிக்கின்ற பணிநிற்றலால் எய்தும் உயர்ந்த ஞானத்தையும்; ஒப்பு இல்லாத முழுநிறைவான கலைஞானத்தையும்; தேவரும் முனிவரும்கூட உணர்தற் கரிய உண்மை ஞானத்தையும்; முதன்மையான தவப் பேற்றினையுடைய ஆளுடைய பிள்ளையார், தமக்கு அம்மையப்பர் ஞானப்பால் ஊட்டியருளிய அந்நிலை யிலேயே உணரப்பெற்றார்" என்பது, மேற்குறித்த பெரியபுராணச் செய்யுளின் திரண்ட பொருள். 'நவில்தொறும் நூல்நயம் போலும்' என ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்பிட்டதற்கேற்ப, இச்செய்யுளை நுணுகி யுணருந்தொறும் இனிய பல சிறந்த கருத்துக் கள் தோன்றுதல் காணலாம்.

## நாற்சீர் நலம் :

இச்செய்யுள் நாற்சீர்களான் இயன்ற கலிவிருத்தம். 'நாடிய சத்திநிபாதம் நாலுபாதம்' என்றபடி, மந்தம் மந்தரம் தீவிரம் தீவிரதரம் என நால்வகைப்படும் சத்திநி பாதத்துள், ஆளுடைய பிள்ளையார் மேலான ஞான நிலையினை எய்துதற்குரியவராக, நாலாம் சத்திநிபாதம் முற்றிய நிலையிற் சிறந்து திகழ்ந்தார் என்பதனைக் குறிப்பிக்க, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இச்செய் யுளை நாற்சீர்களான் அமைத்தருளிய அருமைப்பாடு அறிந்து மகிழ்தற்குரியது.

## சிவனடியே சிந்திக்கும் ஞானம் (1) :

வீடுபேற்றின்பம் எய்துதற்குரிய தவநலம் மிக்குடை யவராய்ப் பிறந்த மெய்யடியார்கட்கு, அப்பிறப்பில் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதலும், அத் தெய்வமும் ஏனையோர் அல்லர் சிவபெருமானே எனத் தெளிதலும் ஆகிய ஞானம் ஒருதலையாக நிகழும். ஆளுடைய பிள்ளையாருக்கு அத்தகைய ஞானம் நிகழ்ந் ததனால் விளைந்த சிந்தனையைச் 'சிவனடியே சிந்திக்கும்' எனவும்; அச்சிந்தனையால் தொட்டனைத்தூறும் மணற் கேணி போல மேன்மேலும் சிறந்த பல நலங்கள் வளர்ந்து பெருகுதலின் 'திருப்பெருகு' எனவும்; நான் என்னும் முனைப்புச் சற்றும் இன்றிச் சிவனருளே துணை யாகக் கொண்டு ஒன்றி நின்று சிந்தித்தலின், அவ் வுணர்வினைச் 'சிவஞானம்' எனவும் ஆசிரியர் சேக்கிழார் கூறியருளினர்.

'சிவனடியே' என்பதில் ஏகாரம் பிரிநிலை. நம்மனோர் போல, அஞ்ஞானம் விளைவிக்கும் பிறபொருள்களைச் சிந்திக்காமல், ஞானம் விளைவிக்கும் சிவபிரான் திருவடி யினையே ஆளுடைய பிள்ளையார் சிந்திக்கப்பெற்றார் என்பது கருத்து.

நற்பொருள்களைச் சிந்திக்கும் வாய்ப்பும் வசதியும் பெறுதலே ஒரு சிறந்த நற்பேறு ஆதலின், சிந்தித் தலையே 'திரு' என்றார்.

இறைவன் சிந்திப்பரியவன். சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிபவன். சிவஞான சித்தியார் 'சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க வந்திடும் அவ் ஒளிபோல மருவி, அரன் உளத்தே வரவர வந்திடு வன்' எனக் கூறுதற்கேற்ப, தன்னை இனிது சிந்தித் திருப்பார் உணர்வின்கண் சிவபரம்பொருள் படிப் படியே வந்து அமர்ந்து நிலைபெற்று விளங்கித் திகழ் தலின், அச்சிந்தனையுணர்வு 'சிவஞானம்' எனப் பட்டது.

பிற்கூறப்பெறும் ஞானங்களும் சிவஞானமே யாதலின், ஈண்டுச் 'சிவஞானம்' என்றதனை 'நல்ல ஞானம்' என்னும் பொருளுடையதாகக் கொள்ளுதலும் அமையும். 'சிவம்' நன்மை எனப் பொருள்படும்.

## பாங்கினில் ஓங்கிய ஞானம் (2).

மேற்குறித்த சிவனடியே சிந்திக்கும் சிந்தனைக்குப் பின்னே நிகழ்வதாகலாலும், பவத்தினை ஒழித்தற்கு இன்றியமையாததாகலாலும், இறைபணியின் நிற்றலை யுணர்த்தும் ஞானத்தைப் 'பவமதனை அற மாற்றும் ஞானம்' எனவும்; அஃது யாகம் முதலிய கன்மப் பயன் கள் போல அனுபவ மாத்திரத்தால் அழிந்தொழியும் இன்பங்கள் போலாமல், அழியாத வீடு பேற்றின் பத்தைத் தவறாது அளிக்கவல்ல தன்மையது ஆதலின் 'பாங்கினில் ஓங்கிய ஞானம்' எனவும் கூறினர்.

தானம் யாகம் முதலிய கன்மப் பயன்கள் விரைவில் அழிந்தொழியும் தன்மையன என்பதும், சரியை கிரியை யோகம் முதலிய இறைபணி நிற்றலினாலேயே அழியாத வீடுபேற்றின்பம் அடையலாம் என்பதும்,

"தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்தி விரத கன்மயோகங்கள் சரித்தோர், ஈனமிலாச சுவர்க்கம் பெற்றும் இமைப்பளவின் மீள்வர்; ஈசன் யோகக் கிரியா சரியையினில் நின்றோர் ஊனம்இலா முத்திபதம் பெறுவர்" (276) எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளால் உணரப்படும்.

பவம்-பிறவி. அஃது ஈண்டுப் பிறவிக்குக் காரணமான ஆணவம் மாயை கன்மம் என்னும் மலங்களை யுணர்த்தியது. அற மாற்றல்-வேர் அறுததல். 'மதனுடை நோன்றாள்' என்புழி, 'மதன்' என்பது அறியாமையைக் குறிக்குமாகலின் 'பவமதனை' என்பதற்குப் 'பிறவிக்குக் காரணமான அறியாமையை' எனவும் பொருள் கூறலாம். (பவம்+அதனை; பவம்+மதனை).

பாங்கு-முறைமை. உரிமை, பணிசெய்தல். சிந்தனைக்குப்பின் நிகழும் முறைமையதாதலின் பணி செய்தலைப் 'பாங்கு' என்றார்.

சிந்தித்தலால் நிகழும் தொடர்பினும், பணி செய்தலாற் பெறும் தொடர்பு உரிமை மிக்கதாதல் பற்றி, அதனைப் பாங்கு என்றார் எனினும் அமையும்.

'பாங்கு' என்பது உரிமையும் பணிசெய்தலும் குறித்தலை "ஆங்கவர்க்கே பாங்காவோம். அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்" எனவரும் திருவெம்பாவைத் திருப்பாடலால் தெளியலாம்.

'பாங்கினில்' என்புழி 'இல்' உருபு ஏதுப் பொருண்மை குறித்து நின்றது. 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்புழிப்போல. ஞானமானது ஓங்கிய ஞானம் ஆதற்குப் பணி ஏதுவாயிற்று.

இனி, இதனை வேறு வகையிலும் பொருள் கொள்ளலாம். 'காக்கையிற் கரிது களம்பழம்' என்புழிப்போல, 'இல்' என்பது ஈண்டு உறழ்பொருளில் வந்த ஐந்தனுருபு எனக்கொண்டு, பிறவிப் பிணியை அறவே மாற்றுதலில் சிந்தனையைக் காட்டிலும், பணிசெய்தல் ஓங்கிச் சிறந்தது எனவும் கொள்ளலாம்.

பணி செய்தலினாற் பவம் அகலும் என்னும் உண்மை, "இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" எனவரும் சிவஞானபோதச் சூத்திரம் (10) கொண்டு தெளியப்படும்.

தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடுதல், ஆளுடைய பிள்ளையார் செய்த அரும்பணியாகும். திருப்பதிகம் பாடுதல் ஆகிய திருத்தொண்டின் தெளிவே, ஈண்டுப் 'பாங்கினில் ஓங்கிய ஞானம்' என ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளால் அழகுற விதந்து சிறப்பித்துக் குறிப்பிடப்பெற்றது.

## உவமையிலாக் கலை ஞானம் (3)

எண்ணிறந்தனவாக உள்ள வேதாகமங்களையும், ஏனைய பல கலைகளையும் ஓதியுணர்தல்தானே, எத்தகையோர்க்கும் அரிதாக இருப்ப, ஓதாமலே எல்லாக் கலைகளையும் ஒருங்கே முற்றிலும் உணர்ந்ததுடன்,

"பன்மறையோர் செய்தொழிலும்
பரம சிவா கமவிதியும்,
தன் மறையின் விதி முழுதும்
ஒழிவின்றி நவின்றவனையே"

என நம்பியாண்டார் நம்பிகள் பாடுதற்கேற்ப, வேதாகமங்களின் வியன்பெரும் பிழிவான கருத்தின் சாரங்களையெல்லாம் ஒருங்கே நிரந்தினிது தொகுத்துத் தம்முடைய திருப்பதிகங்களில் எல்லாம் அமைத்துப் பாடும் அரும்பெறல் ஆற்றலும் ஆளுடைய பிள்ளையார்க்கு வாய்த்தமையின், 'உவமையிலாக் கலை ஞானம்' என வியந்தோதினர் ஆசிரியர்.

'உவமையிலா' என்ற அடைமொழித் தொடர், கலைஞானத்தை மட்டுமே விசேடித்து நில்லாமல், அதனை ஓதாதே யுணர்ந்து கைவந்த ஆளுடைய பிள்ளையாரின் ஈடும் எடுப்பும் அற்ற இயல்பினையும், இனிது உணர்த்தி நின்றது.

ஏனைய உலகியற் கலைஞானங்களுக்கெல்லாம் மேம்பட்டு உயர்ந்த தத்துவ ஞானத்தினை 'உவமையிலாக் கலைஞானம்' என உயர்த்துரைத்தார் எனினும் பொருந்தும்.

ஆளுடைய பிள்ளையார் 'பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் தொண்டர்' ஆகிய சாமுசித்தர் ஆவர். ஆதலின் அவர் முன்பு செய் தவத்தின் ஈட்டம் மிக்குடையவராகப் பிறங்கி ஒளிர்ந்தனர். எனவே முற்பிறப்புகளிலேயே அவர் கலைஞானங்களெல்லாம் கைவரப் பெற்றிருந்தார்.

செவ்வி முதிர்ந்த தாமரையின் நாள் அரும்புகளை ஞாயிறனது அலர்த்துங்கால், முன்னுள் அலர்த்தப் பட்டு இரவிற் குவிந்திருந்த மலர்களும், அவற்றின் இடையில் தாமே விரிந்து மலரும். அதுபோலப் 'பிரளயாகலருக்கு முன்னுணர்த்தும் தான் குருவாய் முன்' எனச் சிவஞானபோதம் கூறுவதுபோல நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலியன அமைந்த தனது இயற்கை வடிவினையே குரு வடிவமாகக் காட்டி, முன்னே நின்று சிவபெருமான் அருள் புரிந்தபொழுது, ஆளுடைய பிள்ளையாரது அறிவின்கண் ஏனைய ஞானங்களோடு, கலைஞானமும் இடையே போந்து இயல்பாக மலர்ந்தது.

இக்குறிப்பினை நம்மனோர் உய்த்துணர்ந்து கொள்ளுமாறு வைப்பு முறையால் விளக்குதற் பொருட்டே, 'கலைஞானம் தொடக்க நிலைக்கு உரியதாகவும், அதனை முதலிற் கூறாமல் இடையில் கூறியருளினர் ஆசிரியர்.

இனி, இந்த ஞானங்களை யெல்லாம் ஆளுடைய பிள்ளையார் ஏனையோரைப் போலச் சாதன வகையால் ஒன்றன்பின் ஒன்றாகப் படிமுறையே யன்றி, ஒருங்கெய்தினர் என்னும் பெருவியப்பிற்குரிய செய்தியின் பெற்றி உணர்த்துதற்கே, ஆசிரியர் இங்ஙனம் ஞானத் திறங்களை நிலை மாற்றிக் கூறி யருளினர் எனினும் அமையும்

## உணர்வரிய மெய்ஞ்ஞானம் (4):

ஆளுடைய பிள்ளையார் பெற்றுப் பிறங்கிய மெய்ஞ்ஞானம், தேவர் முனிவர் என்பவர்களாலும் இற்றெனை எண்ணியுணர்தற்கும் அரிய சிறப்புடையதாகலின், அதனை 'உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என விதந்து ஓதினர். "அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருள் ஆகும் தாவில் தனிச் சிவஞானம்" என இம்மெய்ஞ்ஞானத்தினை, ஆசிரியர் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டிருத்தலும் ஈண்டுக் கருதி யுணரற்பாலது.

அனுபூதி ஞானத்திற் சுட்டுணர்வு கெட்டொழிதலின், அதுபற்றி, 'உணர்வரிய' என்னும் அடைமொழி புணர்த்து ஓதியருளினர் எனலுமாம்.

இனி மெய் என்பது சிவசத்து ஆகிய இறைவனைக் குறிப்பதாகக் கொண்டு, 'உணர்வரிய' என்பதனை இறைவனுக்கு அடைமொழியாக்கலும் ஒன்று.

"உணர்வரிய மெய்" என்பது 'பசு ஞான பாச ஞானங்களால் உணரப்படாத கடவுள்' எனப் பொருள் படும். "ஊனக்கண் பாசம் உணராப்பதி" என்னும் சிவஞான போதமும், "பாசஞானத்தாலும் பசுஞானத் தாலும் பார்ப்பரிய பரம்பரன்" என்னும் சிவஞான சித்தியாரும், "பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத் தாலும் ஈசனை யுணர ஒண்ணாது" என்னும் சிவப் பிரகாசமும் இப்பொருளை வலியுறுத்தும்.

"உணர்ந்தார்க்கு உணர்வரியோன்" என்னும் திருச் சிற்றம்பலக் கோவையார் (8) செய்யுளில், 'ஒரு கால் தன்னை உணர்ந்தார்க்குப் பின் உணர்தற்குக் கருவி யாகிய சித்த விருத்தியும் ஒடுங்குதலின் மீட்டு உணர் தற்கு அரியவன்' எனவும், 'தவத்தாலும் தியானத் தாலும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் உணர்வரியவன்' எனவும் பேராசிரியர் செய்திருக்கும் விளக்கமும், ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்குரியது.

இங்ஙனம் உயிர்களெல்லாம் எண்ணிறந்த பல பிறவிகளாற் படிமுறையே எய்துதற்குரிய இவ்வகை ஞானங்களையெல்லாம், இடையீடின்றி ஆளுடைய பிள்ளையார் ஒருங்கே பெற்றனராதலின் 'அந்நிலையில்' எனவும்; இவற்றைப் பெறுதற்குரிய நிலையில் எண்ணில்லாத பல பெருந்தவங்கள் செய்து இருந்தமை யின் 'தவமுதல்வர்' எனவும், ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தனர்.

முடிவுரை :

"எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை யுணர்த்திக்கொண்டு செல்லவல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவா யினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டேயிருக்கும். கவிஞன் கருதியதும் கூறியதும் ஒரு கருத்தேயாயினும், அக்கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறுபல இயைபுடைய நற்கருத்துக்களையும் தன்கண் பொலியத் தோற்றுவித்துக் கொண்டு திகழும்" எனப் பேராசிரியர் ஒருவர் (A. C. Bradley) கூறுவர் (3). அதற்கு நாம் மேலே கண்ட சிறந்த பெரியபுராணச் செய்யுள் ஓர் இனிய எடுத்துக்காட்டாகும்.

'ஒரு சிறந்த உயர்ந்த கவிதையினை, நாம் எத்தனை முறைதான் திரும்பத் திரும்பப் படித்தாலும் பாடினாலும், அதன் சுவை ஒரு சிறிதும் குன்றாமல் ஓங்கித் திகழும்' (4) என அறிஞர் ஒருவர் (Robert Frost) இயம்புவர். அவ்விலக்கணத்திற்கும் தெய்வ நலம் செறிந்த சேக்கிழார் சுவாமிகளின் மேலைச் செய்யுள் செவ்விய நல்ல எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை. எனவே இத்தகைய தெய்வநலம் சான்ற சிறந்த செய்யுட்களை ஓதி, நாம் அனைவரும் இன்புற்று நலம் பெறுவோமாக.

—ஆசிரியர்.

---

(3) "The proof of the purest poetry is that its meaning is inexhaustible...About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion, The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it"

**—Professor A. C. Bradley,**
Oxford Lectures on Poetry.

(4) "Read it a hundred times; it will forever keep its freshness as a petal keeps its fragrance..."
**—Robert Frost.**

—:x:—

## பொறுத்தருள்க !

"திருக்கோயில்" திங்கள் இதழ் பதிப்பிக்கப்பெறும் அச்சகத்தில் வேலைப் பொறுப்புகள் மிகுதியாக, இருப்பதன் காரணமாக; அக்டோபர், நவம்பர், டிசம்பர் 76, ஜனவரி 77 இதழ்கள் வெளிவருவதில், தவிர்க்க முடியாத நிலையில் தாமதம் நேர்ந்து விட்டது. இனிமேல் கூடிய வரையில், இதழ்கள் உரியகாலத்தில் வெளிவர, நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதலின், அன்பர்கள் இக்காலதாமதத்தைப் பொறுத்தருளும் படிப் பெரிதும் அன்புடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

—ஆசிரியர்

# உறக்கத்தில் விளைந்த உளமாற்றம்

டாக்டர் திரு. தெ. பொ. மீனட்சி சுந்தரனர்.

கடவுள் உலகைப் படைத்தாராம். ஆனல், அவ்வுலகம் நமக்கு நன்ருக விளங்கவில்லை. எங்கிருந்து வந்தோம். ஏன் வந்தோம்? எங்கே போகிரேம்? எப்படி வாழ வேண்டும்? ஏன் வாழவேண்டும்? இதற்கெல்லாம் முடிவென்ன? பலப்பல விடைகள் வருகின்றன. என்ருலும் முழுவதும் விளங்கியபாடில்லை.

இப்படி விளக்கம் தருவோர்களில் பாவாணர்கள் ஒரு வகையில் சிறந்து விளங்குகிருர்கள். இவையெல்லாம் தாமாகவே விளங்கக்கூடிய வகையில் ஒவ்வோர் உலகத்தைப் படைக்கின்ருர்கள். ஒவ்வொரு கோணத்திலிருந்து கண்டு, அவர்கள் படைக்கிருர்கள். அங்கே நல்லவர்களும் வருகிருர்கள். கெட்டவர்களும் வருகிருர்கள். "ஏன் ஒருவன் கெடுகிருன்; எப்படி ஒருவன் நல்லவனய், உலகை முன்னேறச் செய்து வாழ்விக்கின்ருன்'' என்ற நுட்பங்களெல்லாம் விளங்குகின்றன; ஆனல் அறிவாராய்ச்சி வகையால் அல்ல. அவர்கள் கூறப்போகும் மக்கள் வாழ்க்கையை நாம் காணும்பொழுது நம்முடைய நெஞ்சம், அதில் ஈடுபட்ட நம்முடைய ஈர நெஞ்சம், உணர்ச்சியோடு அந்த உண்மையை உணர்ந்து, அனுபவித்து, அந்த உண்மை வடிவாகவே ஆகிவிடுகிறது. நம் வாழ்விலும் அவ்வுலகில் வருவது போன்ற நிலைகள் ஏற்படுமானல், அதற்கேற்றபடி ஈடு கொடுக்கும் திறமை வளர்கிறது.

தன் காவிய உலகில் பாவாணன் படைக்கின்றவர்கள் எல்லோரும் அவன் அங்குப் பெற்ற பிள்ளைகளே. நல்லவர்களும் அவன் பிள்ளைகளே, கெட்டவர்களும் அவன் அரிதிற்பெற்ற பிள்ளைகளே. எல்லோரும் உண்மையின் விளக்கங்களே! முழுதும் கொடியவர் என எவரும் இருக்க முடியாது. வாழ்வின் போக்கில் சிலச்சிலபோது மயங்கி, சுற்றுப்புறச் சூழலும், வாய்ப்பும் வருவனவற்றில் தம்மை மறந்து, அவற்றிற்கு அடிமையாகிற மனித நிலையை அரக்கர் வரலாருகவும், பிற வகையாகவும் கூறுகின்ற போக்கும் உண்டு. ஆனல் எல்லாம் நம்மைப் பற்றியும், நம் ஒவ்வொருவரிடமும் அப்பொழுது அப்பொழுது எழும் வாழ்க்கை நிலையையும், போராட்டங்களையும் பற்றியுந்தான் கவிஞன் பாடுகிருன் என்பதை, நாம் மறக்கக்கூடாது.

கம்பன் பல உலகைப் படைத்து மோத விடுகிருன் அரசுகளும் அங்கே பல வகை. சிறப்பாக இரண்டு வகை என்று கூறலாம். தன்னலமின்றிப் பிறர் வாழ வகை செய்து அவர்கள் உயிராகவும், தான் உடம்பாகவும இருந்து எல்லா இன்பங்களும் பிறர் துய்ப்பதற்கு வாய்ப்பாக-கருவியாக அமைந்து கிடப்பது ஒரு வகை அரசு. இங்கே தாழ்ந்தோரும் உயர்ந்து வருவதால் உலகமே அன்புக் குடும்பமாக ஓங்கி விளங்குகிறது. மற்ருென்ரே, தன்னலத்தால் ஓங்குவது. ஆனல், தம்மவர்களை மற்றவர்களிலிருந்து பிரித்து, அவர்கள் மட்டும் வாழ வகை செய்வது ஆகும். முடிவில் அவர்களைத் தனக்காகப் பலியிடத் தயங்குவதுமில்லை. இங்கே ஒருவன்; எவ்வளவு ஆற்றல் பெற்றிருந்தாலும் அந்த அரசு இயந்திரத்தின் ஒரு சக்கரமாகவே அமைந்துவிடவேண்டும். முதல் உலகில் குரங்கும் கடவுளாக என்றென்றும் வாழ்ந்து உலகை உய்விக்கும் வகையில் உயரும் போது, இந்த இரண்டாம் உலகில் படைப்புக் கடவுளும் தாழ்ந்து அடிமையாகி விடுகிருன். இங்கே சுரண்டல் கொள்கையால் உயர்கின்ற அரசையே காண்கின்ருேம்.

கம்பன், முதல் உலகின் சிறப்பாக, உயிர் நிலையாகக் காட்டுவது ஒன்று உண்டு. அன்பு உலகம் அரும்பு விடுவது இல்லறத்தின் தூய்மையில். அந்தத் தூய்மையே ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்வது என்று கம்பன் காண்கிருன். அதனை இராமன் சீதையோடு வாழ்கின்ற வாழ்வில் நாம் காண்கிருேம். தசரதனின் பல மனைவியர் உலகில் பிறந்து இப்படி இராமன் வாழ்கின்ருன். இந்தத் தூய்மையில் பழகியதால் முதற்படியாகப் பிறர் மனை நயக்கின்ற அறக் கேட்டை, அன்புக் கொலையை, இல்லறச் சிதைவினைப் பெரும் கொடுமையாக இராமன் கண்கொண்டு கம்பன் நமக்குக் காட்டுகிருன்.

இராவணன் செய்த கேட்டிற்கெல்லாம் முடிமணியாக விளங்குவது இந்தக் கொடுமையாகும். வாலி சிறந்தவனக இருந்தும் அழிவது இந்தக் கொடுமையைச் செய்ததனலேயாகும்.

அரக்கர் உலகம் இதுபற்றி என்ன எண்ணுகிறது? அரக்கர் உலகமும், முடிவில் அறவாணனகிய விபீடணன் வழியே அற உலகமாக மாறுகிறது. இந்த

மாற்றத்தை நாம் காணவேண்டும். இல்லற வாழ்க்கையில் உயர்நிலையை, பிறர் மனை நோக்காப் பேராண்மையை, முதியவனுன மாலியவான் உணர்கிருன். ஆனல் இராமன் கையில் பட்டபாட்டால் எழுந்த பட்டறிவு இது. இந்திரசித்தும் முடிவில் இந்த உண்மையை இராவணனிடத்தில் கூறுகிருன். ஆனல் கும்பகருணனே அப்படி இராமனிடம் அடிபடுவதற்கு முன்பே உணர்ந்து, அந்த உணர்வே உருவாகி, துடிதுடித்து, அரக்கர் குலமும், தன் அண்ணனும் வாழ வழி கூறுகின்ருன். படிப்படியாக அந்த உணர்வு எழுகின்ற போக்கினை மனித உளப்பாங்கிற்கு ஏற்பக் கம்பன் உணர்த்துவதோ இன்றைய உள்ளத்து இயற்கையை ஆயும் உளவியல் அறிஞர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கும் உண்மையோடு ஒத்திருப்பது வியப்புக்குரியது. கும்பகருணனை இராமாயணத்திலிருந்து எடுத்து விட்டாலும் ஒன்றும் கெடுவதில்லை போலத் தோன்றலாம். ஆனல் நாம் சுட்டிய வளர்ச்சியை மனத்தில் கொண்டால் இராவண உலகமே, விபீடண உலகமாக மாறியதைக் காட்டும் வகையில் உயிர்நிலையாக அமைவதைக் காணலாம். அதுமட்டுமல்ல. ஜய-விஜயர் வைகுந்தத்தின் வாயில் காவலர்களாக இருந்தபோது, உள்ளே ஒருவரையும் விடுதலாகாதென்று திருமால் கட்டளையிட்டிருந்தும், துர்வாசர் வந்தபோது அவருடைய சாபத்திற்கு அஞ்சி அவரை உள்ளே விட்டுவிட்டார்கள். அப்போது திருமால் இந்தக் கீழ்ப்படியாமைக்குத் தண்டனையாக நல்லவர்களாக நூறு பிறப்புப் பிறந்து பின் இங்கு வருகிறீர்களா? கொடியவர்களாக மூன்று பிறப்பே பிறந்து இங்கே வருகிறீர்களா? என்று கேட்டபோது, நீண்டகாலம் வைகுந்தத்தைப் பிரிய மனமின்றிக் கொடியவர்களாக இருந்தாலும் மூன்று பிறப்பில் விரைந்து வந்துவிடவே விரும்பினர்களாம். அதன்படி முதல் பிறப்பாக இரணியாக்கன், இரணியன் எனவும், இரண்டாவதாக கும்பகருணன், இராவணன் எனவும், மூன்ருவது பிறப்பாக கம்சன், சிசுபாலன் என்றும் வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. எனவே இராம இலக்குமனர் இணைந்துவருவது போல இராவண கும்பகருணனும் இணைந்து வருவதாகக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால் கும்பகருணன் இராவணியத்தில் இன்றியமையாதவனுவான்.

முதல் போரில் இராவணன் தோற்றுப்போய் மனம் கலங்கி நிற்கிருன். இராவணன் உலகையெல்லாம் வென்றபோது பெரிதும் துணை நின்றவன் கும்பகருணன். ஆனல் அவன் தூங்கியே வாணளைக் கழித்ததால், அவன் இருப்பதையே மறந்துவிடும் நிலைமை உருவாகியது. அந்த இடுக்கண் நிறைந்த நிலையில் மகோதரன் நினைவூட்டுகின்ருன் இராவணனுக்கு :

"புல் நுனைப் பனிநீர் அன்ன மனிசரைப்
பொருள் என்று உன்னி,
என், உனக்கு இளைய
கும்பகருணனை இகழ்ந்தது?"

என்று நினைவூட்டுகின்ருன். இராவணனும்,

"உறுதியே சொன்னய்" என்று அவனைப் புகழ்ந்து, தன் தோல்வி மனப்பான்மையை எல்லாம் மறந்து கும்பகருணனல் வெற்றியே வந்துவிட்டது போல "உள்ளமும் வேறுபட்டான்".

கம்பன் காலத்தில் சாங்கியக் கொள்கை பரவி இருந்தது. அது எல்லா மதங்களிலும் ஊடுருவி நின்றது. என்ன கொள்கை அது? உலகம் மூன்று குணங்களால் ஆகியது. தாமதம் வெறும் சடப் பொருள் ; தன் செயலற்றுக் கிடப்பது. இராசதம் ஒரு துடிப்பு, ஆற்றல் வடிவமானது. ஒரு கொந்தளிப்பு. சத்துவம் இயக்க வடிவானது வெறும் பொருண்மை (தாமசம்) ஆற்றலாய் (இராசதம்) மாறும் ; பின் இயக்கமாகச் (சத்துவம்) செல்லும். இந்த இயக்கத்தில் ஒரு நோக்கும் கலந்தபோது உயிர் என்ற காட்சி தோன்றுகிறது. சத்துவத்தில் பிரகிருதியினும் வேருன சித்து விளங்கும். அப்பொழுது உலகமெங்கும் இந்த மூன்றின் திருவிளையாடல்தான். எப்பொருளிலும் இந்த மூன்று நிலையையும் காணலாம். ஆனல் இவற்றில் ஏதாவது ஒன்றுதான் மேலோங்கி நிற்கும். தாமசம் இராசதமாக மாறி, பின் சத்துவமாய் உயர்ந்து, சிற்குணத்தின் விளக்கம் பெற்று ஓங்குவது ஒரு பெரிய வரலாறு. அந்த வரலாற்றின் முடிவுதான் இராமன்.

இராமனுக்கு எதிர்த் தட்டில் உள்ள அரக்கர் உலகிலே விபீடணன் சத்துவ குணத்தின் விளக்கமாக அமைகிருன். அரக்கர்களது அடிமை நீங்க இராவணன் தன் இளமையில் போரிட்டு வென்றபோது விபீடணன் அவனைத் தடுக்கவில்லை. ஆனல் சீதையை வஞ்சனையால் கொண்டுவந்தபின் அனுமன் இலங்கையை எரித்தபோது வருந்தி நின்ற இராவணனுக்கு அவன், சீதையை இராமனிடம் விட்டுவிட்டு, இராமனைப் போற்ற வேண்டும் என்று வற்புறுத்துகிருன்.

இராவணன் அவனைக் கொல்லவரும்போது, அவன் இராமனிடம் சரணடைகிருன். சிரஞ்சீவி ஆகின்ருன். இப்படி அரக்கர் உலகில் சத்துவகுணம் சிற்குணமாக நிலைபெறெய்துகிறது.

இராவணனே இராட்சத குண வடிவினன். வெற்றித் துடிப்பே அவனுடைய முன்னைய கோலம். பின், இராமனிடம் முதற் போரில் தோற்று உணர்வு சிறிது பெறுகின்ருன். அப்போதும் சீதையின் நினைவே ஓங்குகிறது.

"வேய் எனத் தகைய தோழி
இராகவன் மேனி நோக்கி,
தீ எனக் கொடிய வீரச் 'சேவகச்
செய்கை கண்டால்,
நாய் எனத் தகுதும் அன்றே,
காமனும் நாமும் எல்லாம் ,"

" நாசம் வந்து உற்ற போதும்,
நல்லது ஓர் பகையைப் பெற்றேன் ; -
பூசல வண்டு உறையும் தாராய் ; -
இது இங்குப் புகுந்தது "

என்று மாலியவானிடம் கூறுகின்ருன். ஆனல் மகோதரனே, வென்றவர் தோற்பவர் ; தோற்ருேர்

வெல்குவர் ; இது புதுமையல்ல ; " தேவியை விடுதி ஆயின், திறல் அது தீரும் அன்றே"; "என், உனக்கு இளைய கும்பகருணனை இகழ்ந்தது?" என்ருன். உடனே இராவணன் நிலை குலைந்த நிலைமை மாறி, கும்பகருணனைப் போருக்கு அனுப்புகிருன். முடிவிலே, போரில் இராவணன், இராமனைக் கண்டு, "இவனே தான் அவ் வேத முதற் காரணன்" என்ற உண்மையை உணர்கின்ருன். ஆனல் மானமே மேலோங்குகிறது. "யாரேனும் தான் ஆகுக; யான் என் தனி ஆண்மை பேரேன்' எனத் தன் முடிவைக் கருதிச் சென்று மடிகின்ருன்.

இனித் தாமச குணம் படும் பாடு என்ன? நாம் முன் கூறியதுபோல எவனுக்கும் தாமச குணம் மட்டும் தனித்து இருப்பதில்லை. அது மேலோங்கி நின்ருலும், மற்றைய இரண்டு குணங்களும் அங்கே இருக்கவே இருக்கின்றன. ஆனல் உள்ளடங்கிக் கிடக்கின்றன. நெருஞ்சிமுள் மூன்ருக இருப்பது, இரண்டு முள் கீழேயும் ஒரு முள் மேலேயும் இருப்பது போல் என்று எடுத்துக் காட்டுத் தருவது வழக்கம். எனவே கும்பகருணனும் ஆறறிவுடையவன் ஆதலால் மூன்று குணங்களுக்கும் ஆட்பட்டவனே ஆம். இராவணன், இந்திரசித்து முதலியவர்கள் போல அவன் அறிவின் கூர்மையால் மாயப் போர் தொடுக்க அறியான். நேருக்குநேர் தன் உடலின் வலிமையாலேயே எல்லோரையும் வென்றுவந்தான். Inertia என்று சொல்லுவது, 'வெறும்' எனக் கிடப்பது மட்டுமல்ல. இயங்கினல் இயங்கிக் கொண்டே கிடக்கும், நின்று விட்டால் நின்றே கிடக்கும். கும்பகருணன் இயங்கினலோ எதிரே நிற்பவர்களெல்லாம் நிற்பனவெல்லாம், தவிடு பொடிதான். இராவணன் அண்டங்களை வென்று வந்தபோது கும்பகருணன் தன் அண்ணன் இயக்க அவன் தலைமையில் எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, வெற்றிபெற்று வந்தான். ஆனல் வெற்றியெல்லாம் பெற்ற பின், மேலும் வெற்றிக்கு இடமில்லாதபோது தூங்கியே கிடக்கிருன். அந்தத் தூக்கத்தின் ஆழ்ந்த நிலையை, தாமசத்தின் உண்மை உருவை, ஓரளவுக்கு-உயர்வு நவிற்சி போலக்கூடத் தோன்றும் வகையில் கம்பன் கூறினலும், தாமசத்தின் ஆற்றலை மிக விளக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிருன். வெறும் சடப்பொருள், மாமிச பிண்டம் எல்லாம் ஒருங்கு திரண்டு உயிர்ப்பது போலத்தான் உள்ளது அந்தக் காட்சி. தூக்கத்தின் மேலான இயல்பும் தமக்கு விளங்குகிறது. அந்தத் தூக்கத்தை யாரறிவார். கும்பகருணன் கம்பன் பெற்ற பிள்ளை. ஆதலின் அவன் அறிவான். கும்பகருணனைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதே பெரிய உலகர் போல நடைபெறுகிறது. எந்த ஒலி கேட்டும் அவன் எழவில்லை. குதிரைகளை மேலே செலுத்தினலும் எழவில்லை. பின், இராவணன் கட்டளைப்படி அவனைப் பலர் தூக்குகின்றனர். ஆயிரம் அரக்கர்கள் நின்று, இரண்டு கதுப்பும் உற, நெடு முசலம் கொண்டு அடிப்ப, பொன்றினவன் எழுந்தாற் போல், புடை பெயர்ந்து அங்கு எழுந்திருந்தான். அவனுடைய தாமச நிலைக்குப் "பொன்றினவன்" என்ற உவமை தருகின்ருன் கம்பன். முன் அவனிடம் தோற்ருேர், அவன் எழுந்தது கண்டு நடுங்குகிருர்கள்.

(தொடரும்)



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் கருணையில்ல மாணவர்களுக்கு, திருமதி. சௌந்தர கைலாசம் அம்மையார் அவர்கள் சீருடை வழங்குதல் (9-10-76)

# அம்பிகையின் அழகு வெள்ளம்

(41) அம்பொன் முடிமேல் இந்துகலை :

அம்பிகை அழகிய பொன்முடி அணிந்திருக்கின்ருள். அம்முடியில் ஆதித்தர் பன்னிருவரும், ஒளிமிக்க மணிகளாக அமைந்து விளங்குகின்றனர். அதனுல் அவர்களின் பலவகை நிறங்கள், அம்பிகையின் பொன்முடியிற் பிரதிபலித்துப் பல நிறமணிகள் பதிந்து ஒளிவீசுதல் போல விளங்குகின்றன. அத்தகைய முடியின் மேல் அம்பிகை, தன் கணவராகிய சிவபெருமானைப் போல், இளம்பிறைச் சந்திரனைச் சூடி இருக்கின்ருள். வெண்ணிறப் பளிங்குபோன்ற அவ்விளம்பிறைச் சந்திரன், அம்பிகையின் திருமுடியில் பல நிற மணிகளைப் போலப் பதிந்துள்ள சூரியர்களின் ஒளிகளைப் பிரதிபலித்து, வியக்கத்தக்க பலநிற வடிவுடன் விளங்குகின்றது. அதுகண்ட சிலர், அம்பிகையின் திருமுடியில் உள்ள சந்திரன், இப் பல நிற ஒளிகளால் அழகு பெற்றுத் திகழ்தல், மிகமிக நன்ருக உள்ளது என்று வியக்கின்றனர். வேறுசிலர், இது சந்திர கலையன்று. சந்திர கலையாயின், வெண்மை நிறம் ஒன்று மட்டுமே உடையதாக இருக்கும். இதன்கண் பலநிற வண்ணங்கள் விதவிதமாகத் தோன்றுகின்றன. ஆதலின் இது சந்திர கலையன்று. இது, வெவ்வேறு பல நிறங்களையுடைய வானவில் ஆகிய இந்திர சிலையேயாகும் என்று சொல்கின்றனர். இரண்டும் ஒவ்வொரு வகையில் பொருத்தமாகவே உள்ளது.

அந்தர மணித்தபனர் பலமணியின் வடிவெடுத்து
அமரும்உனது அம்பொன் முடிமேல்
இந்துகலை நவமணியின் ஒழுகுபல நிறம்அடைந்து
இலகும்அதி சய வடிவினுல்,
சந்த்ரகலை நன்றுநன்று என்பர்சிலர், அன்றுஅன்று
சந்த்ரகலை இந்த நிறமோ?
இந்த்ரசிலை இந்த்ரசிலை என்பர்சிலர், ஆதலால்
யாதுஎன வழுத்த உமையே !

உமையம்மையே! வானத்தின்கண் உள்ள சூரியர் பன்னிருவரும், பல நிறங்களையுடைய மணிகளைப்போல அழகுற விளங்குகின்றனர். உனது அழகிய பொன்முடியின்மேல் இருக்கின்ற வெண்ணிறமுடைய இளம் பிறையானது, அந்தச் சூரியர் பன்னிருவரின் பல நிறங்களையும் பிரதிபலித்து, வெவ்வேறு நிறங்களுடையதாகத் திகழ்கின்றது. அதுகண்டு சிலர், அம்பிகையின் திருமுடியின்மேல் உள்ள சந்திர கலையானது, இவ்வாறு பல நிறங்களைப் பெற்றிருப்பது, நன்று நன்று என்பர். மற்றும் சிலர், அன்று அன்று. சந்திரகலை வெண்ணிறம் ஒன்றேயுடையது. இங்ஙனம் அது பல நிறங்களைப் பெற்றிருப்பது இல்லை. ஆதலின் இது சந்திரகலையன்று. பல நிறங்களைக் கொண்டிருத்தலால், இது வானவில் ஆகிய இந்திர சிலையேயாகும் என்று சொல்லுவர். ஆதலால், நின் திருமுடியின் மேலுள்ளதனைச் சந்திரகலை என்பதோ? இந்திர சிலை என்பதோ? இவ்விரண்டினுள் யாதென்று சொல்லிப் புகழ்வேன்? அந்தரம்-ஆகாயம். தபனர்-ஆதித்தர், சூரியர். இந்து-சந்திரன். வழுத்துவேன் என்னும் தன்மை ஒருமை வினைமுற்று, வழுத்த என்னும் செயவென் எச்சமாக வந்தது. நவமணியின்-ஒன்பதுவகை மணிகளைப் போல; இன்-உவமைப்பொருளில் வந்தது. சூரியர் பன்னிருவரும் பன்னிருவகை நிறமுடைய மணிகள் போல, அம்பிகையின் பொன்முடியில் அமைந்து விளங்குகின்றனர். ஆயினும் இங்கு "நவமணி" என்றது, உலகு வழக்குப்பற்றி ஆகும். வெண்ணிறமுடைய இளம்பிறைச் சந்திரனே பல நிறங்களைக் கொண்டு வியப்புற விளங்குதல் திரிபு அதிசயம். சந்திர கலையா, அன்றி இந்திர சிலையா எனத் துணியவியலாமை, ஐய அதிசயம். இதனுல், அம்பிகையின் திருமுடிச் சிறப்பு, புகழப் பெற்றது.

(42) மனத்திருளின் செறிவுதெற அருள்க :

அம்பிகையின் கூந்தல் அடர்ந்து, கடைகுழன்று, நெய்த்து, இருண்டு, கருநெய்தல் மலர்க்காடு என்று சொல்லும்படி, விளங்குகின்றது. அதன்கண் இயற்கை நறுமணம் நிறைந்து, எண் திசைகளிலும் பரவுகின்றது. அவ்வியற்கை மணம் தேவருலகளவும்கூடச் சென்று பரவி நிற்கின்றது. தேவேந்திரனுக்குரிய கற்பகச் சோலையும் கூட, தனது பொன்னிறப் பூங்கொத்துக்களின் இதழ்கள், அந் நறுமணத்தில் மூழ்கிப் படிதல் வேண்டும், என்று விரும்புகின்றது. அக் கற்பக மலர்களின் தேனை உண்ணுகின்ற வண்டுகள், புதிது பரவும் இயற்கை நறுமணத்தை வியந்து, அக் கற்பகச் சோலையின் மலர்களைப் புறக்கணித்துவிட்டு நீங்கிப் பறந்து சென்று, அம்பிகையின் ஒப்பற்ற கூந்தலில் வந்து படிகின்றன. அத்தகைய அம்பிகையின் சிறந்த அடர்ந்த கூந்தல், என் மனத்திலுள்ள இருளின் செறிவை நீக்கியருள்வதாக!

ந.ரா.முருகவேள், எம்.ஓ.எல்.

அலர்ந்தகரு நெய்தலங் காடெனக் கடைகுழன்று
அறநெய்த்து இருண்டு செறிவோடு
இலங்குறும் இயற்கைமணம் எண்திசை அளப்ப
அதில் இதழ்மூழ்கும் நறை விழைவினல்
பொலன்கொள்முடி ஆகண்ட லேசர்பொற்
றுணர்விரி பொதும்பர் மதுமலர் படிவதோர்
சிலம்பளி பரந்தஉனது ஓதி என்மனத்திருட்
செறிவுதெற அருள் கமலேயே !

அம்பிகையின் அடர்ந்த கூந்தலின் அழகை "அலர்ந்த கருநெய்தலங்காடு" என்று சிறப்பித்தார். கூந்தலுக்குச் சிறப்பு, கடை குழன்றிருத்தல், நெய் தடவப் பெற்றுப் பளப்பளப்பாக இருத்தல், இருள் போலக் கருமைநிறம் மிகுந்திருத்தல், அடர்ந்து வளர்ந் திருத்தல் என்பனவாகும். ஆதலின் "கடைகுழன்று, அறநெய்த்து, இருண்டு, செறிவோடு இலங்குறும்" என்ருர். கற்புடை மகளிரின் கூந்தலில், இயற்கை மணம் வீசும் என்பது, நக்கீரர்க்கு இறைவன் அறி வுறுத்திய வரலாற்ருல் தெளியப்படும். அம்பிகையி னுடைய கூந்தலின் இயற்கை மணத்தைக் கற்பகச் சோலையின் மலர்களும் கூடப் பெற விரும்பின; கற்பக மலர்களில் படியும வண்டுகளும், அம் மலர்களின் மணத்தை இகழ்ந்து, இயற்கை மணம் வீசும் அம்பிகை யின் கூந்தலைத் தேடி வந்து அடைந்தன என்று ஆசிரியர், அம்பிகையின் கூந்தற் சிறப்பைப் புகழ்ந் துரைத்தார். அலர்ந்த-நன்ருக மலர்ந்திருக்கின்ற. நறை-மணம், தேன். விழைவு-விருப்பம். பொலன் கொள்முடி-பொன்னுல் அமைந்த சிறந்த மகுடம். ஆகண்டலேசர்-தேவேந்திரன். பொற்றுணர் விரி பொதும்பர்-பொன்னிறம் அமைந்த பூங்கொத்துக்கள் மலர்கின்ற கற்பக மரச்சோலை. பொதும்பர்-சோலை. சிலம்புதல்-ஆரவாரித்தல், ரீங்காரம் செய்தல். அளி-வண்டுகள். ஓதி-கூந்தல். "அம்பிகையே! நின் கூந்த லின் இருளால், என் மன இருளாகிய அறியாமையைப் போக்கி அருள்க" என்பது இப்பாடலின் கருத்து. இப் பாடலால் அம்பிகையின் கூந்தற்சிறப்பு புகழப் பெற்றது.

(43) சிந்தூரரேகை வளம்:

அம்பிகையின் கூந்தல் வகிர்ந்து புனையப்பட்டுள் ளது. அது பின்னலாகப் பிணைந்து விளங்குகின்றது. நீண்டு வளர்ந்து முதுகில் விழ்கின்றது. அதன்நடுவே நெடியதாகப் பிரபை எழுதப்பெற்றுள்ளது. அத் தோற்றம் ஒளிமிக்க சூரியனைக் கண்டு அஞ்சி, உலகி லுள்ள இருளெல்லாம் திரண்டு, நடுவே இருபுறமாக ஒதுங்கிய தன்மைபோல் உள்ளது. அதுமட்டுமேயன்றி, அம்பிகையின் ஒளிபொருந்திய முகமாகிய குளத்தில், அழகு என்னும் நீர்நிரம்பிய, அம்முகமாகிய குளம் கொள்ளாமல், மிகுதியுற்று வழிந்து கழிவதற்காக விடப்பட்ட கலிங்கம் (மதகு) போலத் திகழ்கின்றது. இங்ஙனம் காணப்படும் பிரபையைச் சிந்தூர ரேகை யின் வளமென்று பிறர் கூறுகின்றனர். அதுவும் பொருந்து மாயினும், அஃது ஒன்று மட்டுந்தான் பொருந்தும் என்பது, உலக உயிர்களுக்கெல்லாம் மாதாவாகிய அம்பிகையே! என் உள்ளத்திற்குச் சரியாகத் தோன்றவில்லை.

"மோதிய வெங்கதிர் மீள வெருண்டுஇருண்டு,
மூட ஒதுங்கிய வாறேயோ?
சோதிமுகம் கவின் ஏறி வழிந்தன
சோர விடும்கவர் காலேயோ?
ஓதி பிணைந்து பின்வீழ வகிர்ந்து அதன்
ஊடுஎழுதும் ப்ரபை யாதேயோ?
கோதறு சிந்துர ரேகை வளம்பிறர்
கூறுவது அன்று இது; மாதாவே !

அம்பிகையின் கூந்தல் வகிர் எடுத்து இருகூருகப் பிரிந்து விளங்குகின்றது. அத்தன்மை, சூரியனுக்கு அஞ்சி ஓடிய இருளெல்லாம், அவன் மீண்டுசென்ற பிறகு, இருபுறமும் வந்து மூட அஞ்சி, நடுவே ஒதுங்கிய வாறு போல் உள்ளது. அதுமட்டுமன்றி, அம்பிகையின் முகமாகிய குளத்தில், அழகு என்னும் நீர் நிரம்பி மிகுதியுற்று விளங்குவதனுல், அவ்வழகு வெள்ளம் வழிந்து கழிந்து போவதற்காக அமைக்கப்பெற்ற, மதகு ஆகிய கலிங்கு போல, அவ்வகிர்க்கோடு அமைந்து விளங்குகின்றது. பெண்கள் தம் கூந்தலை வகிர்ந்து முடித்து, அவ்வகிரின் நடுவே சிந்தூரம் என் னும் குங்குமத்தை அணிந்து கொள்வர். அவ்வகிரின் நடுவே எழுதப் பெறும் பிரபை, அச்சிந்தூர ரேகை யின் வளம் என்று சொல்லும்படி, சிறந்து திகழ் கின்றது என்பது கருத்து. வெங்கதிர்—சூரியன். வெருண்டு-அஞ்சி. கவின்--அழகு. சோர--வழிந்து செல்ல. கவர்கால்--கலிங்கு, மதகு. ஓதி--கூந்தல். கோது--குற்றம். சிந்தூரம் என்னும் சொல் சிந்துரம் என வந்தது. மாதா--தாய். ஓகாரங்கள் வினப் பொருளில் வந்தன. அம்பிகையின் கூந்தல் வகிரின் சிறப்பை, இருள் ஒதுங்கியவாருே? அல்லது முகமாகிய குளத்தில் நிரம்பி வழியும் அழகு வெள்ளம் வழிந்து செல்ல விடும் கலிங்கோ? என்று வினவியது, ஐய அதிசயம் என்னும் அணி. "வகிரினூடு எழுதும் பிரபை சிந்துர ரேகை மட்டுமன்று" என்றது அவநுதி என்னும் அணியாகும். அவநுதி—மறுத்தல். அம்பிகை யின் அழகினை முடி முதல் அடிவரை (கேசாதிபாத) வருணனையாகப் பாடத் தொடங்கி, இம்மூன்று பாடல் களால், அம்பிகையின் கூந்தல் (கேசம்), புகழ்ந்து புனைந்துரைக்கப்பெற்றது.

(44) அருண முக கமலம் :

அம்பிகையின் முகம், தாமரை மலரைப்போல அழகுற்றுத் திகழ்கின்றது. தாமரைமலர் இதழ்கள் பொருந்தியிருக்கும்; வண்டுகள் படியப்பெறும்; நறு மணம் கமழும்; முகைகள் அவிழும்; சிவந்த நிறம் பெற்று விளங்கும். அம்பிகையின் கூரிய எயிறுகள், அகவிதழ்களாக அமைந்துள்ளன. சிவபெருமானின் கண்களாகிய வண்டுகள் படியப் பெறுகின்றன. மேலும் அம்பிகையின் கூந்தல் வண்டுகளால் மொய்க்கப் பெற்றுள்ளது. அம்பிகையின் திருமுகத்திலும், அழகிய திரு வாயின் இதழ்களிலும், நறுமணம் கமழ்கின்றது. அம்பிகையின் முகத்தில் அருட் புன்முறுவல் தவழ்வது

தாமரை மலரின் அரும்பாகிய முகை. மெல்லென அவிழ்ந்து மலர்வதுபோல உள்ளது. தாமரை மலரைப் போல அம்பிகையின் முகம் சிவந்த நிறம் பெற்று அழ குற்று விளங்குகின்றது. இத்தன்மைகளால் அம்பிகை யின் முகம், தாமரைமலரை ஒரு வகையில் ஒத்துள்ளது. எனினும், அம்பிகையின் முகத்திற்குத் தாமரைமலர் ஒரு சிறிதும் நிகராகாது. ஏன்எனில், தாமரைமலரின் இதழ்கள் வாடும். அம்பிகையின் இதழ்கள் ஒரு போதும்வாடாமல், மேன்மேலும் அழகுற்றுப் பொலிந்து திகழும். தாமரை மலரில்படிவன, புள்ளி களை உடைய கருநிற வண்டுகளே. ஆனல் அம்பிகை யின் கூந்தலிற் படிவன, சிறப்புமிக்க பொன்னந் தும் பிகள். அம்பிகையின் அழகை இடைவிடாது கண்டு களித்துப் படிவன, சிவபிரானின் கண்களாகிய வண்டு கள். அன்றியும் தாமரை மலரில் கமழும் மணம், சிறிது பொழுதிருந்து கழியும் செயற்கை மணமாகும். ஆனல் அம்பிகையோ என்றும் மாருது ஓங்கும் இயற்கை மணமுடையவள். தாமரைமலர், போது ஆகியே விரியும். ஆனல் அம்பிகையின் முகமாகிய தாமரை, இயல்பாக மலர்ந்து, எப்போதும் அழகுற்று விளங்கும். தாமரை மலர், பங்கமுறும் (சேற்றில் பிறக்கும்). பங்கம்-சேறு. அம்பிகையின் முகம் என்றும் பங்கம் (குறைபாடு) உருது. இத்தகைய பலவேறுபாடு களால், தாமரைமலர் ஒருசிறிதும் அம்பிகையின் முகத் திற்கு ஒப்புடையதாகாது என்பது கருத்து.

''கூர் எயிற்றின் அகஇதழும், கொண்கர்விழி
வரிவண்டும்,
குழற்படிந்த மதுகரத்தின் குழாமும் கூடிப்
பேரியற்கை மணம்பொதிந்து புன்மூரல் முகையவிழப்
பிறழும்உனது அருணமுக கமலம் என்ருல்,
ஓரியற்கை வாடும்இதழ் பொறிவண்டே படிவது,மற்று
ஓரியற்கை செயற்கைமணம் கோதுசெய்யும்
நீரியற்கை மலர்க்கமலம் இதற்குடைந்து பங்கமுறல்
நீதிஎன்பது யார்அறியார்? நிகரில் மாதே!''

அம்பிகையின் முக கமலத்தினுடைய எயிருகிய இதழ், ஒருகாலும் வாடாது என்பதுபற்றி, அதற்கு மாறு பாடாக நீரின்கண் இருக்கும் கமல இதழ் வாடும் என்றும்; முக கமலத்துப் பொருந்திய சிவ பெருமான் ஆகிய கணவரின் கண்வண்டிற்கும், கூந்த லிற் படிந்த வண்டிற்கும், பொறி (புள்ளிகள்) இன்மை பற்றி, அதற்கு மாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலத்தில் பொறிவண்டுகளே படியும் என்றும்: முக கமலத்தின் மணம் இயற்கை என்பதுபற்றி அதற்கு மாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலத்தின் மணம் செயற்கை என்றும்; முக கமலம் எப் பொழுதும் குவியாமல் புன்முறுவலாகிய முகையவிழ நிற்கும் என்பதுபற்றி, அதற்கு மாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலம் போதாகியே விரியும் என்றும் கூறினர். எயிறு—பல். கொண்கர்—கணவர். குழல்—கூந்தல். மதுகரம்—வண்டு. குழாம்.—கூட்டம். பொதிந்து—உட்கொண்டு. மூரல்—முறு வல், புன்சிரிப்பு. அருணம்—சிவப்பு. பொறி—புள் ளிகள். போதுசெய்தல்—பக்குவமாய் முறுக்கு அவிழ்தல். உடைந்து—தோற்று. பங்கம்—சேறு, குறைபாடு. நிகர்—சமானம், ஒப்பு. முதற்கண் தாம ரையை முகத்திற்கு ஒப்புடையது என்று கூறிப் பின் னர் ஒப்பு அன்று என மறுத்துரைத்து வேறுபாடு காட்டியிருத்தலால், இது வேற்றுமையுருவகம் என் னும் அணியாகும். இச்செய்யுள் அம்பிகையின் திரு முகத்து அழகைப் புகழ்ந்து கூறியது.

(45) சீத பூரணத் திங்கள் :

அம்பிகை, தனது நீண்ட திருமுடியின்மேல் திங்களை அணிந்திருக்கின்ருள். அவளது நெற்றியானது அழகிய பிறைச் சந்திரனைப்போல உள்ளது. அதனல் திருமுடியின்மேல் உள்ள திங்கள், நினக்கு நெற்றிப் புருவம் ஆகியதோ? என்றும், நினது நெற்றியாகிய பிறைச் சந்திரனும், திருமுடியின் மேலுள்ள பிறைச் சந்திரனும் ஆகிய இரண்டும் சேர்ந்து வானத்திலுள்ள முழு நிலாவாகிய குளிர்ந்த பூர்ண சந்திரனுக விளங்கு கின்றதோ? என்றும், ஆசிரியர் அம்பிகையின் நெற்றி யழகை வியந்து புகழ்கின்ருர்.

"கோதை நீள்முடி கொண்டொளிர் திங்கள்சேர்
பாதி வாள்நுதல் என்று படிந்ததோ!
ஈது கூடி இரண்டும் நிறைந்ததோ?
சீத பூரணத் திங்கள் சிறந்ததே!''

அழகிய மாலைகளை அணிந்துள்ள அம்பிகையே! நின்னுடைய நீண்ட முடியின்மேல் ஒளிர்கின்ற பிறைச் சந்திரன், ஒளியை உடைய நினது நெற்றியாக வந்து இழிந்து படிந்ததோ? நினது நெற்றியாகிய பிறைச் சந்திரனும், திருமுடியின்மேலுள்ள பிறைச்சந்திரனு மாகிய இரண்டும்கூடி, உவாநாளில் குளிர்ந்து முழு நிலாவாகச் சிறந்து திகழ்கின்றதோ? என்னல் ஏதும் அறியப்படவில்லை. நீயே கூறியருள்க! கோதை-மாலை. திங்கள்-சந்திரன். வாள்நுதல்-ஒளிபொருந்திய நெற்றி. சீதம்-குளிர்ச்சி. பூரணம்-முழுமை. வானத் தில் உவா நாளில் தோன்றும் முழு நிலாவினை, அம்பிகையின் நெற்றியாகிய சந்திரனும், திருமுடியில் உள்ள சந்திரனும் ஆகிய இரண்டும் கூடியதாக ஆசிரியர் பாடியது, தற்குறிப்பேற்றம் என்னும் அணி யாகும். இச்செய்யுள் நெற்றிச்சிறப்புக் கூறியது.

(46) சிலைஇது, புருவம் அன்று :

அம்பிகையின் புருவங்கள் சிலை(வில்) போன்று உள்ளன. வில்லுக்கு நாணும், அம்பும் வேண்டும். புருவமாகிய வில்லுக்கு, வண்டுபோன்ற கருவிழி நாணகவும், கண்மலர்கள் அம்பாகவும் அமைந்து விளங்குகின்றன. புருவமாகிய வில், தொடர்ந்து நீண்டிராமல் இடைவிட்டு விளங்குகின்றது. வில் வளைப்பவர்கள், வில்லை இடக்கையில் பிடித்து, அம்பு தொடுத்து விடுவர். அதற்கேற்ப அழகிற்சிறந்த

மன்மதன் தன் வலக்கையால் நாணை வாங்கி வளைத்து, இடக்கையால் வில்லைப் பிடித்திழுப்பன். அங்ஙனம் பிடித்த பிடிக்குள் மறைந்திருத்தலால், அம்பிகையின் புருவமாகிய வில் இடைவிட்டு நிற்கின்றது. இவ்வாற்ருல் அம்பிகையின் அழகிய புருவங்கள் வில்லைப் போன்று உள்ளன.

"கருவிழிச் சுருப்பு நாணும்,
கண்மலர் அம்பு கன்னற்
புருவவில் நடு ஒழித்தல்
போன்றது வளைத்துப் போர்மேல்
வரும்மதன் பிடித்த கைக்குள்
மறைந்தது போலும் என்ருல்,
திருமகள் பரவும் அம்மே
சிலையிது ; புருவம் அன்றே !"

திருமகள் பரவித் துதிக்கும் தாயே! உனது கருவிழியாகிய வண்டின் நாணையும், கண்ணுகிய மலரம்பினையும் உடைய, புருவமாகிய கரும்பு வில்லானது, இடைவிட்டிருப்பதுபோல் தோன்றுவது, வலக்கையால் நாணை வாங்கி வளைத்து, போர்மேல் வரும் மன்மதன் தனது இடக் கையினுல் பிடித்த பிடிக்குள் மறைந்தது போல உள்ளது என்று, யாவரும் சொல்லாமற் சொல்வதனுல், உன்னுடைய நெற்றியில் இருப்பது புருவம் அன்று; காமதேவனுடைய வில்லேயாகும். சுரும்பு-வண்டு. சுரும்பு, சுருப்பு என வலித்தது; சிலம்பு+அதிகாரம், சிலப்பதிகாரம் என்பது போல. கன்னல்-கரும்பு. மதன்–மன்மதன், காமதேவன். என்ருல்-என்று யாவரும் சொல்லுதலால். பரவுதல்–துதித்தல். அம்மே–தாயே. சிலை-வில். இதனுள் புருவம் என்னும் உண்மைப் பொருளை மறுத்துச் சிலை என்னும் ஒப்புமைப் பொருளை உடன்பட்டு, உருவகம் செய்தமையால், இஃது அவநுதி உருவகம் என்னும் அணியாகும்.

(47) விழைவகலா விழுப்பொருள் :

சிவபெருமானைப் போல அம்பிகையும் மூன்று கண்களை உடையவள். அம்பிகையின் வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன். நெற்றிக்கண் அக்கினி. வலக்கண்ணுல் பகற்பொழுதும், இடக்கண்ணுல் இராப்பொழுதும், நெற்றிக்கண்ணுல் செக்கர் மாலைப் பொழுதும், முறையே நிகழ்கின்றன. இங்ஙனம் உலக நலங் கருதி, அம்பிகையின் திருக்கண்களே, பகலும் இரவும் மாலையுமாகிய பொழுதுகளை விளைவிக்கின்றன.

" ஒருமலர்க்கண் இரவி வலத்து
உதித்தருளும்; நண்பகலும்
ஒருமலர்க்கண் மதியம் இடத்து
உதித்தருளும்; பேர்இரவும்
திருநுதற்கட் பொற்கமலச்
செந்நிறத்தீ விளைத்தருளும்
விரவுசெக்கர் மாலையும்உன்
விழைவகலா விழுப்பொருளே !"

விழுமிய பொருள் போல்பவளே! உன்னுடைய மலர்போன்ற ஒரு கண்ணுகிய சூரியன் நின்முகத்தின் வலப்புறத்தில் உதித்துத் தருகின்ற நண்பகற் பொழுதும்; மற்ருெரு மலர்போலும் கண்ணுகிய சந்திரன், இடப்புறத்தில் உதித்துத் தருகின்ற நெடிய இராப் பொழுதும்; நெற்றியில் விளங்குகின்ற பொற்ருமரை போலும் கண்ணுகிய சிறந்த நிறத்தையுடைய அக்கினித்தேவன் தருகின்ற பகலும் இரவும் விரவிய செக்கர்மாலைப் பொழுதும்; நின் மனமகிழ்ச்சியை விட்டு நீங்கா. இரவி-சூரியன். மதியம்-சந்திரன். நுதற்கண்-நெற்றிக்கண். பொற்கமலம்-பொன்னுல் இயன்ற தாமரை. செந்நிறத் தீ-சிவந்த நிறமுடைய அக்கினித்தேவன். விரவுதல்-பகலும் இரவும் கலத்தல். செக்கர்-சிவந்த. விழைவு-விருப்பம், மகிழ்ச்சி. அகலா-நீங்கா. விழுப்பொருள்-சிறந்தபொருள். இச்செய்யுளில் பகல் இரவு மாலை என்னும் மூன்று பொழுதுகளும், இறைவியின் மூன்று கண்களாலேயே நிகழ்வதாகத் துணிந்து கூறியதனுல், இச்செய்யுள் துணிவதிசயம் என்னும் அணியாகும்.

(48) அதிசயமோ? தாயே :

நமது பரத கண்டத்தில், பழம்பெரும் நகரங்களாகப் புகழ்பெற்று விளங்குவன, ஏழு நகரங்கள் ஆகும். அவையாவன : விசாலை (வைசாலி), கல்யாணிபுரம், அயோத்தி, மதுரை, போகவதி, தாரை, அவந்தி என்பனவாகும். பழமையும் பெருமையும்மிக்க இவ்வேழு நகரங்களின், ஏழுவகை இயல்புகளும், அம்பிகையின் திருக்கண்களில் அமைந்துள்ளன என்கிருர் ஆசிரியர். அம்பிகையின் அழகிய கண்கள் அகன்று பரந்து மிகவும் விசாலமானவையாக விளங்குவதனுல், விசாலை நகரமாகவும்; மங்கலமான சிறந்த நல்ல கல்யாண குணங்களை உடைமையால் கல்யாணிபுரமாகவும்; குவளை மலராலும் வெல்லப்படாமல் அழகுமிக்குத் திகழ்வதால் அயோத்தி மாநகரமாகவும்; அடியார்களுக்குப் பேரின்பம் ஆகிய மதுரம் பெருகும்படி விளைவித்தலால் மதுரைமாநகரமாகவும், பக்தியால் வழிபடுவோர்க்குப் பலவகைப் போகங்களையும் கொடுத்தலால் போகவதிபுரமாகவும், அமிழ்த தாரை போன்று கடைக்கண்ணின் அருள்நோக்கம் பொழிவதனுல் தாரை நகரமாகவும்; வந்தி என்னும் மலடியைப் போல இல்லாமல் பெற்ற தாயைப் போன்ற பரிவுடன் தண்ணருள் புரிவதனுல் அவந்தியாகவும்; அம்பிகையின் அழகிய கண்கள், நீண்டும் சிவந்தும் வரிகள் பரவியும் ஒப்பற்றுத் திகழ்கின்றன. இங்ஙனம் திகழ்வதனுல், ஆலகால விடத்தை அமுதம் என்று கொண்டு அருந்திய பித்தராகிய சிவபிரானின் உடம்பாகிய புரத்தில், இடப்பாகமாகிய ஒரு புரத்தை, நீ கவர்ந்து கொள்ளுதல், அதிசயமோ? தாயே!

"கோலநகர் விசாலையாய், நிரந்தர கல்யாணியாய்க்
குவலயத்தால் அயோத்தியாய்க், குலமதுரை
[தானய்ச்,
சாலஒளிர் போகவதியாய், அமுத தாரையாய்த்,
தண்ணளியால் அவந்தியாய்ச், சகவிசயை
[எனலாய்
நீலவிழி புடைபரந்து நெடுநகரப் பெயர்கவர்ந்து
நீண்டுசேந்து அரிபரந்து நிகர்ஒழிக்கும்
[என்றால்
ஆலவிடம் அமுதெனக்கொண்டு அருந்திய
[உன்மத்தர்புரம்
அதனில்ஒரு புறம்கவர்தல் அதிசயமோ?
[தாயே"

அம்பிகையின் கண்கள் பல்வேறு புகழ்மிக்க பெரு நகரங்களின் இயல்புகளைக் கொண்டிருப்பதாகப் பாடியிருப்பது, ஆசிரியரின் அரிய பெரிய கற்பனைத் திறனை விளக்கும் சான்றாகும். கோலம்-அழகு. நிரந்தரம்-எப்பொழுதும். குவலயம்-குவளை மலர். குலம்-மேன்மை. விசாலை-விசாலமானது. கல்யாணி-மங்கல முடையவள். அயோத்தி-யுத்தத்தால் வெல்லப்படாதது. போகவதி-போகங்களை உடையது. தாரை-ஒழுக்கு. தண்ணளி-கருணை. வந்தி-மலடி. அவந்தி-மலடு அல்லாத மங்கல மடந்தை. சகவிசயை-உலகை வெற்றி கொள்பவள். உன்மத்தர்-பித்தர். புரம்-உடம்பு, நகரம். 'அதிசயமோ' என்பதில் ஓகாரம் எதிர்மறை. அதிசயம் அன்று என்பது கருத்து. அம்பிகையின் கண்கள் பல்வேறு நகரங்களின் பெயர்களைக் கவர்ந்து கொண்டதாகக் கற்பனை செய்திருத்தலின், இச்செய்யுள் தொழில் அதிசயம் என்னும் அணியாகும்.

(49) வளம்பாராய் மலர்க்கொடியே:

அம்பிகையைக் கலைமகளும் திருமகளும் மண்மகளும் புகழ்மகளும் ஆகிய பலரும் புகழ்ந்து பாடுகின்றனர். அங்ஙனம் துதித்துப்பாடும் கவிதைகள் அழகிய பூங்கொத்துக்களைப் போல விளங்குகின்றன. அப்பூந்துணர்களாகிய கவிதைகளினின்று ஒன்பான் சுவையாகிய தேன் பிலிற்றிப் பெருக்கெடுக்கின்றது. அக்கவிதைச் சுவையாகிய பசுந்தேனை உண்டு நின் இரு விழியாகிய வண்டுகள் இரண்டும் களிக்கின்றன. அது கண்டு மனம் பொறாமல் அழுக்காறு எய்தி, நின் நுதற் கண்ணாகிய வண்டு சிவந்து நிற்கின்றது. அங்ஙனம் நின் நெற்றிக்கண் சிவந்து திகழும் திறத்தினை, நீ கண்ணாடியினால் காண்பாயாக.

"இருசெவியுண் பலகவிதை
இணர்ஒழுகு பசுந்தேனிற்
பெருகுநவ ரசமருந்திப்
பிறழ்ந்திடும்உன் பிணைவிழியாம்
கருநிறவண்டு இணைகளிப்பக்
கண்டுபொருது என்னேயோ?
வரிநுதற்கண் அளிசிவந்த
வளம்பாராய்! மலர்க்கொடியே!"

அம்பிகையைக் கலைமகளும் திருமகளும் போன்றோர் புகழ்ந்து பாடுகின்றனர் என்பதும், அச்சிறந்த கவிதைகளை அம்பிகை தன் இருசெவிகளால் ஏற்றுக் கேட்டு மகிழ்கின்றாள் என்பதும், அக்கவிதைகளின் சுவையில் அழுந்தி மகிழ்ந்து இன்புறுதலால், அம்பிகையின் கண்களில் மகிழ்ச்சித் திளைப்புக் குறிப்பு வெளிப்படுகின்றது என்பதும், இப்பாடலில் புலப்படுத்தப்பட்டுள்ளன. உண்ணுதல்–அனுபவித்தல். இணர்–பூங்கொத்து. ஒன்பது வகையான சுவைகள்: நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை சாந்தம் என்னும் ஒன்பதும், கவிதைகள் தரும் சுவைகளாகும். பிறழ்ந்திடுதல்-மகிழ்ச்சியில் திளைத்து உகளுதல். பிணை-பெண்மான். வண்டிணை–இரண்டு வண்டுகள். நுதற்கண் அளி-நெற்றிக்கண்ணாகிய வண்டு. மலர்க்கொடி என்றது அம்பிகையை. கடைக்கண் காதளவும் செல்லுதலால் "பெருகு நவரசம் அருந்திப் பிறழ்ந்திடும் உன் பிணை விழியாம் கருநிறவண்டு" என்றும்; சிவப்பு நிறம் சினத்தினால் வரும் என்பதைக் கருதி "வரிநுதற்கண் அளிசிவந்த வளம் பாராய்" என்றும் கூறினர். அம்பிகையின் நெற்றிக்கண் நெருப்பாதலால், அஃது இயல்பாகச் சிவந்து திகழ்கின்றது. அதனை, அழுக்காற்றால் சினந்து சிவந்ததாகக் கற்பனை செய்து பாடியதனால், இச்செய்யுள் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

(50) இத்தனையோ படித்தன? உன் இணைவிழிகள்:

சிறந்த இலக்கியங்கள் பலவகைச் சுவைகளை உடையனவாக விளங்கும். சிறப்பாக, உவகை அழுகை பெருமிதம் வெகுளி நகை அச்சம் இளிவரல் மருட்கை என்னும் எட்டுவகைச் சுவைகள் இலக்கியங்களில் அமைந்திருக்கும். இவற்றை முறையே சிருங்காரம் கருணம் வீரம் ரவுத்திரம் ஹாஸ்யம் பயானகம் பீபத்சம் அற்புதம் என வடமொழியில் வழங்குவர். இவ்இலக்கியச் சுவைகள் எட்டும் அம்பிகையின் கண்களிலும்கூட அமைந்திருப்பதாக, ஆசிரியர் மிகவும் சிறப்புற ஆராய்ந்து கற்பனை செய்து பாடுகின்றார்.

"அரன் இடத்திற் பேரின்பம் அருளும்; அவன்
[அல்லார்பால்
அருவருக்கும்; அவன்முடிமேல் அணிநதியைச்
[சீறும்,
பரவுநுதல் விழி அழல்முன் பார்த்திலபோல்
[அதிசயிக்கும்;
பணியாய பணிவெகுளப் பயந்தனபோல்
[ஒடுங்கும்
விரைமுளரி பகைதடிந்து வீரதம் படைக்கும்;
வினவுதுணைச் சேடியர்க்கு விருந்துநகை
[விளைக்கும்;
இரவுபகல் அடிபரவும் எளியனைக்கண்டு
[அருள் புரியும்;
இத்தனையோ படித்தனஉன் இணைவிழிகள்?
[தாயே!"

அம்பிகையின் கண்கள், சிவபிரானுக்குத் தம் கவர்ச்சியினாலும் காதற்குறிப்பினாலும், பெரிதும் இன்பச்சுவையை அருளுகின்றன. சிவபிரான் அல்லாத ஏனையோர்பால் அருவருப்புச்சுவையை வெளிப்படுத்துகின்றன. சிவபிரானின் சடைமுடிமேல் உள்ள கங்கைநதியாகிய மாற்றானை வெகுண்டு சீற்றச் சுவையைக் காட்டுகின்றன. சிவபிரானின் நெற்றியில் உள்ள அழல் விழியைக் கண்டு, முன்னர்ப் பார்த்திராததுபோல, அதிசயச் சுவையைப் புலப்படுத்துகின்றன. சிவபிரான் அணிந்துள்ள பாம்புகள் வெகுண்டு சீறுதல் கண்டு, அதற்குப் பயந்தனபோல ஒடுங்கி அச்சச்சுவையை அறிவிக்கின்றன. தம் அழகினால் செந்தாமரை மலராகிய பகையை வெற்றி கொண்டு, வீரச் சுவையைப் படைத்து ஒளிர்கின்றன. தோழியர்களுடன் மகிழ்ச்சி பெருக இனிது விளையாடி அவர்களுக்கு நகைச்சுவையை நல்குகின்றன. இரவும் பகலும் பரவி வழிபடும் அடியவர்களைக் கண்டு இரங்கி நலம்புரிதலால், அருட்சுவை பெருகப் பிறங்குகின்றன. இரவும் பகலும் உனது திருவடிகளையே நினைந்து பற்றித் துதிக்கின்ற எளியவனாகிய என்னைக் கண்டு இரங்கி, அருள்புரிகின்ற தாயே. நின் விழிகள் இரண்டும், இத்தகைய பல இயல்புகளையு மோ பயின்று படித்துள்ளன? என்ன அதிசயம்! அரன்–சிவபெருமான். அல்லார்பால்-மற்றவர்களிடத்தில். அணிநதி-அழகிய கங்கையாறு. அழல்-நெருப்பு. பணியாய-அணிகலன்களாக விளங்குகின்ற. பணி-பாம்புகள் விரை-மணம். முளரி-தாமரை. சேடியர்-தோழிப் பெண்கள். இணைவிழிகள்-இரண்டு திருக்கண்கள்.

(தொடரும்)

-ஆசிரியர்



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வள்ளித் திருமண மண்டபத் திறப்புவிழாவில், உச்ச நீதி மன்ற நீதிபதி மாட்சிமிகு P. S. கைலசம் B Sc., B L., அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு. U. சுப்பிரமணியம் I.A.S. அவர்களும் ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் I.A.S., அவர்களும் நிர்வாக அதிகாரி திரு. சோமசுந்தரம், B.A., B.L. அவர்களும் பிறரும் கலந்துகொள்ளுதல் (9-10-76)

# அருள்மொழியரசு

## திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்



# பவளவிழா வாழ்த்துப் பாக்கள்

ந.ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

சைவநெறிப் பெருஞ்சான்றோய்! தமிழ்மொழிநற் பெரும்புலவ! தகைமை ஓங்கும்
செவ்வியநற் பெருங்குணத்தோய்! திருமுருக கிருபானந்த வாரிச் செம்மால்!
திவ்வியசீர்த் திருப்புகழ்நல் அமிர்தஇதழ் ஆசிரிய! சிறப்பின் மிக்கோய்!
ஐய! நினது அரும்பெருஞ்சீர், அளவில்பெரும் பணிகள்எலாம் அளத்தற் காமோ? (1)

அருமைமிகு பெருந்தகையோய்! அரியசைவ நெறிவளர்க்கும் அறிஞர் ஏறே!
பெருமைமிகும் அருண்மொழிநற் பேரரசே! திருப்பணிகள் பேணும் வேந்தே!
தருமநெறி தழைப்பிப்போய்! சார்ந்தோர்கள் தமைஎல்லாம் தாங்கும் சான்றோய்!
திருமுருக கிருபானந்த வாரிஎனும் செம்மால்! நும் சிறப்பென் சொல்கேம்? (2)

செந்தமிழ்நற் பெருமொழியும், சித்தாந்தச் செந்நெறியும், செழித்தே ஓங்க
வந்தஒரு பெருந்தோன்றல்! வடமொழிதென் மொழிக்கலைகள் வாய்ப்பக் கற்றோய்!
அந்தமிலாப் பெருஞ்சிறப்பின் அருளின்பப் பெருங்கடலே! அறிஞர் ஏறே!
சந்தமுறு சொன்மாரி தகப்பொழிந்து சமயநெறி தழைக்கச் செய்வோய்! (3)

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள் பொருள்விளக்கிச் சுவைமை யூட்டி,
நகையோடு பொருள்செறிந்த நல்லுவமை நன்மேற்கோள் நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு, சாத்திரத்தின் நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திகையாவும் சிவம்பெருக்கும் சிறப்புடையோய்! நீடுழி சிறந்து வாழ்க! (4)

கேட்போரைப் பிணிப்பதுடன், கேளார்க்கும் வேட்கைமிகக், கிளர்ச்சி ஊக்கம்
ஊட்டாநின்று, அறிவுவிருந்து உதவும்உயர் நாவலவ! ஒப்பில் சான்றோய்!
சேட்சிமையாம் மலாய்சிலோன் தென்ஆஃபிரிக்கா முதலாம் தேயத் தோடு,
மாட்சிமிகத் தமிழ்வழங்கும் வளாகமெலாம் புகழ்பொறித்த வள்ளால் வாழி! (5)

சொல்லருஞ்சீர் ஞானியார், மறைமலையார், திரு. வி. க. முதலாச் சொல்லும்
நல்லறிஞர் பற்பலர்தாம், நன்குமிகக் கலந்தொன்றி நயந்து நின்று,
பல்வகையில் தமிழ்ச்சைவப் பணிபுரிந்தார்! அவர்வழியிற் பணிகள் ஆற்றும்
எல்லையில்சீர் அருளின்பப் பெருங்கடல்,நீர் தமிழ்சிவம்போல் இனிதே வாழ்க! (6)

“ஞாலமெலாம் சிவநெறியே நனிபரவல் வேண்டும்”என நயப்புற் றன்பால்,
சீலமிகும் உயர்காழித் திருஞான சம்பந்தர் தெரித்துச் சென்றார்!
சாலமிக அவர்விருப்பம் தக்காங்கு நிறைவேறச், சான்றோய் நீதான்
ஏலமிகப் பெருந்தொண்டிங் கியற்றுகின்றாய்! நெடுங்காலம் இனிதே வாழ்க! (7)

முருகனடி இணைமறவா மூதறிஞ! முத்தமிழின் நலங்கள் எல்லாம்
பெருகமிகப் பேசவல்லோய்! தினம்தினம்பல் ஆயிரவர் பேரிதும் கேட்டே,
உருகிமகிழ்ந் துளம்திருந்தி உய்யும்வணம் செய்துவரும் உயர்ந்தோய்! நின்போல்
திருகலில்சீர்க் கடவுள்நலம் திசையனைத்தும் பரவும்வகை செய்வார் உண்டோ? (8)

அருணகிரி நாதர்அருள் பெறும்வயலூர், இராமலிங்க அடிகள் வாழ்ந்து
கருணைபொழிந் தருள்வடலூர், காங்கேயப் பெருநல்லூர், கவின்மை லாப்பூர்,
அருள்நலஞ்சேர் ஆனைக்கா ஆகியபல் தலங்களிலும் அருமை வாய்ந்து,
பெருகுநல்ல பணிகள்செய்த பெருந்தகையோய்! நீடினிது பிறங்கி வாழ்க! (9)

அறங்கரையும் நாவினராம் அந்தணர், நற் பெரும்புலமை அரசர், எங்கள்
திறம்தெரிந்தும் பேரருளாற் சிறியோமை ஏற்றருளும் வணிகர், நல்லார்,
மறம்பெருகெம் மனவயலில் 'நுகம்இன்றி விளாக்கைத்து' மகிழ்வே ளாளர்,
சிறந்துயர்ந்த கணக்காயர், செவ்வியசொல் வலேவேடர், செம்மைச் சான்றோர்! (10)

கலேநலத்தாற் சம்பந்தர், கனிந்தஅன்பில் மணிமொழியார், கருதும் தொண்டின்
நிலேநலத்தால் நாவரசர், நெறிவளர்ப்பில் சுந்தரனர், நெஞ்சில் வீண்பற்று
இலநலத்தால் பட்டினத்தார், இரக்கத்தால் இராமலிங்கர், என்று இயம்பப்
பலநலத்தாற் சிறந்தொளிர்வோய்! பண்புயர் நின் நலங்களெல்லாம் பகர்தற் காமோ? (11)

10. ''கருமான் மருகனே'' எனத்தொடங்கும் கந்தர் அலங்காரப் பாடலில், கருமான்-செம்மான்-ஆகுலவன்-கைக்கோளன்-செங்கோடன் முதலிய சொற்கள் நயமுறப் பயின்றிருத்தல் போல, இச் செய்யுளிலும் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் கணக்காயர் வலேவேடர் சான்றோர் முதலிய சொற்கள் அழகுறக் கையாளப்பெற்றுள்ளன, "வாணியன் பாடிட, வண்ணுன் சுமக்க, வடுகன்செட்டி சேணியன் வாழ்த்த..." எனவரும் காளமேகப் புலவர் தனிப்பாடல் போல்வனவும் இங்குச் சிந்தித்து இன்புறத்தகும்.

11. மனிதர்களேயும் தெய்வ நிலேயில் வைத்து அன்பினுற் புகழ்ந்து போற்றிப் பாராட்டுவது. கவிமரபு. இது பாடாண் திணேயில், பூவை நிலே என்னும் துறையாக, இலக்கண நூல்களிற் குறிக்கப்பெறும்.

தலேவன் ஒருவன் பெறுவதற்குத் தகுந்த குணங்கள் அனேத்திணேயும்,
நலமே அமையச் செய்யுள்ஒன்றில், நன்றே நமது மணிமொழியார்,
சிலஒண் மொழியால் தெருட்டியுள்ளார்! கிருபா னந்தக் கடற்செம்மால்!
நிலவிந் நலங்கள் பெரிதுடையீர்! நீர்தாம் நெடுநாள் வாழ்ந்தருள்க! (12)

விழைதகு சிறப்பின் மிக்கீர்! கிருபா னந்த வியன்பெரியீர்!
பழுதிலாத் தெய்வ, மக்கட் பணிஎலாம் செய்வீர்! நீர்தாம்
எழுபதாண் டகவை எய்தி இன்பவள விழாக்கொண் டுற்றீர்!
தொழுதுமை வாழ்த்து கின்றேம்! சூழ்ந்துபல் லாண்டு வாழ்க! (13)

12. 1. வேண்டாமலே கொடுத்தலால், கார்மேகம்.
2. வேண்டக் கொடுத்தலால், கற்பகமரம்.
3. சிறந்துயர்ந்த கல்வி கேள்விப் புலமைதலனல், கற்றவர்க்கு நற்றுணே.
4. இசையுணர்வானும் கொழுதகைமையானும், பாணர்க்குச்சுற்றம்.
5. நினேப்பன எல்லாம் கொடுத்தலால், சிந்தாமணி.
6. சிவபிரான் திருவடியில் அழுந்திய சிந்தையுடைமையால், சிவனடிக்குக் கொன்றைத்தார்.
7. தொலேயாத பெருநிதியாய் இருந்து உதவுவதால், தங்கோர்தம் சங்கநிதி.
8. நட்டார்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன்கொடுத்தலால், விதி.
9. சுற்றத்தார்க்கு வேண்டுவன பலவும் செய்தலால், ஊருணி.
10. வரைவின்றி அனேவர்க்கும் நலம் செய்தலால், ஊதியம்.

—மணிவாசகர், திருக்கோவையார், 400

தன்நேர் இல்லாத் திருமுருகன் தாள்கள் மறவாச் சான்றேய்! நீ
இந்நாள் எழுப தாண்டகவை எய்திப் பவள விழாக்கண்டாய்!
நின்நாள் திங்கள் எனநீள்க! நீண்ட திங்கள் யாண்டாக!
பொன்நேர் யாண்டோ ஊழிபல பொலிய, வாழ்க நீடுழி! (14)

அன்பு அருளே ஓர்உருவாய் அமைந்த கிருபானந்த வாரி ஐயா!
"ஒன்றுடனே பத்தடுக்கல் உற்றபல கோடிஎனும் ஊழி காலம்"
இன்பமிக வாழ்தி! என எழுபதாண் டகவைஎய்தும் இனிய நின்னே,
மன்பெரிதும் தொழுதுமிக மகிழ்ந்தேத்தி வாழ்த்துகின்றேம்! வாழ்க! வாழ்க! (15)

"நீடினிது வாழியரோ நெடுந்தகைநீ, செந்தில்எக்கர் நீள் மணல்போல்
கோடிபல ஆண்டுகள் தாம்'' எனக்கூறி மருதன்இள நாகர் என்னும்
பாடல்வல பெரும்புலவர் பாண்டியனே வாழ்த்திநின்றுர்; பண்பார்ந் தோங்கித்
தேடருஞ்சீர்ப் பெருந்தகையோய்! திருமுருகன் திருவருளாற் சிறந்து வாழ்க! (16)

14. "நின்னுள் திங்கள் அனேயவாக! திங்கள் யாண்டோ ரனேய வாக! யாண்டே
ஊழி யனேய வாக! ஊழி வெள்ள வரம்பின வாக! உள்ளிக்
காண்கு வந்திசின் யானே...'' —பதிற்றுப்பத்து, 90

15. "ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை இரீஇய பெருமைத் தாக! நின் ஆயுள் தானே'' —புறநானூறு, 18

16. "நீநீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர் வெண்தலேப் புணரி அலேக்கும் செந்தில்
நெடுவேள் நிலேஇய காமர் வியன்துறைக் கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுஆழ் எக்கர் மணலினும் பலவே" —புறநானூறு, 55

—:X:—

# வீடணன் விரும்பிய அரசு

வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.

இராவணனுக்குப் பலவகையில் அறிவுரை கூறி, சீதையை விட்டுவிட வேண்டும் என்று சொன்ன வீடணன், தன் தமையன் தன் உரையைக் கேளாததோடு, "உன்னைக் கொன்ருல் பழி வருமென்று அஞ்சுகிறேன். இனியும் என் விழி எதிர் நிற்பாயானல் நீ தொலைந்து போவாய்'' என்று சொல்லவே, அங்கிருந்து நான்கு தோழர்களுடன் புறப்பட்டு இராமன் இருக்கும் இடம் நோக்கிப் புறப்படுகின்ருன்.

இரவில் ஒரு சோலையில் தங்கி, மறுநாள் காலையில் வானர சேனையை அணுகுகிருன். அவர்களைக் கண்டதும், "அரக்கர்கள் வந்து விட்டார்கள், பிடியுங்கள், அடியுங்கள்'' என்று வானர வீரர்கள் சுற்றிக் கொள்கிருர்கள். பிறகு மயிந்தன் என்னும் வானர வீரன் வீடணன் முதலியவர்களை அணுகி, வீடணன் துணைவனை அனலன் கூறியவற்றிலிருந்து உண்மையை உணர்ந்து, இராமனிடம் போய்ச் சொல்கிருன்.

அப்போது இராமன் அருகில் இருந்தவர்களைப் பார்த்து, "இவனைச் சேர்த்துக் கொள்ளலாமா, கூடாதா?'' என்று உசாவுகிருன். சுக்ரீவன் முதலியோர் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிருர்கள். அநுமன் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிருன். இராமனுடைய திருவுள்ளக் கருத்துக்கு இயைய அநுமன் கூறியதனுல், அதனைக் கேட்டு மகிழ்ந்த அப்பெருமான் தன்னுடைய கருத்தை விரிவாகச் சொல்லி அவனுக்கு அடைக்கலம் தருவதே தனக்கு அறம் என்பதை வலியுறுத்துகிருன். உடனே சுக்ரீவனை அனுப்பி வீடணனை அழைத்து வரச் செய்கிருன்.

வீடணன் வந்து அடிவீழ்ந்து வணங்கியதும், "நீ என் தம்பி; இலங்கைச் செல்வம் நின்னதே, தந்தேன்'' என்று கூறி இலக்குவனிடம் அவனுக்கு முடி சூட்டப் பணிக்கிருன். வீடணன் 'இராமனுடைய பாதுகையையே முடியாகச் சூட்ட வேண்டும்' என்று வேண்ட, அவ்வாறே செய்கிருன் இலக்குவன்.

வீடணன் தன் தமையனை விட்டு வந்தது துரோகச் செயலென்றும், அவனுக்கு இலங்கை அரசின்பால் ஆசை இருந்ததென்றும், இராமனுடைய அம்பினுல் இராவணன் நிச்சயமாக அழிவான், அதன்பின் அந்த அரசைத் தான் பெறலாம் என்ற விருப்பம் அவனுக்கு இருந்ததென்றும் சிலர் கூறுவர்.

வீடணனுக்கு இலங்கை அரசைப் பெறலாம் என்ற ஆசை இருந்ததற்குச் சான்ருக அநுமன் கூற்ருக உள்ள ஒரு பாடலையும், இராமனுடைய வாய்மொழியாக உள்ள ஒன்றையும் காட்டுவார்கள்.

அநுமன் கூற்று :

"வாலிவிண் பெற அரசு  
இளைய வன்பெறக்  
கோலிய வரிசிலை  
வலியும் கொற்றமும்  
சீலமும் உணர்ந்துநிற்  
சேர்ந்து தெள்ளிதின்  
மேலரசு எய்துவான்  
விரும்பி மேயினன்''

'வாலியாகிய தமையன் இறந்து விண் உலகத்தை அடையவும், அவனுடைய அரசை அவன் தம்பியாகிய சுக்ரீவன் பெறவும், வளைத்த வில்லையுடைய வலிமையையும் வெற்றிச் சிறப்பையும், சீலத்தையும் நன்ருக உணர்ந்து, உன்னைச் சேர்ந்து தெளிவாக, இனிமேல் இலங்கையரசை அடைவதற்கு விரும்பி இங்கே வந்தான்' என்று அவர்கள் பொருள் கூறுவார்கள்.

'அண்ணனைக் கொன்று தம்பிக்கு அரசு கொடுத்தவனுதலின் நம்முடைய அண்ணனையும் கொன்று நமக்கு அரசு தருவான்' என்று முன்னும் பின்னும் உள்ள கருத்துகள் பொருத்தமாக இணைந்துள்ளன என்பது அவர்களின் வாதம்.

அடுத்தபடி இராமன் கூறும் கூற்று வருமாறு :

"கருத்துற நோக்கிப் போந்த  
காலமும் நன்று; காதல்  
அருத்தியும் அரசின் மேற்றே;  
அறிவினுக்கு அவதி இல்லை;  
பெருத்துயர் தவத்தி னுனும்  
பிழைப்பிலன் என்னும் பெற்றி  
திருத்திய தாகும் அன்றே,  
நம்வயிற் சேர்ந்த செய்கை?''

என்பது அந்தப் பாட்டு. 'கருத்தில் நன்ருக ஆராய்ந்து இதுதான் நம் எண்ணம் நிறை வேறும் காலம் என்று எண்ணி, இங்கே வந்த காலமும் நன்ருக அமைந்திருக்கிறது. அவ னுக்கு விருப்பத்தோடு கூடிய ஆவலும் அரசி னிடம் இருக்கிறது. அவனுடைய அறிவுக்கு எல்லே இல்லே. மிக உயர்ந்த தவத்தினுலும் குற்றம் இல்லாதவன் என்ற தன்மையை நன்கு தெளிவிப்பதாக இருக்கிறது. அவன் நம்மிடம் வந்து சேர்ந்த காரியம், என்று இதற்குப் பொருள் கூறி, ''அருத்தியும் அரசின் மேற்றே'' என்பது, தெளிவாக வீடணனுக்கு இலங்கை அரச பதவியில் உள்ள நாட்டத்தைத் தெரிவிக் கிறது என்பர்.

இவற்றை ஆராய்வதே இந்தக் கட்டுரை யின் நோக்கம்.

கம்பர் தம் கூற்றுலும் பிறர் கூற்றுலும் வீடணன் இயல்புகளே வெளியிடுகிருர். அவன் அறத்தின் வழிச் சார்பவனென்பதும், நல்லவர் களிடத்தில் பக்தி உள்ளவனென்பதும், நல்ல தையே நாடுபவன் எனபதும் தெளிவாகின்றன.

முதன் முதலாகச் சுந்தர காண்டத்தில் அவனே அறிமுகப்படுத்துகிருர் கம்பர். அநுமன் சீதையைத் தேடிக் கொண்டு சென்று இலங்கை யில் 'புகைபுகா வாயிலும்' புகுந்து ஆராய்கிருன். வீடணனுடைய உறையுளே அடைகிருன்.

''வேந்தர் வேதியர் மேல்
உளோர் கீழுளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண் அகன்
கோயிலுள் புக்கான்''

என்று அந்தச் செய்தியைச் சொல்கையில், வீடணன், 'யாரும் விரும்பப்போந்த புண்ணி யன்' என்கிருர். வீடணன் அரக்க வடிவத்தில் இருந்தாலும் அறஒழுக்கம் உடையவன். 'தருமம், நாம் தூய வெள்ளே நிறத்தோடு, கரு நிறத்தையுடைய அரக்கர் குழுவில் வாழ்வது அரிது என்று எண்ணித் தானும் ஓர் அரக்க னுடைய வடிவைத் தாங்கி அங்கே வாழ்கிறது' என்று கம்பர் ஒரு கற்பனேயை அமைக்கிருர்.

''கருநிறத் தோர்பால்
வெளித்து வைகுதல்அரிதென,
அவர்உரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமம்
அன்னுன் தனே உற்ருன்''

இங்கே வீடணனே, 'தருமம் அன்னுன்' என்று சொல்கிருர். இராமனே அறத்தின் நாயகன் என்றும், அறந்தலே நிறுத்த அவதரித்தவன் என்றும், அநுமனே அறத்தின் தூதுவனென்றும் பாடும் கம்பர், வீடணனே அறத்தின் வடிவம் என்று சொல்வதில் ஓர் உண்மை புலனுகிறது. அவன் இருக்கவேண்டியது அறத்தின் சூழ லாகிய இராமபிரான் உள்ள இடமென்ற குறிப்பை இதனுல் அறியலாம்.

யாரையும் பார்த்த மாத்திரத்திலேயே தெளி வாக எடை போடுகிறவன் அநுமன். இராமனே யும் சீதையையும் அவ்வாறு எடை போட்டவன். வீடணனேக் கண்டதும் அவனே இனம் கண்டு கொள்கிருன்.

''உற்று நின்று அவன் உணர்வைத்தன்
உணர்வினுல் உணர்ந்தான்,
குற்றம் இல்லதோர் குணத்தினன
இவன் எனக் கொண்டான்''

என்பது கம்பர் பாட்டு. அநுமனுடைய முதல கணிப்பு, அவன் குற்றம் இல்லாத குணம் உடையவன் என்பது. இங்கும் அவன் இராம பிரானுடைய குழுவைச் சேரத் தக்கவன் என்ற குறிப்பைக் காண்கிருேம். இராமன், ''நவையறு குணங்க ளென்னும் 'பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணியன்'' அல்லவா?

இதன் பின்பு வீடணனேப் பிணிவீட்டு பட லத்தில் பார்க்கிருேம். அநுமனேப் பாசத்தாற் பிணித்து இராவணன் முன்கொணர்கிருன் இந்திரசித்தன். அநுமன் இராவணனிடம் இராமன் பெருமைகளேச் சொல்கிருன். ''உன் செல்வமும் சுற்றமும் உயிரும் உய்யவேண்டு மாஞல் சீதையை விட்டுவிடு. என் அரசனுகிய சுக்கிரீவன் இவ்வாறு சொல்லி அனுப்பினுன்'' என்று இறுதியில் கூறுகிருன். இராவண னுக்குக் கோபம் வருகிறது. ''இவனேக் கொல்லுங்கள்'' என்கிருன். அப்படியே ஏவலர் அவனேக் கொல்லப் புகும்போது வீடணன், ''நில்லுங்கள்'' என்று தடுக்கிருன்.

''நின்மின் என்றனன்
வீடணன் நீதியான்''

பிறகு, இராவணனிடம், ''தூதுவனேக் கொல்லக்கூடாது'' என்று நீதியைக் கூறுகிருன். நீதியை உணர்ந்து கூறும் தகுதி உடையவன் என்பதை உணர்த்தவே, அவன் பேசுவதற்கு முன், 'நீதியான்' என்று கம்பர் கூறுகிருர். ''மாதர்களேக் கொலே செய்தவர்கள் இருக்கிருர் கள் என்று சொல்லும்படி எவரையேனும் காட்டினுலும், தூதர்களேக் கொன்றவர்கள் யாரும் இல்லே. நீ இவனேக் கொன்ருல் உலக மெல்லாம் இழிக்கும் பழி வந்து சூழும்'' என்று சொல்கிருன். இராவணன் அவன் சொல்வதில் உள்ள உண்மையை உணர்ந்து, அநுமனேக் கொல்லாமல் அவன் வாலில் நெருப்பு வைக்கச் சொல்கிருன். அநுமன் இலங்கையை எரியூட்டி இராமனிடம் போகிருன்.

அடுத்தபடி, இராவணனின் மந்திரப்படலத் தில், வீடணனுடைய பேச்சை நாம் கேட்கிருேம் இராவணன் அமைச்சர்களேயும் கும்பகருணன் முதலியவர்களேயும் கூட்டி, ''இனி என் செய்வது?'' என்று ஆலோசிக்கிருன். பலரும் போர் செய்யவேண்டும் என்கின்றனர். கும்ப கர்ணன், சீதையை விட்டுவிடவேண்டும் என் கிருன். இந்திரசித்தன், ''என்னே அனுப்புக,




நான் அவர்களை வென்று வருகிறேன்'' என்று மிடுக்குடன் சொல்கிறான். அப்போது அவனைத் தடுத்து நிறுத்திய வீடணன் இராவணனை நோக்கிக் கூறப்புகுகிறான்.

இராவணனிடம் உள்ள பாசமும், அவனுக்கு அழிவு வருமே என்ற இரக்கமும் அவனிடம் இருப்பதை, அவன் தொடங்கும்பொழுது கூறும் மொழிகள் புலப்படுத்துகின்றன.

''எந்தைநீ, யாயும்நீ;
எம்முன் நீ; தவ
வந்தனைத் தெய்வம்நீ;
மற்றும் முற்றும்நீ;
இந்திரப் பெரும்பதம்
இழக்கின் றாய்என
நொந்தனன் ஆதலின்
நுவல்வ தாயினேன்''

என்று அவன் ஆரம்பிக்கிறான். இராவணனைத் தந்தை, தாய், தமையன், தெய்வம் என்கிறான். கிடைத்தற்கரிய வளத்தையும் பதவியையும் பெற்றிருக்கும் அவன் அவற்றை இழக்கநேருமே என இரங்குகிறான்.

பிறகு அவன் பல நியாயங்களை எடுத்தோதிச் சீதையை விட்டுவிடுவதே நலம் என்று அறிவுறுத்துகிறான். ''நீ வரம் பெற்ற போது மனிதரால் தோல்வி யுறக்கூடாது என்று பெறவில்லை. உனக்குக் குரங்கினால் தீங்கு நேரும் என்று நந்தி சாபம் இருக்கிறது, வேதவதி என்ற கற்புடை மங்கை தீயிடை மூழ்கும்போது உன்னை நான் மீண்டும் பிறந்து அழிப்பேன் என்று சபதம் பூண்டாள்; அவளே சீதையாகத் தோன்றியிருக்கிறாள்'' என்று இராவணனிடம் உள்ள பலவீனங்களை முதலில் எடுத்துச் சொல்கிறான். பிறகு இராமனுடைய வலிமையை எடுத்துரைக்கிறான். அவனுடைய முன்னோர்கள் பெருவலிபடைத்து ஆற்றிய வெற்றிச் செயல்களையும், இராமன் விசுவாமித்திரனிடமும் அகத்தியரிடமும் பெற்ற படைக்கலங்களின் வலிமையையும் கூறுகிறான்.

''இராமன் இலக்குவன் என்னும் இருவரும் ஒப்பில்லாத பெருவீரர்கள். போர்வீரர்கள், தேவர்கள், மெய்ஞ்ஞானியர்கள் முதலிய யாவராலும் நினைவதற்குரிய தன்மையை உடையவர்கள். நாம் செய்த பாவத்தால் நம்மை அழிக்க மனிதர்களாய் வந்திருக்கிறார்கள்''. என்று அவ்விருவருடைய தெய்வத் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறான்.

வாலி, கரதூடணர், விராதன், திரிசிரன், மாரீசன் முதலியவர்கள் அழிந்ததைச்சொல்லி, இலங்கையில் பல தீய சகுனங்கள் உண்டாவதையும் இயம்புகிறான். -'தேவர்களே வானர வீரர்களாக வந்திருக்கிறார்கள். அவரோடு பகை கொண்டு

போர்புரிதல் தக்க செயலன்று. கற்புடைய சீதையை விட்டருள்க அதைவிட வெற்றிச் செயல் வேறு இல்லை'' என்று கூறி முடிக்கிருன்.

அவனுடைய கூற்றிலிருந்து, அவனுக்குப் பழைய வரலாறுகள் யாவும் தெரியும் என்பதும், இராமனும் குரங்கினமும் தேவர்களின் அவதாரம் என்ற உண்மையை அவன் உணர்ந்தவன் என்பதும் தெளிவாகின்றன.

வீடணன் கூறியவற்றைக் கேட்டுச் சினம் மூண்ட இராவணன் அவனைக் கடிந்து பேசுகிருன். "பைத்தியக்காரர் பேசும் பேச்சைச் சொல்கிருய், அவரிடம் உள்ள பயமோ, அன்போ? என்ன காரணத்தால் இப்படிப் பேசுகிருய்?'' என்று தொடங்கி மேலே வீடணன் சொன்னவற்றிற்கு விடை சொல்பவனைப் போலப் பலவற்றை விவரிக்கிருன். "பழுதுபட்ட வில்லை ஒடித்து, ஓட்டைமாமரங்களில் அம்பைச் செலுத்தி, கூனி சூழ்ச்சியால் அரசிழந்து, காட்டுக்கு ஓடிவந்து, என்னுடைய செயலால் மனைவியை இழந்து, உயிரைச் சுமந்திருந்த மானிடனுடைய வலிமையை உன்னையல்லாமல் வேறு யார் இங்கே மதிக்கிறவர்கள்?'' என்று இழித்துப் பேசுகிருன்.

வீடணன், "ஒன்றுகேள் இனம் உறுதி'' என்று மீட்டும் சொல்லத் தொடங்குகிருன். இதற்கு முன் இராவணனுடைய பலவீனத்தையும், இராமனது பலத்தையும் சொன்னவன், இப்போது இராமபிரானுடைய தெய்வத்தன்மையைத் தெளிவாக எடுத்துச் சொல்கிருன். "தன்னைக் காட்டிலும் புதன்மையான பொருள் இல்லாத தனித் தலைவனாகிய நாராயணனே தேவர்களின் சூழ்ச்சியால் நம்மை அழிக்கும்பொருட்டு மானிடனாக வந்து அவதரித்திருக்கிருன்'' என்கிருன்.

இராவணன் சினம் மேலும் மூள்கிறது. தன் பலம் பெரிதென்று பேசுகிருன். "போரில் நீ எம்முடன் வந்து போர்செய்ய வேண்டாம், இங்கேயே இனிது இரு. அஞ்சல்'' என்று பரிகாசமாகக் கூறுகிருன்.

அதற்கு மேலும் வீடணன், "உனக்கும் மேம்பட்ட வலிமை உடையவர்கள் அந்தப் பெருமானுடைய கோபத்தால் சுற்றத்தோடும் அழிந்து போனுர்கள்'' என்றுகூறி இரணியன் அழிந்த கதையை விரிவாகச் சொல்கிருன்.

கேட்ட இராவணன், "உனக்கு இராமன் முதலியவர்களிடம் அன்பு முற்றிவிட்டது. உருகுகிருய், அழுகிருய், துதிக்கிருய், நான் உன்னைக் கொல்வேன். பழியினை உணர்ந்து அவ்வாறு செய்திலேன், விழி எதிர் நின்ருல் நீ இறந்து போவாய்'' என்று சினத்தின் உச்சத்தையடைந்து முழங்குகிருன்.

வீடணன் வானத்தில் சென்று அங்கிருந்தபடியே உறுதிமொழிகளைக் கூறுகிருன். "கீழானவர்கள் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு அழிய நிற்கிருய். அறம் பிழைத்தவர்கள் வாழ முடியுமா? எல்லாரையும் இராமனுடைய அம்பு அழித்துவிடும். எத்தனையோ வகையாக நான் உனக்கு உறுதியைச் சொன்னேன். நீ உணரவில்லை. அத்த; என்பிழை பொறுத்தருளுவாய்'' என்று சொல்லி அவன் புறப்பட்டு விடுகிருன்.

இராமனுடன் அவன் பேசிய பேச்சினுல், வீடணன் நீதியை உணர்ந்தவன்; திருமாலே இராமனுக வந்தவனென்பதைத் தெரிந்து கொண்டவன், இராவணன் தன் தீய செய்கையால் அழிந்துவிடுவான் என்பதைத் தெள்ளத் தெளிய உணர்ந்தவன் என்பவற்றையறியலாம். இராமனுடையவரலாறு முழுவதையுமே அவன் உணர்ந்திருக்கிருன்.

இதுவரையில் வீடணன் இராவணன் தம்பியாக, அவனை அழிவினின்றும் காப்பாற்ற வேண்டும் என்னும் எண்ணம் உடையவனுக இருந்தான். இப்போது அவன் இராமனைப் புகலாக அடைந்து உய்திபெறும் எண்ணத்தை உடையவனுகிவிட்டான். இதன் பின்னர் வீடணனுடைய நல்லியல்புகளையெல்லாம் நாம் தெரிந்து கொள்ளும் வண்ணம் கம்பர் காட்டுகிருர். இதுவரையில் அவன் குற்றமில்லாக் குணத்தினன் என்றும், நீதியை உணர்ந்தவன் என்றும், இராமனைத் திருமால் என்று தெரிந்தவன் என்றும் அறிந்திருக்கிருேம். இனி அவனுடைய உயர்ந்த குண நலங்களைக்காணும் வாய்ப்புக்கள் வருகின்றன.

அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நான்கு துணைவர்களுடன், வீடணன் இலங்கையை விட்டுப் புறப்பட்டு விடுகிருன். அக்கரையில் இராமன் வானரப்படையுடன் வந்து தங்கியிருக்கிருன் என்ற செய்தியை அவன் தெரிந்து கொண்டிருக்கிருன். அங்கே சென்று வானரப் பெருஞ்சேனையைத் தூரத்திலிருந்து பார்க்கிருன். தன்துணைவர்களைப் பார்த்துப் பேசுகிருன்.

"தருமத்தைக் கடைப்பிடிக்கும் நல்லவர்களிடம் அன்பு கொண்டவன் நான். மறந்தும் புகழல்லாத வாழ்வை வேண்டிலேன். என் தமையன், கொள்கையை நீ பின்பற்றவில்லை என்று கடிந்தமையால் அவனை விட்டு வந்தேன். இனி என்ன செய்யலாம்? உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்'' என்கிருன். அவர்கள், "பெருமைக்குரிய செயல் வேறு இல்லை. தாழ்வில்லாத உறுதிப் பொருளைத் தரும் தருமமூர்த்தியாகிய இராமனைத் தரிசித்துக்கொள்வதே கடமை'' என்கிருர்கள். அதுகேட்டு வீடணன் சொல்லும் கூற்று அவனுடைய எதிர்கால வாழ்வை, அவனுடைய லட்சியத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

"நல்லது சொல்லினீர்;
நாமும் வேறு இனி
அல்லது செய்துமேல்
அரக்கர் ஆதுமால்;
எல்லைஇல் பெருங்குணத்து
இராமன் தாள்இணை
புல்லுதும்; புல்லிஇப் பிறவி
போக்குதும்''

என்று அவன் கருத்தைக் கம்பநாடர் பாடுகிருர். ''நாம் வேறு ஏதேனும் செய்தால் அரக்கர் ஆகி விடுவோம். இனி இராமன் திருவடியைச் சரணடைவோம். அதனல் இந்தப் பிறவியைப் போக்குவோம்'' என்கிருன் வீடணன்.

இதுவரையில் அரக்கரோடு அரக்கனுகஇருந்து அரக்க அரசனுடைய தம்பியாக வாழ்ந்திருந் தவன், அங்கிருந்து நீங்கி வந்தபிறகு அரக்கர் உறவும், அரக்கர் இயல்பும் அடியோடு நீங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கிருன். அதனல் மறுபடியும் நாம் அரக்கர் ஆகக்கூடாது என்று கூறுபவனைப்போல, ''அல்லது செய்து மேல், அரக்கர் ஆகுதும்'' என்கிருன் இப்போது அவன் அரக்கர் சூழ்நிலையை உதறிவிட்டு வந்திருக்கிருன். இனி அவன் இராமபிரானது குழுவலே சேரவேண்டும் ஆதலின், ''இராமன் தாளிணை புல்லுதும்'' என்கிருன். அதனல் வரும் பயன் என்ன? இந்தப்பொல்லாத பிறவி யைப் போக்கிக்கொள்ள வேண்டும். அதுதான் அவன் இலட்சியம. ''புல்லி இப்பிறவி போக் குதும்'' என்கிருன். இராமனை அடைந்தால் இந்த லட்சியம் கைகூடும் என்பது அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

அடுத்த பாட்டிலும் இந்த விருப்பம் தெரி கிறது.

''முன்புறக் கண்டிலேன்;
கேள்வி முன்பிலேன்;
அன்புறக் காரணம்
அறிய கிற்றிலேன்;
என்புறக் குளிரும்;
நெஞ்சு உருகு மேல்அவன்
புன்புறப் பிறவியின்
பகைஞன் போலுமால்"

இங்கே வீடணனுக்கு உண்டான மெய்ப்பாடு கள் தெரிகின்றன. அவனை அறியாமலே அன்பு ஊற்றெழுகின்றது. என்பு குளிர்ந்து நெஞ்சு உருகுகின்றது. ஓர் அரசனுடைய படையை விட்டுவிட்டு அவனுடைய பகையரசன் படை யோடு சேர வந்தவன் வார்த்தையாகவோ, அப்படிச் சேர்வதனல் தனக்கு உலகியல் ஊதியம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பவன் சொற் களாகவோ இவை இல்லை. பிறவியை வேரறுக் கும் இறைவனை அணுகும் பக்தனுடைய உணர்ச்சியையே இங்கே பார்க்கிறோம். அவன் என்பு குளிர்கிறது; நெஞ்சு உருகுகிறது, இது தானே பக்தனுடைய அடையாளம்? வீடணன் லட்சியமாகக் கொண்டது, பிறவித் துன்பத்தி னின்றும் நீங்குதல். அது இந்தப் பெருமானல் கிடைக்கும் என்று நம்பினன். இப்போது தன் னிடம் காரணம் காட்ட முடியாமல் உண்டாகும் அன்பையும் உருக்கத்தையும் பார்க்கும்போது, தன்னுடைய லட்சியம் இவனல் சித்திக்கும் என்ற உறுதி அவனுக்கு ஏற்படுகிறது. ''அவன் புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்'' என்ற முடிவை அவன் கொள்கிருன். ''புல்லி இப்பிறவி போக்குதும்'' என்று புகுந்தவனுக்கு, ''இவன் பிறவியைப் போக்குவான்'' என்ற நம்பிக்கை உள்ளுணர்வினல் புலனுகிறது.

மறுபடியும் அவன் பேசுகிருன். அங்கேஅவன் பிரமனிடம் கேட்டுப் பெற்ற வரங்களைச் சொல் கிருன்.

''ஆதி அம் பரமனுக்கு
அன்பும், நல்அற
நீதியின் வழாமையும்;
உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும் நான்
விரும்பிப் பெற்றனன்;
போதுறு கிழவனைத்
தவம்முன் பூண்ட நாள்"

'இறைவனிடம் பக்தி, தருமத்தோடியைந்த நீதி யினின்றும் பிறழாமல் நிற்றல், எல்லா உயிர் களிடத்தும் அன்பு, மறையவர்களின் அருள் ஆகிய இவை வேண்டும் என்று பரமனை நோக்கித் தவம் செய்து வரம் பெற்றேன்'' என்று சொல்கிருன். இதுவரையில் இந்த விருப்பம் விதையாகவே இருந்தது. செயற்பட இயலாத சூழ்நிலையில் அவன் இருந்தான். பரமனுக்கு அன்பு, உள்ளத்தில் இருக்கலாம். ஆனல் நீதி நெறி திறம்பியோர் வாழும் இடத் தில் அவன் இருந்தான். உயிருக்கு நேயம் இல்லாத அரக்கர் சூழலில் வாழ்ந்தான். வேதியர் இல்லாத அரக்கரிடையே இருந்தான். பிரம னிடம் பெற்ற வரங்கள் முழுமலர்ச்சி பெறவில்லை.

இப்போது அவை விளையும் காலம் குறுகி விட்டது. அச் சூழ்நிலையை விட்டுத் தன் இயல்புக் கேற்ற சூழ்நிலைக்கு அவன் வந்திருக்கிருன். இதுதான் அவன் இயல்புக்கு ஏற்றஇடம். ஆகவே,

" ஆயது பயப்பதோர்
அமைதி ஆயது;
தூயது நினைந்தது;
தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல்
நணுகி, நம்மனத்து
ஏயது முடித்தும்
என்று இனிது மேவினன் "

''நான் பெற்ற வரங்கள் பயனளிக்கும் பருவம் இப்போது வந்திருக்கிறது. நான் இங்கே வர வேண்டும் என்று நினைத்த எண்ணம் தூய்மை யானது. பழைய தேவர்கள் யாவருக்கும் நாயக னுகிய இராமனுடைய பாதார விந்தத்தை அடைந்து, நம் மனத்தில் எண்ணியதை நிறை

வேற்றிக் கொள்வோம்'' என்று கூறும் வீடணன் பேச்சிலே, தான் செய்த தவம் பயனடையும் செவ்வி இப்போதுதான் வந்திருக்கிறது என்று உணர்ந்த உணர்வு தெரிகிறது. ''நம் மனத்து ஏயது'' என்று அவன் எதைச் சொல்கிருன்? ''இப்பிறவி போக்குதும்'', ''புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்'' என்பவற்ருல் பிறவியை ஒழித்து வீடு பெறுதலே அவனுடைய உள்ளக் கிடக்கை என்று தெரிகிறது.

அவர்கள் வந்த வேளை இரவாதலின், இருட்டில் போவது நன்றன்று என்று எண்ணி ஒரு சோலையில் மறைந்து தங்குகிருர்கள். பொழுது விடிகிறது. வீடணன் தன் துணைவர்களோடு வானரர் சேனையை அணுகுகிருன். அவர்களைக் கண்ட வானர வீரர்கள், ''அரக்கர்கள் வந்து விட்டார்கள். பிடியுங்கள், அடியுங்கள்'' என்று ஆரவாரிக்கிருர்கள். அப்போது அநுமன் மயிந்தன், துமிந்தன் என்ற இருவரை அனுப்ப, அவர்கள் வீடணன் முதலியோரை அணுகுகின்றனர். மயிந்தன், ''நீங்கள் யார்? எதற்கு வந்தீர்கள்?'' என்று கேட்கிருன்.

அவனுக்கு விடையாக வீடணன் துணைவர்களில் ஒருவனுகிய அனலன் பேசத் தொடங்குகிருன்.

''சூரிய குலத்தோன்றலாகிய இராமனுடைய திருவடியை அடைந்து உய்யவேண்டும் என்று வந்தவன். தகுதியுடைய உள்ளமும், தரும நீதியும் உள்ளவன். பிரமனுடைய கொள்ளுப்பேரன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன்'' என்று அறிமுகப்படுத்திவிட்டு அவன் இயல்புகளைப் பின்னும் செல்கிருன்.

"அறநிலை வழாமையும்
　　ஆதி மூர்த்திபால்
நிறைவரு நேயமும்
　　நின்ற வாய்மையும்
மறையவர்க்கு அன்பும் என்று
　　இனைய மாமலர்
இறையவன் தரநெடுந்
　　தவத்தின் எய்தினன்"

முன்பு வீடணனும் இதையே சொல்லியிருக்கிருன். பிரமனை நோக்கித் தவம் செய்து பெற்ற வரம் இவை என்பதை அங்கும் பார்த்தோம். இங்கே அனலன் வாய்மொழியாகவும் கேட்கிருேம்.

பிறகு, வீடணன் இராவணனுக்குச் சீதையை விட்டுவிடும்படி சொன்னதையும், அவ்வரக்கன் மறுத்துக் கோபத்துடன், ''போகுதி; இறந்தனை நின்றியேல்'' என்று சொன்னதையும், அதைக் கேட்டு வீடணன் தன் தமையனை விட்டு வந்ததையும் அனலன் சொல்கிருன்.

இவற்றைக்கேட்ட மயிந்தன் இராமனிடம் சென்று, கேட்டவற்றை விண்ணப்பித்துக் கொள்கிருன்; அனலன் சொல்லியவற்றையெல்லாம் சொல்கிருன். ''ஆயவன் தருமமும் ஆதி மூர்த்திபால், மேயதுஒர் சிந்தையும் மெய்யும், வேதியர், நாயகன் தரநெடுந் தவத்தின் நண்ணினன், தூயவன்'' என்று அவன் பெற்ற வரத்தையும் சொல்கிருன்.

இராமன் அருகில் உள்ளவர்களை நோக்கி, ''இவனைச் சேர்த்துக் கொள்ளலாமா? கூடாதா?'' என்று கேட்க, ஒவ்வொருவராகத் தம் கருத்தை உணர்த்துகின்றனர். சுக்ரீவன், சாம்பவான், நீலன், மற்றையோர், வீடணன் ஐயுறற்குரியவன் என்றும், மற்றக் காலங்களில் உடன் இருந்துவிட்டுப் போர் நிகழும் காலத்தில் துறந்து வந்தது தவறென்றும் கூறினர். அவர்களில் நீலன் பல பேசிவிட்டுக் கடைசியில் தன் கருத்தைத் தொகுத்துச் சொல்கிருன்.

"காலமே நோக்கினும்,
　　கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும்,
　　முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியாம்
　　தெளிந்து தேறுதற்கு
ஏலுமே? என்றுஎடுத்து
　　இனைய கூறினன்."

''இவன் இங்கே வந்த காலத்தைப் பார்த்தாலும், நாம் அறிந்த போர் சம்பந்தமான நூல்களின்படி பார்த்தாலும், தன் அண்ணனிடம் கோபித்துக்கொண்டு வந்தவன் சீலத்தை ஆராய்ந்த நாம் இவனைத் தெளியத் தகுமா?'' என்று அவன் சொல்கிருன்.

—(தொடரும்).

---

கலைக்கடலே! கருணைநெடுங் கடலே! கானங்
　　கடந்ததடங் கடலே! என் கருத்தே! ஞான
மலைக்கண்எழுஞ் சுடரே! வான் சுடரே! அன்பர்
　　மனத்தொளிரும் சுயஞ்சுடரே! மணியே! வானேர்
தலைக்கண்உறு மகுடசிகா மணியே! வாய்மைத்
　　தசரதன் தன் குலமணியே! தமியேன் உள்ள
நிலைக்கண்உறும் ஸ்ரீராம வள்ளலே! என்
　　நிலைஅறிந்தும் அருள, இன்னும் நினைந்திலாயே.!

—திரு அருட்பா

அருளாளப்பெருமாள் எம்பெருமானுர் இயற்றிய

# ஞானசாரம்

### 31. சரணுகதி தந்த தன்னிறைவு :

வேதங்கள் எல்லாவற்றினுள்ளும், அவற்றின் பொருள்களை விளக்கும் சிறப்பு மிக்க சார்பு நூல்கள் எல்லாவற்றினுள்ளும், அறிவுறுத்தப்பெறும் தலையாய பொருள் ஒன்றேயாகும். அதாவது, ஆசாரியனே மிக மேலான பரதெய்வம் என்பது.

> வேதம் ஒருநான்கின் உட்பொதிந்த மெய்ப்பொருளும்
> கோதில் மனுமுதல்நூல் கூறுவதும்—தீதில்
> சரணு கதிதந்த தன்னிறைவன் தானே
> அரணுகும் என்னும் அது.

நான்கு வேதங்களினுள்ளும் பொதிந்து கிடக்கின்ற மெய்ப் பொருளாகவும், குற்றமற்ற மனுமிருதி முதலான நூல்களெல்லாம் கூறுகின்ற சிறந்த பொருளாகவும், இருப்பது எதுவென்ருல், தீது அற்ற சரணுகதி நெறியை விளக்குகின்ற துவயம் என்னும் மந்திரத்தை, நமக்கு உபதேசித்து உதவியருளிய ஆசாரியனின் திருவடிகளே, நமக்குப் பாதுகாப்பான அரண் ஆகும் என்பதேயாம். கோது – குற்றம். அரண் – பாதுகாப்பு.

### 32. நண்ணிடுவர் கீழாம் நரகு :

நமக்கு ஞானேபதேசம் செய்கின்ற ஆசாரியனை, நாம் தெய்வமாக மதித்துப் போற்றுதல் வேண்டும். நம்மைப் போன்ற ஒரு மனிதர் தானே என்று, குருவை நாம் எளிதாக நினைத்தல் கூடாது. அதுபோலப் பெருமானின் அர்ச்சாவதாரம் எனப்படும் திருவுருவங்களை, இவைகள் சிலையாலும் செம்பாலும் செய்யப்பெற்றவைகள் தாமே என்று, குறைவாக நினைத்தல் கூடாது. குருவை மனிதராகக் கருதுபவரும், தெய்வத் திருவுருவங்களை வெறும் சிலையும் செம்புமாக எண்ணுபவர்களும், மிக இழிந்த நீசர்கள் ஆவார்கள். இந்த இருவகைப்பட்ட நீசர்களும், எக்காலத்தும் மிகவும் கீழான நரகத்தைச் சேர்ந்து துன்புறுவார்கள்.

> மானுடவர் என்றும் குருவை ; மலர்மகள்கோன்
> தான்உகந்த கோலம் உலோகம் என்றும்—ஈனமதா
> எண்ணுகின்ற நீசர் இருவருமே, எக்காலும்
> நண்ணிடுவர் கீழாம் நரகு

நம்மை ஈடேற்றுவதற்காகப் பெருங் கருணையுடன், நமக்கு ஞானேபதேசம் செய்தருளும் ஆசாரியன், நம்மைப் போன்ற மனித உருவில் இருந்தாலும், அவரை நம்மைப் போன்ற எளிய மனிதராக, மனத்தில் நினைத்தல் கூடாது. "பீதக ஆடைப் பிரானுர் பிரம குருவாகி வந்து" என்று ஆழ்வார் பாடுகின்றபடி, நம்மைப் பிறவிக் கடலில் இருந்து எடுத்துக் காப்பாற்றுதற்காக, இறைவனே மனித வடிவங் கொண்டு, கருணையுடன் எழுந்தருளி வந்திருக்கின்ருன் என்று தெளிந்து, நாம் ஆசாரியன்பால் பக்தி கொண்டு போற்றி உய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யாதொழிந்தால் அது மிகப் பெரிய பாவமாகும். இவ்வாறே "தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்றும், "உமர் உகந்து உகந்த உருவம் நின் உருவம் ஆகி" என்றும், அருளிச் செய்யப் பெற்றவாறு போல, அர்ச்சாவதாரத் திருமேனிகளை நாம் இறைவனுகவே கருதி வழிபடுதல் வேண்டும். இவைகள் சிலையாலும் செம்பாலும் செய்யப்பெற்ற வெறும் வடிவங்கள் தாமே, என்று எண்ணிவிடுதல் கூடாது. அங்ஙனம் எண்ணினுல், அது உய்தி இல்லாத பெரும் பாவத்திற்கு ஏதுவாகும். எனவே, குருவை மனிதராக நினைப்பவர்களும், தெய்வத் திருவுருவங்களை வெறும் வடிவங்கள் என்று நினைப்பவர்களும், மிகக் கீழான கொடிய நரகங்களில் வீழ்ந்து வருந்துவார்கள்.

### 33. எட்ட இருந்த குரு :

நாம் ஈடேறி உய்வதற்கு, ஆசார்ய பக்தி மிகவும் இன்றியமையாதது. நமக்கு "ஆசார்ய அபிமானமே உத்தாரகம்" ஆதலின், ஆசாரியரையே நாம் தெய்வமாகக் கருதிப் போற்றுதல் வேண்டும்.

> எட்ட இருந்த குருவை இறை அன்றென்று
> விட்டு, ஓர் பரனை விருப்புறுதல்—பொட்டெனத்தன்
> கண்செம் பளித்திருந்து கைத்துருத்தி நீர்தூவி
> அம்புதத்தைப் பார்த்திருப்பான் அற்று,

நமக்கு அருகில், நாம் காணவும் அணுகவும் பழகவும் உரிய நிலையில், எளிவந்து இருக்கும் ஆசாரியனை விடுத்தொழித்து, வேறு தனியே ஒரு தெய்வம் உண்டு எனக் கருதி, நாம் அதனை அடைய விரும்புதல் கூடாது. அங்ஙனம் அருகிலுள்ள குருவை விடுத்து, அப்பாலுக்கு அப்பாலாய் மிகவும் தொலைவில் உள்ள இறைவனைத் தேடியடைய முயன்று அலைதல் எது போலும் எனில், தன் கண்களை மூடிக் கொண்டிருந்து கையில் உள்ள பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரைக் கீழே கவிழ்த்துக் கொட்டிவிட்டு, பிறகு நீருக்காக ஆகாயத்தில் உள்ள மேகத்தை எதிர்பார்த்திருப்பவனின், அறிவற்ற செயலைப் போன்றதேயாகும். எட்ட – எட்டி எளிதாக அடையத்தக்க நிலையில். பொட்டென – திடீர் என்று. செம்பளித்து – கண் மூடிக் கொண்டு. கைத்துருத்தி – கையில் உள்ள பாத்திரம். அம்புதம் – மேகம். "விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேட்சித்து, ஜீமூத சலத்தையும், சாகர சலிலத்தையும் வாபி கூப பயசுக்களையும் வாஞ்சிக்கக் கடவன் அல்லன்" என வரும் பிள்ளை லோகாச்சாரியர் ஸ்ரீவசனபூஷணத் திருமொழிகள் இங்குச் சிந்தித்து இன்புறற்பாலன.

### 34. பற்று குருவே பரன் :

குருவருளாலேயே நமக்குத் திருவருள் கிடைக்கும். ஆதலால் குருவின் அருளைப் பெறுதலே நாம் உய்வ



158617

தற்குரிய வழியாகும். குருவே நம்மைக் காப்பவர் ஆவர். குரு நம்மைக் காக்க வல்லவர் அல்லர் என்று நினைத்து அவரைப் புறக்கணித்துவிட்டு, நாம் வேறு ஒரு கடவுளைப் பின்சென்று தொழுது ஒழுகுதல் கூடாது. அங்ஙனம் குருவைப் புறக்கணித்து வேறு ஒருவரைப் போய்த் தொழும் செயல், தன் கையில் அகப்பட்டுள்ள பொருளை வீசி எறிந்து தொலைத்துவிட்டு, பிறகு யாரோ ஒருவர் நிலத்திற்கு அடியில் புதைத்து வைத்த நிதி இருக்கும் என்று தேடி, அலைந்து திரியும் அறிவற்றவனின் செயலை ஒத்ததேயாகும்.

''பற்று குருவைப் பரன்அன்று எனஇகழ்ந்து
மற்றோர் பரனை வழிபடுதல், — எற்றேதன்
கைப்பொருள்விட்டு ஆரேனும் காசினியில் தாம்புதைத்த
அப்பொருள்தே டித்திரிவான் அற்று''

மிகவும் எளிவரும் இயல்பினனைத் தனக்குக் கிடைத்துள்ள அரும்பெரும் ஆசார்யனை அறியாமையால் புறக்கணித்து விட்டு, மிகவும் அரியவனைப் பெருந் தவமுயற்சிகள் செய்தே காணவேண்டும்படியிருக்கும் இறைவனைத் தேடி அடைய முயலும் செயல், விரும்பியபோதெல்லாம் பயன்படுத்திக் கொள்ளத்தக்க நிலையில், தன் கையில் இருக்கும் பொற்கிழியை வீசி எறிந்துவிட்டு, பூமிக்குள்ளே பிறர் எவரேனும் புதைத்து வைத்த பொருள் இருக்குமென்று நினைத்து அதனைத் தேடி அலைந்து வருந்துவதற்கே ஒப்பாகும் என்பது, இப்பாடலின் கருத்து. பற்றுகுரு – தன்னாலே துணையாகப் பற்றப்பட்ட குரு; தன்னைச் சீடனாக ஏற்றுப் பற்றின குரு. பரன் – பிறனொருவன். காசினி - உலகம். எற்று – எத்தகையது? என்ன அறியாமை! இங்கே ஸ்ரீவசனபூஷண நூலின்கண் ''கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவன் அல்லன்'' எனவரும் திருமொழி உணர்ந்து மகிழற்பாலது.

## 35. புனல் பிரிந்த பங்கயம் :

ஒருவனுக்கு இறைவனின் திருவருள் கிடைப்பதற்கு, மூலமும் முதன்மையுமாக விளங்குவது, குருவருளே யாகும். குருவருள் இன்றித் திருவருளைப் பெறுதல் இயலாது. 'உயிர்களுக்கு அருள் புரிபவன் இறைவனேயன்றோ? அவன் அருளைப் பெறுவதற்குக் குருவின் அருள் எற்றுக்கு? குருவின் அருள் இல்லாவிட்டாலும், நல்ல சிறந்த ஆத்ம குணங்களை உடையவன் அக்குண நலங்களால் இறைவன் அருளைப் பெறுதல் கூடாதோ? எனச் சிலர் வினவுவர். ஆசாரிய சம்பந்தம் குலைந்தால், ஒருவன் ஒரு போதும் ஆன்ம குணம் உடையவனாக மாட்டான். ஆன்ம குணங்களையே முன்பே அடையப் பெற்றவனாயினும், அவைகள் இயல்பழிந்து வாடிப்போகும். தாமரை மலரைச் சூரியன் தான் மலர்த்துகின்றான். அதுபோல' ஆன்மாக்களுக்கு இறைவனே அருளைச் செய்கின்றான். தாமரை மலர்களை மலர்த்துகின்றவன் சூரியனேயாயினும், அச்சூரியன் தானே தாமரையை மலர்த்த வல்லவன் அல்லன். தாமரை மலர் தண்ணீரில் இருந்தால் தான், சூரியன் அதை மலர்த்துதல் இயலும். தண்ணீரின்தொடர்பு அற்ற தாமரை மலரைச் சூரியன் மலர்த்துதல் இயலாது. அது போலவே, ஆசாரியனின் அருட்சம்பந்தம் உடைய ஆன்மாக்களுக்கே, இறைவன் அருள் செய்வான். ஆசாரிய சம்பந்தம் தொலைந்த ஆன்மாக்களுக்கு இறைவன் ஒரு போதும் அருள் செய்ய மாட்டான்.

''என்றும் அனைத்துயிர்க்கும் ஈரஞ்செய் நாரணனும்
அன்றும்தன் ஆரியன்பால் அன்பொழியில் -- நின்ற
புனல்பிரிந்த பங்கயத்தைப் பொங்குசுடர் வெய்யோன்
அனல்உமிழ்ந்து தான்உலர்த்தி அற்று''

எல்லா ஆன்மாக்களுக்கும் எந்நாளும் அருள் புரிகின்ற நாராயணனும்கூட, சீடன் தன்னுடைய ஆசாரியனிடத்தில் அன்பு தளர்ந்த அளவில், அவனை நிக்கிரம் செய்திடுவான். இஃது எதுபோலும் எனில், தனக்குத் தாரகமாய் நிற்கின்ற தண்ணீரைவிட்டுப் பிரிந்த தாமரை மலரை, ஒளிமிகுந்த சூரியன், தானே வெயிலைப் பரப்பி உலர்த்திவாடச் செய்துவிடுவான். தண்ணீரில் இருந்தால் சூரியன் தாமரையை மலர்த்துவான்; தண்ணீரை விட்டுப் பிரிந்தால், முன்பு மலர்த்திய தாமரையைச் சூரியனே, பின்பு உலர்த்திவாடச் செய்துவிடுவான். இஃது யாவரும் அறிந்தது. இவ்வாறே ஆசாரியனின் தொடர்பு பெற்றுள்ளவரையில், இறைவன் ஆன்மாக்களுக்கு மகிழ்ந்து அருள் செய்வான். ஆசாரியனின் தொடர்பை இழந்த நிலையில் அவனே சினந்து ஆன்மாக்களை ஒறுத்து வருத்துவிப்பான். இவ்வுண்மை ''தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்தன் தானே, நீரைப் பிரிந்தால் அத்தையுலர்த்துமா போல, சொரூப விகாசத்தைப் பண்ணும் ஈசுவரன்தானே, ஆசாரிய சம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும்'' எனவரும் ஸ்ரீவசனபூஷணத் திருமொழிகள், இங்குக் கருதியுணற்பாலன.

## 36. செல்லார் பொழில்சூழ் திருப்பதிகள் :

நல்ல சீடனாய், நல்லாசிரியன்பால் நனிசிறந்த அன்புடைவனாய், இருக்கும் ஒருவனுக்கு, சகல திவ்விய தேசங்களும் அவனது ஆசாரியனே யாவான். ஆசாரியனை அன்புடன் தொழுது பணிந்து வந்தால், அதுவே சகல திவ்விய தேசங்களையும் சென்று பணிந்து வழிபடுகின்ற சிறந்த பயனைத் தரும்.

வில்லார் மணிகொழிக்கும் வேங்கடப்பொற் குன்றுமுதல்
செல்லார் பொழில்சூழ் திருப்பதிகள்--எல்லாம்
மருளாம் இருள்ஓட மத்தகத்துத் தன்தாள்
அருளாலே வைத்த அவர்''

ஒளிமிகுந்த நவமணிகளும் திரளுகின்ற, திருவேங்கடமலை முதலாக உள்ள, மேகங்கள் படிந்த சோலைகள் சூழ்ந்த திவ்விய தேசங்கள் எல்லாம், அறியாமையாகிய பெரிய இருள் இரிந்து ஓடும்படி, நம் தலையின் மீது தன் திருவடிகளை வைத்தருளி ஆட்கொண்ட ஆசாரியாரே யாவார். வில் – ஒளி. செல் – மேகம். மருள் – அறியாமை. மத்தகம் – தலை.

## 37. எந்நாளும் மாலுக்கு இடம் :

உடல் பொருள் ஆவி முதலிய எல்லாவற்றையும் ஆசாரியனுக்கே உரியனவாகத் தெளிந்து, அவை அனைத்தையும் ஆசாரியனுக்கே உரிய உடைமை என்று நினைத்து ஒழுகுபவர்களின் நெஞ்சகமே, சர்வேசுவரனுக்கு எல்லாக் காலமும் உறைவிடமாக விளங்கும்.

''பொருளும் உயிரும் உடம்பும் புகலும்
தெருளும் குணமும் செயலும்--அருள்புரிந்த
தன்னா ரியன்பொருட்டாச் சங்கற்பம் செய்பவர்நெஞ்சு
எந்நாளும் மாலுக்கு இடம்''

செல்வமும் உயிரும் உடலும் வீடும் ஞானமும், தமம் சமம் முதலிய குணங்களும் ஆகிய இவைகள் எல்லாம், தன்பால் இரக்கங்கொண்டு அருள்புரிந்த தன்னுடைய ஆசாரியனுக்காக என்றே தெளிந்து, உறுதி கொண்டிருக்கும் நற்சீடர்களின் நெஞ்சகமே, திருமாலுக்கு எக்காலத்தும் உறைவிடமாக விளங்கும். பொருள் – செல்வம். புகல் – வீடு. தெருள் – ஞானம். ஆரியன் – ஆசிரியன், குரு. சங்கற்பம் – கொள்கையுறுதி.

## 38. உன்னுவதே சால உறும் :

ஆசாரியன் நமக்கு அருள் புரிந்து, நம்மைப் பல வகைகளிலும் உய்வித்துக் காத்தருளுதலால், அவனை நாராயணனுடைய அவதாரச் சிறப்புடையவன் என்றே, நாம் கருதுதல் வேண்டும். இறைவனே குருவாக வந்தருள்கின்றான் என்றே, சமய தத்துவ நூல்களெல்லாம் முழங்கிச் சாற்றுகின்றன. ''பீதக ஆடைப் பிரானார் பிரம குரு ஆகி வந்து'' என்று பெரியாழ்வாரும், அருளிச் செய்திருத்தல் காணலாம்.

''தேனார் கமலத் திருமா மகள்கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால்--மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாள்இணையை
உன்னுவதே சால உறும்''

தேன் நிறைந்த செந்தாமரை மலரின் கண் தோன்றிய பிராட்டிக்குத் தலைவனாகிய திருமால், தானே, தனது பேரருளால் மனித வடிவம் தாங்கி, ஆசாரியனாய் நம் போன்றவர்களுக்காக, இந்நிலவுலகத்தில் வந்து அவதாரம் செய்கின்றான். ஆதலால் எவ்வுயிர்க்கும், அவ்வாசாரியனுடைய இரு திருவடிகளையும் நினைந்து தியானித்துத் தொழுவதே, பெரிதும் பொருந்திய நற்செயலாகும். கமலம் – தாமரை. திருமாமகள் - மகாலட்சுமி. கொழுநன் – தலைவன், கணவன். உன்னுவது – தியானித்துத் தொழுவது. சால – மிகவும். உறும் – பொருந்தும்.

## 39. தூற்றில் துதியாகும் :

இறைவனின் அடியார்க்கு அடியவர்களான பாகவதோத்தமர்களின் ஏற்றம் அறிந்து, அவர்களைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடக் கடமைப்பட்டவர்கள், ஞானப் பெருஞ் செல்வர்களான சான்றோர்களேயன்றி மற்றவர்கள் அல்லர். 'பாம்பறியும் பாம்பின்கால்' 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றாற்போல, பாகவதோத்தமர்களின் அருமை பெருமைகள், ஞானச் செல்வர்களான பெரியோர்களுக்கே தெரியும். அறிவற்றவர்களான உலக மக்கள். அடியார்க்கு அடியவர்களாகிய பாகவதோத்தமர்களின் அருமை பெருமைகளை அறிந்துணர வல்லவர்கள் அல்லர். அத்தகைய அறிவிலிகள் இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும் ஒரு பயனும் இல்லை. ''மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ்'' என்றாற்போல, அறிவிலிகளின் இகழ்ச்சி, பெரியவர்களுக்குப் புகழ்ச்சியாகவே முடியும். இகழாமல் புகழ்வதற்கும் அறிவிலிகள் தகுதியுடையவர் அல்லர். அறிவிலிகள் செய்யும் புகழ்ச்சி, உத்தமர்களுக்குப் பழிப்பாகவே அமையும்.

''அலகை முலைசுவைத்தாற்கு அன்பர்அடிக்கு அன்பர்
திலதம் எனத்திரிவார் தம்மை--உலகர்பழி
தூற்றில் துதியாகும் : அவர் இவரைப்
போற்றில்அது புன்மையே ஆம்''

பூதனை என்னும் பேயரக்கியின் முலையை உண்ட பெருமானுக்கு, அன்பு செய்யும் அடியவர்களின் திருவடிகளில் அன்பு கொண்டு இருப்பவர்களாய், உலகத்திற்குத் திலகம் போன்றவர் என்று புகழும்படி, இந்நிலவுலகில் வாழ்ந்து வரும் பெரியோர்களை, உலக மக்கள் அவர்களின் பெருமையை அறிந்து கொள்ள மாட்டாமல் இகழ்ந்து கூறினால், அவ்விகழ்ச்சியே அப்பெரியோர்க்குப் புகழ்ச்சியாக அமைந்து நிற்கும். அறிவில்லாத உலகமக்கள் இகழாமல், ஒரோவழி பெரியவர்களைப் புகழ்ந்து துதித்தால், அப்புகழ்ச்சியே அப்பெரியவர்களுக்கு இகழ்ச்சியாய் முடியும். ''அவமதிப்பும், ஆன்ற மதிப்பும், இரண்டும் மிகை மக்களால் மதிக்கற்பால ; கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும், வையார் வடித்த நூலார்'' எனவரும் நாலடியார் செய்யுட் கருத்தும், இங்கு ஓர்ந்து உணரற்பாலது. அலகை – பேய், பூதனை என்னும் அரக்கி. முலைசுவைத்தான் – கண்ணபிரான், திருமால். தூற்றுதல் - இகழ்தல். போற்றுதல் - புகழ்தல். துதி – புகழ்ச்சி. புன்மை - இகழ்ச்சி.

## 40. செடியார் வினைத்தொகைக்குத் தீ :

இறைவனின் அடியவர்களாகிச் சிறந்து திகழும் பாகவதோத்தமர்களின் வாய்ச்சொல்லுக்கு மேற்பட்ட, வேதம் இல்லை. அவர்கள் நடந்து காட்டும் ஒழுக்கத்திற்கு மேற்பட்ட, அறநூல்களாகிய தரும நூல்கள் இல்லை. அவர்களின் கடைக்கண் நோக்கத்திற்கு மேற்பட்டு, நலந்தருவது வேறு எதுவும் இல்லை.

''அல்லி மலர்ப்பாவைக்கு அன்பன் அடிக்கு அன்பர்
சொல்லும் அவிடு சுருதியாம்—நல்ல
படிஆம் மனுநூற்கு அவர்சரிதை ; பார்வை
செடியார் வினைத்தொகைக்குத் தீ''

திருமகளின் தலைவனான திருமாலின் திருவடிகளில் அன்பு கொண்ட பக்தர்கள், விளையாட்டாகச் சொல்லும் சிறுசொல்லும், வேதத்திற்குச் சமமாகும். அவர்கள் கடைப்பிடித்து வரும் ஒழுக்கமானது, மநு முதலிய தரும சாத்திரங்களுக்குச் சிறந்த மேற்கோளும் சான்றும் ஆகும். அவர்களின் கடைக்கண் நோக்கமானது, அடர்ந்து நெருங்கிப் புதர்போன்று வளரும் தீவினைத் திரளை அழித்தற்கு, ஒரு பெருங் காட்டுத் தீயாகும், அல்லி – புறஇதழ். அல்லிமலர் - தாமரை. அல்லிமலர்ப்பாவை – திருமகள், மகாலட்சுமி. அல்லி மலர்ப்பாவைக்கு அன்பன் – திருமகளின் கணவராகிய திருமால். அன்பர் - பக்தர்கள். அவிடு – விளையாட்டான சிறு சொல். சுருதி – வேதம். நல்ல படி – சிறந்த சான்று, மேற்கோள். சரிதை – ஒழுக்கம். பார்வை - கடைக்கண் நோக்கம். வினைத்தொகை – பாவமாகிய கூட்டம்.

பகவத் சாத்திரங்களும், இதிகாசபுராணம் முதலியவைகளும் ஆகிய ஞான நூல்களில் கூறப்பெறும் உயரிய உண்மைக் கருத்துக்களை எல்லாம் தொகுத்துச் சுருக்கிச் சாரமாக வடித்து விளக்கியருளுவதனால், ஞானசாரம் என்னும் காரணப் பெயர் அமைத்து, அருளாளப் பெருமான் எம்பெருமானார் இயற்றியருளிய நூல், இனிது முற்றியது.

—ஆசிரியர்

# இரும்பேச்சுடையான்

மாட்சி மிகு நீதிபதி. திரு. மு. மு. இஸ்மாயீல்

ஒரு கதையின் பாத்திரங்கள் அனைத்தும் அக் கதையாசிரியரின் படைப்புக்களே. எனவே, தான் படைக்கும்ஒவ்வொரு பாத்திரத்தினிடமும் முழு அக்கறை கொண்டவனாக அப் பாத்திரத்தைப் படைப்பதில் தன் திறமை முழுவதையும் ஆசிரியன் காட்டி விடுகின்றான். ஒரு பாத்திரம் நற்குணங்களின் இருப்பிடமாகவும், நல்லொழுக்கத்தின் உறைவிடமாகவும் இருக்கக்கூடும். மற்றொரு பாத்திரம் தீமையே உருவாகவும் கொடுமையே கோலமாகவும் இருக்கக்கூடும். இதன் காரணமாக முதற் பாத்திரத்தைப் படைப்பதில் ஆசிரியன் தன் திறமை முழுவதையும் காட்டி விட்டு இரண்டாவது பாத்திரத்தைப் படைப்பதில் தன் திறமையைக் காட்டாமலே இருந்து விடுகிறான் என்று சொல்வதற்கில்லை. இரண்டு பாத்திரங்களையும் படைப்பதில் ஆசிரியன் தன் முழுத் திறமையையும் காட்டத்தான் செய்கிறான். இதன் காரணமாகவே முதற் பாத்திரம் குணக்குன்றாகவும் சீலத்தின் பெட்டகமாகவும் பொலிவு பெறுகிறது; இரண்டாவது பாத்திரம் தீமையின் உருவமாகவும் நஞ்சின் வடிவமாகவும் சமைவுறுகிறது. கதையின் தலைவனை எந்த அளவுக்குக் கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் ஆசிரியன் படைக்கிறானோ அதே அளவுக்குக் கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் எதிர்த் தலைவனையும் படைக்கிறான். அதுபோலவே, ஒரு பெரும் பாத்திரத்தைப் படைப்பதில் தான் காட்டும் அக்கறையையும் திறமையையும் ஒரு சிறு பாத்திரத்தைப் படைப்பதிலும் காட்டுகிறான். கதையில் பெரும்பங்கு பெறும் பாத்திரம் பெரும் பாத்திரமாகவும், சிறுபங்கு பெறும் பாத்திரம் சிறு பாத்திரமாகவும் அமைந்து விடுவதன் காரணமாகக் கதாசிரியன் பாரபட்சம் காட்டுவதில்லை. சிற்சில கதைகளில் இரு பாத்திரங்களும் ஒரே அந்தஸ்துள்ளவையாகவும், ஒரே தரத்தனவாகவும், ஒரே குணம் படைத்தவையாகவும் இருக்கக்கூடும். இருந்தபோதிலும், ஒரு பாத்திரம் கதாநாயகனாக இருப்பதன் காரணமாக அதைப்பற்றி மிகுதியாகப் பேசவும் புகழவும் வேண்டியவனாகக் கதாசிரியன் ஆகிவிடுகிறான். மற்றொரு பாத்திரம் கதையில் சிறிய பங்கே பெறுவதால் அதைப்பற்றி மிகுதியாகப் பேசுவதற்கு அவசியமோ வாய்ப்போ ஏற்படுவதில்லை. வேறு சில கதைகளில் இரண்டு பாத்திரங்கள் ஒருங்கே செயல்படக்கூடும். ஆனால், கதையின் மையக் கருருத்துக்கேற்ப ஒரு பாத்திரத்தைப் பற்றியும் அதன் செயல்களைப் பற்றியுமே பேசுவது அவசியமாகிவிடும். அந்த நிலையில் மற்றப் பாத்திரம் கதையின் எல்லாக் கட்டங்களிலும் இருந்த போதிலும் கதையினுடைய போக்கிலே அந்தப் பாத்திரத்தைப் பற்றி எதுவுமே இராது. இராமாயணத்தில் அத்தகைய பாத்திரங்களில் ஒன்று சத்துருக்கன்.

சத்துருக்கன் தசரத புத்திரரில் ஒருவன். இராமன், பரதன், இலக்குவன் ஆகிய மூவருக்கும் எந்த அந்தஸ்து உண்டோ அதே அந்தஸ்து சத்துருக்கனுக்கும் உண்டு. என்ற போதிலும், இராம காதையில் சத்துருக்கன் பேசப்படுவது மிக மிகச் சிறிய அளவிலேதான். அதற்கு என்ன காரணம்? குணத்திலேயோ வீரத்திலேயோ அவன் மற்ற மூவருக்கும் சளைத்தவன் அல்லனே! இதற்குரிய ஒரே காரணம் கதையின் மையக் கருத்தும் அதன் அமைப்பும் தான்.

இராமன் காப்பியத் தலைவன். ஆகவே, அவனைப் பற்றி மிகுதியாகப் பேசப்படுவது இயற்கையே. இராமனைப் பிரியாமல் என்றும் உடனிருப்பவன் இலக்குவன். அவனுக்குத் தம்பி மாத்திரமல்லன்; துணைவன், நண்பன், ஆலோசகன் அனைத்துமே அவன். அது மாத்திரம் அல்லாமல் அரக்கரோடு நிகழ்ந்த போரில் பெரும்பங்கு ஏற்றவனும்கூட. எனவே அவனைப்பற்றியும் மிகுதியாகப் பேசப்படுவது இயற்கையே. பரதனுக்கு ஆட்சியை வாங்கித்தர வேண்டும் என்ற கைகேயியின் ஆசையே இராமன் கான் செல்வதற்கும் தசரதன் வான் செல்வதற்கும் காரணமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் பரதன் என்ன எண்ணினான், செய்தான் என்பது பற்றிக் கதையிலே பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. ஆகையால், தசரத புத்திரர் நால்வரில் இராமனுக்கு அடுத்தபடி இலக்குவனும், இலக்குவனுக்கு அடுத்தபடி பரதனும் கதையிலே பேசப்படுகின்றனர். பரதனுடைய நிழல் போல இருக்கும் சத்துருக்கன், பரதன் இருக்குமிடத்திலெல்லாம் உடனிருக்கிறான். என்றாலும், பரதன் பேசப்படும் போதெல்லாம் சத்துருக்கன் பேசப்படுவதில்லை. இதற்குக் காரணம் கதையின் அமைப்பே.

கதையிலே சத்துருக்கனை மிகச்சிறிய அளவிலே தான் நாம் பார்க்கிறோம். இலக்குவனை ஈன்ற சுமித்திரை இரண்டாம் முறையாகச் சத்துருக்கனை ஈன்றெடுக்கிறாள். தசரதனுடைய மற்றப் புதல்வர்களுக்குப் பெயர் வைக்கப்படும்பொழுது இவனுக்கும் பெயர் வைக்கப்படுகிறது. தசரத புத்திரர் நால்வரும் வில்வித்தையும் நன்னூற்களும் கற்றுக் கொள்கிறார்கள். இராமனைப் பிரியாமல் இலக்குவன் இருக்கிறான். பரதனைப் பிரியாமல் சத்துருக்கன் இருக்கிறான். நான்கு புதல்வர்களும் நான்கு மறைகளைப் போல் வளர்

கிறார்கள். மிதிலையில் சிவதனுசை இராமன் வளைத்துச் சீதையைத் திருமணம் செய்து கொள்ளப்போகும் செய்தி வந்த பிறகு, தசரதன் மிதிலைக்குப் புறப்பட்டுச் செல்லும்பொழுது பரதனோடு சத்துருக்கனும் சேர்ந்து மிதிலைக்குப் புறப்பட்டுச் செல்கிறான். அங்கே இராமனைச் சந்தித்தபோது சத்துருக்கன் அவனை வணங்குகிறான். மிதிலையில் இராமன் சீதையை மணந்து கொண்ட வேளையில், இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகிய மூவரும் ஜனகனுடைய தம்பியான குசத்துவனுடைய மகளிர் மூவரையும் மணந்து கொள்கிறார்கள்.

திருமணத்திற்குப் பிறகு எல்லோரும் அயோத்திக்குத் திரும்புகிறார்கள். பரதன் கேகைய நாட்டுக்குச் செல்லும்பொழுது சத்துருக்கன் உடன் செல்கிறான். தசரதனுடைய மரணத்திற்குப் பின், அயோத்திக்குத் திரும்புமாறு பரதனுக்கு வசிட்டன் செய்தியனுப்ப, அவ்வாறே பரதன் அயோத்திக்குத் திரும்பும்போது சத்துருக்கனும் உடன் வருகின்றான். வரும் வழியில், கோசல நாட்டின் அவல நிலையை இருவரும் காண்கிறார்கள். அந்த நிலையைச் சத்துருக்கனுக்குக் காட்டி, 'துயர நிகழ்ச்சி ஏதோ நடந்திருக்க வேண்டும்' என்று பரதன் சொன்ன போது, 'பல சம்பவங்கள் நடந்திருக்க வேண்டும்' என்ற ஊகத்தைச் சத்துருக்கன் தெரிவிக்கிறான். பின்னர், தசரதனுக்குரிய ஈமக்கடன்களைச் சத்துருக்கனே செய்கிறான். காட்டுக்குச் சென்று மீண்டும் இராமனை அயோத்திக்கு அழைத்து வருவதற்குப் படைகள் எழவேண்டும் என்று அறிவிக்குமாறு பரதன் சொல்ல, சத்துருக்கன் அப்படியே அறிவிக்கிறான். பரதனோடு சத்துருக்கன் இராமனைத் திரும்பி அழைத்துவரச் சித்திரகூடத்திற்குச் செல்கிறான். அப்படிப் புறப்படும்போது உடன்வருகிற கூட்டத்தில் மந்தரையைக் கண்ட சத்துருக்கன் அவளைப் பற்றுகிறான். அதனைக் கண்ணுறும் பரதன், அவளுக்கு எத்தகைய தீங்கும் செய்ய வேண்டா எனச் சத்துருக்கனைச் சமாதானப் படுத்துகிறான். கதையின் இறுதியில், இராமன் கொடுத்த வாக்குப்படி குறித்த காலத்தில் திரும்பி வரவில்லை என்பதால், தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி, பரதன் சத்துருக்கனை வரவழைத்து, ஆட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்கிறான். சத்துருக்கன் அப்படிச் செய்ய மறுக்கிறான். இறுதியில் இராமன் அயோத்தி திரும்பின போது சத்துருக்கன், இராமன், இலக்குவன், சீதை ஆகியோரை வணங்குகிறான். பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் இராமன் தன்னுடன் வந்தவர்கள் அனைவரையும் அறிமுகப்படுத்தி வைக்கிறான். இராமனுடைய முடிசூட்டு விழாவின்போது இலக்குவனுடன் சேர்ந்து கவரி வீசுகிறான். இந்த அளவுக்குத்தான் கம்பனுடைய இராம காதையில் நாம் சத்துருக்கனைப் பார்க்கிறோம்.

கேகைய நாட்டிலிருந்து அயோத்திக்குத் திரும்பிய பிறகு, தசரதன் இறந்து கிடப்பது கண்டும், இராமன் காட்டுக்குச் சென்று விட்டான் என்பதைக் கேட்டும், பரதன் பட்ட பெருந்துயரைப் பல பாடல்களில் கவிச் சக்கரவர்த்தி வருணிக்கிறான். ஆனால் சத்துருக்கனைப் பற்றி இங்கு ஒரு வார்த்தைகூட இல்லை. தன் காரணமாகவல்லவா இராமன் காட்டுக்குப் போகவும் தசரதன் இறக்கவும் நேர்ந்தது என்ற கழிவிரக்கம் பரதனுக்கு இருந்தது என்பது உண்மையே. அத்தகைய எண்ணம் சத்துருக்கனுக்கு இருந்திருக்க இடமில்லைதான் என்றபோதிலும், தமையன் கானகம் சென்றுவிட்டான் என்பதுபற்றியும், தந்தை விண்ணுலகு எய்திவிட்டான் என்பது பற்றியும், பரதனுக்கு இருந்ததைப்போல, சத்துருக்கனுக்கும் துக்கம் இல்லாமலா இருந்திருக்கும்? இராமனைத் திரும்பி அழைத்து வருவதற்காகப் பரதன் கானகம் சென்றபொழுது அவன் தரையில் படுத்து உறங்கினான் என்பதைக் குகனிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டபோதும் இராமனைத் தவக்கோலத்தில்கண்ட போதும் பரதன் நொந்து நைந்து உருகுகிறான். உடனிருக்கும் சத்துருக்கனிடத்தும் அத்தகைய உணர்ச்சிகள் தோன்றாமலா இருந்திருக்கும்? அப்படி இராமனைத் திரும்பி அழைத்துக் கொண்டு வரச் சென்றவிடத்து பரத்துவாச முனிவன் ஓமம் செய்து சேனைக்கு விருந்தமைக்கிறான். சேனையோர் அனைவரும் பெரு மகிழ்ச்சியில் மூழ்கி இன்பம் நுகர்கின்றனர். அப்பொழுது பரதன் வெறும் காய்களையும் கிழங்குகளையும் புசித்துத் தரையில் படுத்து நாளைக் கழித்தான். இதனைக் கம்பன்,

> 'இன்னர் இன்னணம் யாவரும், இந்திரன்
> துன்னு போகங்கள் துய்த்தனர்; தோன்றல்தான்,
> அன்ன காயும், கிழங்கும் உண்டு, அப் பகல்
>
> பொன்னின் மேனி பொடி உறப் போக்கினன்'

என்று பாடுகிறான். பரதன் மாத்திரம்தானா இப்படிச் செய்தான்? உடனிருந்த சத்துருக்கன் அப்படிச் செய்யவில்லையா? பரதன் இப்படி இருக்க, சத்துருக்கன் மாத்திரம் இந்திரன் துன்னு போகங்கள் துய்த்தானா? நிச்சயமாக இல்லை. பரதன் செய்ததையே சத்துருக்கனும் செய்திருப்பான் என்பது திண்ணம். கதையின் போக்குக்குப் பரதன் செய்ததைச்சொல்ல வேண்டியது அவசியமாகிறது. சத்துருக்கன்செய்ததைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆகையால்தான் அது சொல்லப்படவில்லை. ஒருவேளை அதுபற்றிக் கவிஞன் கூறினால், அது 'மற்றொன்று விரித்தல்' என்ற குற்றமாகிவிடும்.

இப்படியாக மிகச் சிறிய அளவிலேயே சத்துருக்கனை நாம் காதையில் கண்ட போதிலும், அவனைக் காட்டும்பொழுது தான் ஆளும் சொற்செறிவினால் சத்துருக்கனுடைய பெருமையைக் கம்பன் நிலைநிறுத்தி விடுகிறான். அவன், இராமன் பரதன் இலக்குவன் ஆகியோருடைய தம்பி என்பதையும் நினைவுபடுத்தி விடுகிறான்.

சுமித்திரை, சத்துருக்கனை ஈன்றெடுத்ததை,

> 'படம் கிளர் பல்தலைப் பாந்தள் ஏந்துபார்
> நடம் கிளர் தர, மறை நனி மகிழ்ந்திட,
> மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட,
> விடம் கிளர் விழியினள் மீட்டும் ஈன்றனள்'

என்று கவிச் சக்கரவர்த்தி கூறுகிறான். இதிலே சத்துருக்கனைப் பற்றிக் கவிஞன், விசேஷமாக எதுவும் சொல்லிவிடவில்லை. அநேகம் தலைகளை உடைய ஆதிசேஷன் தாங்கிக் கொண்டிருக்கின்ற பூமியானது இன்பக் கூத்தாடவும், வேதங்கள் மிகுந்த மகிழ்ச்சி

யடையவும் சத்துருக்கனைச் சுமித்திரை ஈன்றாள் என்று மாத்திரம் கூறுகிறான். அப்படிக் கூறும்போது கூட, சத்துருக்கனுடைய பிறப்பால் பூமி ஏன் மகிழ்ச்சியடைய வேண்டும்? என்று வெளிப்படையாகவோ குறிப்பாகவோ கவிஞன் கூறவில்லை. கவிஞன் பின்னர்க் கதையினைச் சொல்லிக் கொண்டு போகிற போக்கிலுங் கூட, பூமியினுடையவும் மறைகளுடையவும் இந்த ஆனந்தத்துக்கும் மகிழ்ச்சிக்குமான காரணத்தை வெளிப்படையாகக் காண்பதிற்கு இல்லை. சத்துருக்கனுக்கு வசிட்டன் நாமம் சூட்டியதை,

''முத்து உருக்கொண்டு செம்முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழிலுடைய இவ் ஒளியால்
எத்திருக்கும் கெடும் என்பதை எண்ணு
'சத்துருக்கன்' எனச் சாற்றினன் நாமம்''

என்று கவிச் சக்கரவர்த்தி பாடுவான். முத்துக்கள் ஒரு குழந்தை வடிவம் பெற்றுச் செந்தாமரை மலர்கள் தன்னிடம் மலரப்பெற்றதை ஒத்திருக்கும் அழகையுடைய ஒளிமயமான இக் குழந்தையால் எல்லாப் பகைகளும் அழியும் என மனத்தில் நினைத்து, 'சத்துருக்கன்' என்ற பெயரை வசிட்டன் சூட்டினான் என்பது பாட்டின் கருத்து. குழந்தையினுடைய நிறமும் எழிலும் ஒளியும் முதலில் கூறப்படுகின்றன. பின்னர், அவனால் பகைகள் அனைத்தும் அழியும் என்று வசிட்டன் நினைத்தது எடுத்துக் காட்டப்படுகிறது. 'சத்துருக்கன்' என்ற வடமொழிப் பெயருக்கு, சத்துருக்களை அழிப்பவன் என்று பொருள். எனவே தான் மனத்தில் எண்ணியதற்கு ஏற்ப வசிட்டன் பெயரிட்டுள்ளான். ஆனால் இராமகாதையில் சத்துருக்கன் எந்தப் பகையை அழித்தான்?

பின்னால் வரப்போவதை முன்னாலே கோடிட்டுக் காட்டுவது ஒரு கவிஞனின் சிறப்பியல்புகளில் ஒன்று. இராமன் பிறந்ததைக் குறிப்பிடும் கவிஞன்,

'சித்தரும் இயக்கரும் தெரிவைமார்களும்
வித்தக முனிவரும், விண்ணுளோர்களும்
நித்தரும், முறைமுறை நெருங்கி ஆர்ப்புறத்
தத்துறல் ஒழிந்துநீள் தருமம் ஓங்கவே'
..............
அருமறைக்கு உணர் அரும் அவனை - அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து எழில் காட்டும் சோதியைத்
திருஉறப் பயந்தனள் - திறம் கொள் கோசலை'.

என்று பாடுவான். இராமனுக்கு வசிட்டன் பெயர் வைத்ததையும்,

"கரா மலைய, தளர் கைக் கரி எய்த்தே,
அரா அணையில் துயில்வோய்! என, அந்நாள்
விராவி, அளித்தருள் மெய்ப் பொருட்கே
'இராமன்' எனப் பெயர் ஈந்தனன் அன்றே"

என்றே பாடுவான். இப்படிப் பாடுவதன்மூலம் கவிஞன் இராமனுடைய அவதார இரகசியத்தையும் நோக்கத்தையும், பின்னர், முனிவருக்கும் வீடணனுக்கும் அபயமளித்ததையும், அரக்கரை அழித்து, அல்லாதார் துன்பத்தை ஒழித்து, அவர்களை மகிழ்வுறச் செய்ததையும் குறிப்பாக முன்கூட்டியே எடுத்துக் கூறிவிடுகிறான்.

பரதனின் பிறப்பைப் பாடப்போந்த கவிஞன்,

'ஆசையும், விசும்பும், நின்று அமரர் ஆர்த்து எழ
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துற,
பூசமும் மீனமும் பொலிய, நல்கினாள்
மாசு அறு கேகயன் மாது மைந்தனை'

என்றும், அவனுக்கு வசிட்டன் பெயரிட்டதை,

''கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப் பொருள் மெய்ந்நெறி கண்ட
'பரதன்' எனப் பெயர் பன்னினன் அன்றே"

என்றும் பாடுவான். இவ்விரு பாட்டுக்களிலும் மிகுந்து நிற்பவை பரதனுடைய மறைப் பொருள் மெய்ந்நெறி கண்ட தன்மையும், அதன் காரணமாக எல்லோராலும் வணங்குதற்குரிய சிறப்பைப் பெற்றமையுமே ஆகும். இவையும், பரதன் பின்னால் செய்யப் போவதை முன் கூட்டி உணர்த்துவதாகவே அமைந்திருக்கின்றன. இலக்குவனின் பிறப்பை,

'தளை அவிழ் தருவுடைச் சயில கோபனும்
கிளையும், அந்தரமிசைக் கெழுமி ஆர்ப்புற,
அளைபுகும் அரவினோடு அலைவன வாழ்வுற,
இளையவற் பயந்தனள், இளைய மென் கொடி'

என்றும், அவனுக்கு வசிட்டன் நாமகரணம் செய்ததை,

'உலக்குநர் வஞ்சகர்; உம்பரும் உய்ந்தார்;
நிலக்கொடியும் துயர் நீத்தனள்; இந்த,
விலக்க அரு மொய்ம்பின் விளங்கு ஒளி நாமன்,
'இலக்குவன்' எனச் சாற்றினன் நாமம்'

என்றும் கம்பன் பாடுகிறான். இங்குங்கூடக் கவிஞன், இலக்குவன், பின்னர்க் கோடிக்கணக்கான அரக்கரைக் கொன்று குவித்துப் பூமியின் பாரத்தைக் குறைக்கப் போவதையும், இந்திரஜித்தைக் கொன்று தேவேந்திரனையும் தேவரையும் வாழ்விக்கப் போவதையும், அவற்றையெல்லாம் சாதிப்பதற்குக் காரணமாகவிருந்த இலக்குவனுடைய மொய்ம்பினையும் முன்கூட்டியே எடுத்துக் காட்டி விடுகிறான். சத்துருக்கன் விஷயத்திலும் கவிஞன் இப்படிச் செய்திருக்கிறான் என்று சொல்ல முடியுமா? அரக்கரோடு இராமன் செய்த போரிலே சத்துருக்கனுக்குப் பங்கே இல்லை. சத்துருக்கன் வேறு எந்தப் போரிலும் பங்கெடுத்துக் கொண்டதாகவும் கம்பன் தன் இராம காதையில் எங்கேனும் கூறவில்லை. அப்படியிருக்க, 'எத் திருக்கும் கெடும்' என்ற வசிட்டனுடைய எண்ணத்துக்கும், பூமியுடையவும் வேதங்களுடையவும் மகிழ்ச்சிக்கும் என்னதான் அடிப்படை? இங்கு உரையாசிரியர்கள், அகப்பகை, புறப்பகை என்று இரண்டு உண்டு. பரதனுக்குப் பணிவிடை செய்தலையன்றி வேறெதிலும் நாட்டமின்றி இருந்ததினால் சத்துருக்கன் அகப்பகை வென்றவன் ஆகிறான். இலவணாசுரன் முதலியவர்களை அழித்ததினால் அவன் புறப்பகையையும் வென்றவன் ஆகிறான் என்று கூறுகிறார்கள். ஆனால், சத்துருக்கன் இலவணாசுரனை வென்றதோ கம்பனுடைய இராம காதையில் இல்லை. ஆக, அகப்பகை என்பதற்கு உரையாசிரியர் கூறும் விளக்கத்தை ஒப்புக் கொண்டால், சத்துருக்கன் அகப்பகையை வென்றான் என்பது மாத்திரமே நிற்கும். 'எத்திருக்கும் கெடும்'- அதாவது எத்தகையதான பகையும் அழியும் என்றன்றோ வசிட்டன் நினைத்தான்? இனி, சத்துருக்கனின் பிறப்பினால் பூமியும் வேதங்களும்

மகிழ்ச்சி கொண்டதற்குக் காரணம் உண்டா என்பதை இறுதியில் காண்போம்.

தசரத புத்திரர் நால்வரும் சதுர்மறை என வளர்ந்து வருகின்றனர். வசிட்டன் அவர்களுக்கு முறையினோடு ஒளிதரு கலையும் கற்றுத் தருகிறான். யானை, இரதம், குதிரை ஆகிய ஏற்றங்களையும் படைக் கலங்களையும் போரில் உபயோகிக்கும் முறையையும் வில் வித்தையையும் கற்றுக் கொள்கிறார்கள். அருமறை முனிவரும், அமரரும், அவனித் திருவும், நகருறை சனமும் அரசகுமாரர்களைப் பெரிதும் விரும்புகிறார்கள். இராமனும் இலக்குவனும் எங்குச் செல்லினும் இணை பிரியாமலே இருக்கிறார்கள். அவர்களைப் போலவே பரதனும் சத்துருக்கனும் இணைபிரியாமல் இருக் கிறார்கள். இதனைக் கவிஞர்,

“. ..................எனை ஆள்
வரதனும் இளவலும் என மருவினரே”

என்று கூறுவான்.

அடுத்து சத்துருக்கனைப் பற்றிய குறிப்பு நமக்குக் கிடைப்பது, இராம இலக்குவரோடு மிதிலை சென்ற விசுவாமித்திரன் ஜனகமகாராஜனுக்குத் தசரதனுடைய முன்னோர்களைப் பற்றியும், தசரதனைப் பற்றியும் அவன் புத்திரரைப் பற்றியும் விரித்துக் கூறும் சந்தர்ப்பத்தில் தான். தசரதன் புதல்வர்களைப் பெற்றதைக் குறிப்பிடும் பொழுது, இலக்குவனையும் சத்துருக்கனையும் சுமித்திரை ஈன்றெடுத்ததை,

“அருவலிய திறலினர் ஆய், அறம் கெடுக்கும் விறல் அரக்கர்
வெருவரு திண் திறலார்கள், வில் ஏந்தி வரும் மேருப்
பருவரையும், நெடு வெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையும், இவ் இருவர்க்கு இளையாளும் ஈன்று எடுத்தாள்“

என்று பாடுவான். இங்கு இருவரையும் ஒருங்கு சேர்த்தே விசுவாமித்திரன் வாயிலாகக் கவிஞன் குறிப்பிடுகிறான். இருவருமே பிறரால் வெல்லுதற்கரிய திறன் வாய்ந்தவர்கள் என்றும், அறம் கெடுக்கும் அடல் அரக்கர் அஞ்சுதற்குக் காரணமான திண்திறலார் என்றும், பெரிய மேருமலையும் நீண்டு பருத்த கயிலையங் கிரியும் வில்லெடுத்ததைப் போல் தோன்றுபவர்கள் என்றும் அவர்களை வர்ணிக்கிறான். இலக்குவனும் சத்துருக்கனும் முறையே பொன்னிறமும் வெண் ணிறமும் படைத்தவர்கள் என்பதற்காக, அவர்களை முறையே மேரு மலைக்கும் கயிலையங்கிரிக்கும் ஒப்பிட்டுப் பிரித்துக் காட்டுகிறான் என்பதைத் தவிர, அவர் களிடையே வேறெந்த வேறுபாடும் இருப்பதாகக் கவிஞன் கூறவில்லை. ஆனால், அறம் கெடுக்கும் அடல் அரக்கர் சத்துருக்கனுக்கு ஏன் அஞ்ச வேண்டும் என்பது, முன்னர் எடுத்துக் காட்டியதுபோல, பின் வரும் கதைப் போக்கிலிருந்து தெரியவில்லை. தசரத புத்திரர் நால்வரும்,

‘தலை ஆய பேர் உணர்வின் கலை மகட்குத் தலைவர் ஆய்,
சிலை ஆயும் தனு வேதம் தெவ்வரைப் போல் பணி செய்யக்
கலை ஆழிக் கதிர்த் திங்கள் உதயத்தில் கலித்து ஓங்கும்
அலை ஆழி என வளர்ந்தார் மறை நான்கும் அனையார்கள்’

பின்னர், இராமன், சிவதனுசை ஒடித்த பிறகு மிதிலையிலிருந்து வந்த செய்தி கேட்டு, தசரதன் மிதிலையை நோக்கிப் பரிவாரங்களுடனும் குடும்பத் துடனும் புறப்பட்டுச் செல்கிறான். அப்போது பரதனும் சத்துருக்கனும் உடன் செல்கிறார்கள். அப்படி அவர்கள் சென்றதை,

‘திருவளர் மார்பர். தெய்வச் சிலையினர், தேரர், வீரர்,
இருவரும், முனி பின் போன இருவரும், என்ன, போனார்’

என்று கூறுவான் கவிஞன். இங்குக் கூர்ந்து நோக்கத் தக்கது என்னவென்றால், பரதனையும் சத்துருக்கனையும் சேர்த்துக் கூறும்போதெல்லாம் அவர்கள் இருவரும் இராம இலக்குவரைப் போல இருந்தார்கள் என்று கவிஞன் கூறுவான்; ஒருதாய் வயிற்றுப் பிறந்த இலக்குவனையும் சத்துருக்கனையும் சேர்த்துப் பேசும் போதெல்லாம் அவ்விருவரும் ஒரு தன்மையர் என்றே கவிஞன் கூறுவான்.

இப்படிச் சென்ற பரதனும் சத்துருக்கனும் மிதிலையில் இராமனையும் இலக்குவனையும் கண்டபோது, தம்பியர் அண்ணன்மாரை வணங்குகின்றனர். இதனைக் கம்பன்,

‘கரியவன் பின்பு சென்றவன், அருங்காதலின்
பெரியவன் தம்பி, என்று இனையது ஓர் பெருமை அப்
பொரு அருங்குமரர், தம் புனை நறுங் குஞ்சியால்,
இருவர் பைங்கழலும், வந்து, இருவரும் வருடினார்’

என்று பாடுவான். இலக்குவனைக் குறிப்பதற்கு ‘கரியவன் பின்பு சென்றவன்’ என்ற சொற்றொடரையும் சத்துருக்கனைக் குறிப்பதற்கு, ‘அருங்காதலின் பெரியவன் தம்பி’ என்ற சொற்றொடரையும் கவிஞன் ஆளுவதன் நயம் கூர்ந்து நோக்கத்தக்கது. சத்துருக்கன் பரதனுக்குத் தான் தம்பி என்று கூறுமாப் போல், ‘அருங்காதலிற் பெரியவன் தம்பி’ என்ற சொற்றொடர் அமைந்திருக்கிறது. ‘அருங்காதலிற் பெரியவன்’ என்பதைப் போல் வேறு எந்தச் சொற்றொடரும் பரதனின் உண்மைத் தன்மையை விளக்கிவிட முடியாது.

இராமன், கோலம் புனைந்து, தேர் ஏறித் திருமண மண்டபத்திற்குச் செல்லும்போது, பரதன் தேரோட்ட, இலக்குவனும் சத்துருக்கனும் கவரி வீசுகிறார்கள். இதனைக் கம்பன்,

‘அனையது ஓர் தேரினில், அருணன் நின்றெனப்
பனிவரு மலர்க்கண் நீர்ப் பரதன் கோல்கொளக்
குனிசிலைத் தம்பியர் இருவரும் குழைந்து
இனிய பொற்கவரி கால் இயக்க, ஏகினான்’

என்று கூறுவான். இலக்குவனும் சத்துருக்கனும் இப்போது செய்கிற இதே வேலையைத்தான், பல ஆண்டுகளுக்குப் பின்னால் இராமன் முடிசூட்டிக் கொள்ளும் போதும் செய்கிறார்கள். அங்கும் ‘இருவரும் கவரி வீச’ என்றே கவிஞன் கூறுவான். ஒரே ஒரு வேறுபாடு இப்போது மணக்கோலத்துடன் தேரேறிச் செல்கிற அண்ணனுக்குக் கவரி வீசுகிறார்கள். பின்னே, அரக்கரை அழித்து வெற்றித் திருமகளை அயோத்தி திரும்பி முடிசூட்டிக் கொள்வதற்காக அரியணையில் அமர்ந்திருக்கும் மன்னனுக்குக் கவரி வீசப் போகிறார்கள். இரண்டு நிகழ்ச்சிகளுக்குமிடையே கிட்டத் தட்டப் பதினாயிரம் பாடல்கள் இருக்கின்றன.

அப்படியிருந்தும் கவிஞன் தான் முன்னர்ச்சொன்னதை மறந்துவிடவில்லை. கம்பனின் தனித்தன்மைக்கு இதுவுமோர் எடுத்துக்காட்டு.

இராமனுடைய திருமணம் முடிகிறது. தசரதனுடைய மற்றப் புதல்வர் மூவரும் ஊர்மிளை முதலானோரை மணந்து கொள்கின்றனர். பின்னர், எல்லோரும் அயோத்தி திரும்புகிறார்கள். தசரதச் சக்கரவர்த்தி முன்னே செல்கிறான். மிதிலை நன் மாநகர் உறைவார் மனம், மிகுதியாகப் பின்னே செல்கிறது. இவை இரண்டுக்கும் நடுவே,

> ''தன் ஏர் புரை தரு தம்பியர் தழுவிச் செல, மழைவாய்
> மின்னே புரை இடையாளொடும், இனிது ஏகினன் வீரன்''

இடையிலே பரசுராமன் எதிர்ப்படுகிறான். அவனுடைய அகந்தை இராமனால் அடக்கப்பட்ட பிறகு எல்லோரும் அயோத்தி சேர்கிறார்கள். அப்படிச் சேர்ந்து அயோத்தியில் இருக்கும் வேளையில் தசரதன் பரதனை அழைத்து, கேகய நாட்டு மன்னன் அவனைக் காண விரும்புவதால், கேகய நாட்டுக்குச் சென்று வருமாறு கூறுகிறான். அப்படியே பரதன் 'இளையவன் தன்னொடும்' கேகய நாடு போய்ச் சேருகிறான். இவ்வளவுதான் நாம் சத்துருக்கனைப் பால கண்டத்தில் காண்பது.

அடுத்து, அயோத்தியா காண்டத்தில் அவனைச் சிறிதளவு காண்கிறோம். தசரதன் இறந்த பிறகு பரதனுக்கு அனுப்பப்பட்ட ஓலையின்படி பரதன் அயோத்திக்குத் திரும்புகிறான். வழக்கம்போல் சத்துருக்கனும் உடன் வருகிறான். அவன் அப்படிப் புறப்பட்டுச் சென்றதைக் கம்பன்,

> ''தழுவு தேரிடைத் தம்பியொடு ஏறினன்;
> பொழுதும் நாளும் குறித்திலன் போயினன்''

என்று கூறுவான். வந்து கொண்டிருக்கும் போது அயோத்தியை நெருங்கியவுடன், அவ் வளநகர் பொலிவிழந்து கிடப்பதைக் காண்கிறான். அதைக் குறித்துத் தன் இளவலாகிய சத்துருக்கனைக் கேட்கிறான்.

> 'அன்னதன்மை அகநகர் நோக்கினன்
> பின்னை, அப் பெரியோர்தம் பெருந்தகை
> மன்னன் வைகும் வளநகர் போலும் ஈது?
> என்ன தன்மை? இளையவனே! என்றான்'

மேலும், சத்துருக்கனிடத்திலே, 'இவ் அயோத்தி மாநகரம் நம்மவரால் வெல்லப்பட்ட பகைவரின் ஊரைப் போல மெலிந்தும், திருமால் இலக்குமியுடனே நீங்கிவிட்ட பெரிய திருப்பாற்கடலை ஒத்தும் உள்ளதே! பார்' என்றும் கூறுகிறான். அதைக் கேட்ட சத்துருக்கன் இரு கை கூப்பி இறைஞ்சி,

> ''.....................எய்தியது
> ஒரு வகைத்து அன்று உறுதுயர்; ஊழிவாழ்
> திருநகர்த் திரு தீர்ந்தனள்! 'ஆம்' என்றான்.''

இப்படிக் கூறிய சத்துருக்கனைக் கவிஞன் "குருமணிப் பூண் அரசிளங் கோளரி" என்று குறிப்பிடுவான். 'கோளரி' என்பதற்கு, 'கொல்லும் தன்மையுடைய சிங்கம்' என்பது பொருள். சிறந்த இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட அணிகலன்களை உடைய சிங்கம் போன்ற இளையவனாகிய சத்துருக்கன் என்பது இவ்வடியின் பொருள். பரதனிடத்துச் சத்துருக்கன் இவ்வாறு சொல்லியதை "இரு கைகூப்பி இறைஞ்சினன்" என்று கவிஞன் குறிப்பிடுவான். பரதனிடத்துச் சத்துருக்கன் பாசத்தைவிட மரியாதையே அதிகமாக வைத்திருந்தான் என்பதையே இந்தச் சொற்றொடர் குறிக்கிறது. சத்துருக்கன் இங்குப் பேசுவதுதான் காப்பியத்திலேயே முதன்முறையாக அவன் பேசுவது. இந்தப் பேச்சிலே அவனுடைய பண்பும் தன்மையும் ஓரளவு வெளிப்படுகின்றன. 'நேர்ந்திருக்கிற துயரம் ஒருவகைத்து அன்று' என்ற அவனுடைய பேச்சிலேயே அவனுடைய அறிவுத் திறனும், யூகிக்கும் சக்தியும் தெரிகின்றன. நேர்ந்திருப்பதோ கைகேயி முறையற்ற இரண்டு வரங்களைத் தசரதனிடத்துக் கேட்டுப் பெற்று, அதன் காரணமாக இராமன் கானகம் செல்ல, தசரதன் உயிர் நீக்க, நாடு மன்னன் இன்றி இருக்கிறது. நகரின் பொலிவிழந்த நிலையைக் கண்டதிலிருந்தே பல துயரங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என அவன் யூகித்து விடுகிறான். அது போலவே 'ஊழிக்காலமளவும் அழியாது வாழ்வதான அயோத்தியிலிருந்து இலக்குமி நீங்கினள் போலும்' என்ற அவனுடைய பேச்சில் அவனுடைய வேறொரு பண்பும் வெளிப்படுகிறது. திருமால் இலக்குமியோடு நீங்கிய பாற்கடலை ஒத்து அயோத்தி இருக்கிறது. என்று சொன்ன பரதனிடத்து 'இந் நகரைவிட்டு இலக்குமி நீங்கினள் போலும்' என்று சத்துருக்கன் சொல்கிறான். பரதனுடைய கூற்றில் இராமனும் சீதையும் நகரை விட்டு நீங்கின குறிப்பு இருக்கிறது. சத்துருக்கனுடைய பேச்சிலோ சீதை மாத்திரமே தொனிக்கிறது. காரணம் என்னவென்றால், இலக்குவனுக்கு இராமனே எல்லாமாக இருந்தது போல், சத்துருக்கனுக்குப் பரதனே எல்லாமாக இருந்தான். ஆகவேதான் இராமனுடைய நகர் நீக்கம் அவனுக்கு அவ்வளவு பெரிதாகப் படவில்லை. இலக்குமியுடைய நீக்கமே அவன் கருத்தில் நின்றது. ஏனெனில், இலக்குமியுடைய நீக்கத்தை யாருமே விரும்புவதில்லை.

அடுத்து, நாம் சத்துருக்கனைக் காண்பது உணர்ச்சிகளை நெகிழ்விக்கும் ஒரு கட்டத்தில். தசரதனுக்கு ஈமக்கடன்கள் செய்யப் போன பரதனைத் தடுத்து விட்டு, சத்துருக்கனைக் கொண்டு ஈமக் கடன்களைச் செய்யச் சொல்கிறான் வசிட்டன். பின்னர் பத்து நாட்களும் சாத்திர முறைப்படி சடங்குகளைச் செய்கிறான். இவை எல்லாம் முடிந்த பிறகு, பரதன் காட்டுக்குச் சென்று நாட்டை ஆள்வதற்காக இராமனை அழைத்து வர வேண்டுமென்ற தன் எண்ணத்தைத் தெரிவிக்கிறான். அதற்காகச் சேனையை எழுப்புகின்ற பணியைச் சத்துருக்கனிடத்து ஒப்படைக்கிறான். சேனைகள் புடை சூழக் காட்டுக்குப் புறப்படுகிறான் பரதன்.

(தொடரும்)

# திருச் செங்குன்றூர் திருச்சிற்றாற்றங்கரையான்

திரு டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் எம்.ஏ, பிஎச்.டி

பரமபதனாகிய நாராயணன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு, அவரவருடைய செயல்கட்கும் ஏவுபவனாக இருக்கின்றான் என்பது வைணவ சமயக் கோட்பாடு இக்கருத்தினை எல்லா ஆழ்வார்களுமே தத்தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இந்நிலையில் எம்பெருமான் நாம் நல்வினை காரணமாகச் சுவர்க்கத்தை அடைதல், தீவினை காரணமாக நரகில் புகுதல், நல்வினை தீவினை ஆகிய இரண்டன் காரணமாகக் கருப்பத்தை அடைதல் முதலிய எல்லா நிலைகளிலும் நமக்குத் துணையாய் இருப்பான் என்றும்; அழகே குடிகொண்டுள்ள மங்களமான திருமேனியுடன் நமக்குத் தியான ருசி பிறக்கும் போது தியானத்திற்கு உரியவனாதற்காகவும், நம்மைக் காப்பதற்காகவும், நமது இதய கமலத்தில் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய்ப் பெரிய பிராட்டியாருடன் கட்டை விரலளவாய் எழுந்தருளியிருப்பான் என்றும் வைணவ நூல்கள் பகர்கின்றன.

அந்தர்யாமித்துவத்தைத் திருமழிசையாழ்வார் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்:

> " நின்றது எந்தை ஊரகத்து, இருந்தது எந்தை பாடகத்து
> அன்றுவெஃக ணைக்கிடந்த (து) என்னிலாத முன்னெலாம்,
> அன்று நான்பி றந்திலேன்பி றந்ததன்பின்ம றந்திலேன்,
> நின்றதும் இருந்ததும்கி டந்ததும் என் நெஞ்சுளே "

ஊரகம், பாடகம் என்பன காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயிலின் வெளிப் பிராகாரத்திலுள்ள சன்னிதிகள்; வெஃகணை என்பது; திருவெஃகா; காஞ்சியிலுள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சன்னிதி. நம்போலியர்களிடம் கைங்கரியக் கடனைப் பெறுவதற்காகவே ஊரகத்தில் நின்று பார்க்கின்றதாகவும், பாடகத்தில் வீற்றிருந்து பார்க்கின்றதாகவும், திருவெஃகாவில் சாய்ந்து பார்க்கின்றதாகவும் கருதுகின்றார் ஆழ்வார். தான் ஞானப் பிறப்பை அடைவதற்கு முன்பெல்லாம் இங்ஙனம் செயல் புரிந்த எம்பெருமான், அதனை அடைந்த பிறகு இச்செயல்களைத் தனது இதய கமலத்தில் மேற்கொள்வதாகக் கருதுகின்றார் அவர். விஷ்ணுவை என்றும் இடையறாது தன் மனத்தில் நிலைநிறுத்துதலால் 'விஷ்ணுசித்தர்' என்ற திருநாமத்துடன் விளங்கும் பெரியாழ்வார்,

> " அரவத்து அமளியி னோடும் அழகிய பாற்கட லோடும்
> அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து
> பரவைத் திரைபல மோதப் பள்ளிகொள் கின்ற பிரான் "

என்று உளம் மகிழ்ந்து கூறுவர். "உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்" என்றும், "பனிக்கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்து என், மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ" என்றும் பேசுகின்றவர் அன்றோ இவர்?

ஆழ்வார்களுள் நாயகமாய் விளங்கும் நம்மாழ்வாரும், அந்தர்யாமித்துவத்தைப் பல இடங்களில் பறைசாற்றுவர். ஒரிடத்தில் எம்பெருமான் தன் சிந்தையுள் இருப்பதை இவ்வாறு பேசுகின்றார்; அர்ச்சை வடிவிலுள்ள எம்பெருமான் தன் இதயமகலத்தில் வீற்றிருப்பதாகப் பகர்கின்றார். பாசுரம் இது:

> " திருச்செங்குன் றூரில் திருச்சிற்றா றதனுள்
> கண்டஅத் திருவடி என்றும்,
> திருச்செய்ய கமலக் கண்ணும்செவ் வாயும்
> செவ்வடி யும்செய்ய கையும்,
> திருச்செய்ய கமல வுந்தியும் செய்ய
> கமலமார் பும்செய்ய வுடையும்
> திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்
> திகழஎன் சிந்தையு ளானே "

இதில் கட்டை விரல் பருமன் அளவு, தன் இதயகமலத்தில் வீற்றிருக்கும் வடிவழ்கை வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார். திருச்சிற்றாற்று எம்பெருமான் செந்தாமரை போன்ற 'கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்பெரிய வாய' திருக்கண்களையுடையவன்; அத்திருக்கண் நோக்கினால் பிறந்த உறவை நிலைநிறுத்திக் கொள்ளும் புன்முறுவல் பொலிந்த திருப்பவளத்தையுடையவன்; அந்தப் புன்முறுவலுக்குத் தோற்றவர்கள் வீழ்ந்து வணங்கத்தக்க திருவடிகளை உடையவன்; திருவடிகளில் வீழ்ந்தவர்களை எடுத்து அணைக்கும் திருக்கைகளை உடையவன்; அப்படி அணைக்கப் பெற்றவர்கட்கு நாடோறும் அனுபவிக்கத் தக்க தாய் அழகுக்கு எல்லையாய், 'முனிமாப் பிரம முதல்வித்தாய்த்' திகழும் திருநாபியையுடையவன்; சேதனர்கட்குப் பற்றாசாக இருக்கும் பெரிய பிராட்டியாருக்கு, இருப்பிடமாகவுள்ள திருமார்பையுடையவன்; இத்தகைய எம்பெருமான் திருமேனிக்கு ஏற்ற பீதக ஆடையைத் தரித்துக் கொண்டு அடியார்களின் அச்சம் தீரும்படி காப்புக்குக் குறிப்பாக இருந்துவரும் திரு அபிடேகமும் திவ்விய ஆயுதங்களும் விளங்க என்றும் இடைவிடாது தன் சிந்தையில் இருப்பதாகக் கூறுகின்றார் ஆழ்வார். இவரே பிறிதோரிடந்தில் தன் உள்ளத்தில் எம்பெருமானின் நிரந்தரக் குடியிருப்பை,

> " கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
> புல்லென் (று) ஒழிந்தன கொல்? ஏ பாவம் — வெல்ல
> நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான்
> அடியேன துள்ளத் தகம் "

என்று பேசினவர் அன்றோ?

திருச்செங்குன்றூரைப்பற்றி முன்னரே அறிந்துள்ளோம். திருவாறன்விளைத் திருப்பதி எம்

பெருமாளை முற்பகலில் சேவித்துப் பகலுணவிற்குள் திருச்செங்குன்றூரை அடைகின்றோம். உணவு விடுதியில் உணவு கொண்டு அங்கேயே இளைப்பாறுகின்றோம்.

மாலை ஐந்து மணி வரையில் காலம் செல்ல வேண்டுமே; கேரளத்தில் திருக்கோயில்கள் மாலை ஐந்து மணி வரையில் திருக்காப்பிடப் பெற்றிருக்கும் என்பதை நாம் அறிவோம். அந்தச் சிற்றூரில் தங்கி இளைப்பாற வசதி குறைவாக உள்ளதால் புகை வண்டி நிலையத்திலேயே வந்து நேரத்தைக் கழிக்கின்றோம். அந்நிலையமும் இயற்கைச் சூழலில் அமைந்திருப்பதால், இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புற்ற வண்ணம் பொழுது நன்கு கழிகின்றது. ஒழிந்த நேரத்தில் ஆழ்வார்கள் பாடலைப் படித்து அநுபவித்த வண்ணம் இருக்கின்றோம். மாலை நாலரை மணிக்குக் கைகால்களைச் சுத்தி செய்து கொண்டு திருக்கோயிலுக்குப் போகச் சித்தமாகின்றோம். இயற்கை அன்னையின் எழிலில் ஈடுபட்டவண்ணம் கோயிலை நோக்கி நடைகட்டுகின்றோம்.

கோயிலை நோக்கி வருங்கால் ஊருக்குள் புகுந்தே வருகின்றோம். ஊர் செழிப்பான ஊரே. "தென் திசைக்கு அணிகொள் திருச்செங்குன்றூர்" என்று ஆழ்வார் சிறப்பித்துள்ளதையும் நினைவு கூர்கின்றோம். அந்தக்காலத்தில் "மனக்கொள்சீர் மூவாயிரவர்" அந்த ஊரில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் எண்ணுகின்றோம். அவர்கள் செயயும் வேள்வியில் எழும் நறும்புகை விசும்பொளியையும் மறைத்திருக்க வேண்டும். இக்கருத்தினைச் சுட்டும்,

"நல்ல நான் மறையோர் வேள்வியும் மடுத்த
நறும்புகை விசும்பொளி மறைக்கும்"

என்ற பாசுரப் பகுதியையும் நினைவு கூர்கின்றோம். அக்காலத்தில் அவ்வூரில் வைணவர்கள் ஏராளமாக இருந்தனர் என்ற குறிப்பையும் பாசுரத்தின் மூலம் அறிகின்றோம்.

"கொடைப்பெரும் புகழார் இனையர் தன்ஆனுர்
கூரிய விச்சையோடு ஒழுக்கம்
நடைப்பலி இயற்கைத் திருச்செங்குன்றூர்"

என்பது இதனைக் குறிப்பிடும் பாசுரப்பகுதியாகும். ஊரிலுள்ள மாட கூடங்களைப் பார்த்து மகிழ்ந்த வண்ணம் கோயிலுள்ள திசையை நோக்கிப் புறப்படுகின்றோம்.

திருக்கோயில் ஊருக்குச் சற்றேக்குறைய இரண்டு பர்லாங்கு தொலைவில் ஓர் ஆற்றங்கரையில் அமைக்கப் பெற்றுள்ளது. நடைபாதையின் இருமருங்கும் உள்ள சோலைகளின் இயற்கை எழில்களைத் துய்த்த வண்ணம் ஆற்றங்கரையை நோக்கி நடக்கின்றோம். சிறிது தூரத்தில்,

"செறிகுலை வாழை கமுகுதெங் கணிசூழ்
திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு"

நம் கண்ணுக்குத் தென்படுகின்றது. சிறிது தொலைவில்,

"செங்கயல் உகளும் தேம்பனை புடைசூழ்
திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு"

என்று ஆழ்வார் கூறும் திருச்சிற்றாற்றையும் காண்கின்றோம். ஆற்றை நெருங்குவதற்கு முன்னரே சாலையோரத்தில் சற்று உயரமான இடத்தில் அகன்றதோர் இடப்பரப்பிலுள்ள திருக்கோயில் நம் கண்ணுக்குத் தட்டுப்படுகின்றது. முன்வாயில் நாற்புற மதிற்சுவர்கள் கட்டப் பெறாத நிலையில் - இடிந்து பாழடைந்த நிலையில் காணப்பெறுகின்றது. முன்வாயிலைக் கடந்து கோயிலை நண்ணுகின்றோம். திருக்கோயிலைக் குறுகும் போதே நம்மாழ்வாரின் பாசுரங்கள் நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன. இத்திருப்பதி எம் பெருமான் மீது நம்மாழ்வார் மட்டிலும் ஒரு பதிகம் அருளியுள்ளார்.

கண்ணன் பிறந்த பொழுதிலிருந்தே அவனைக் கொல்லக் கம்சன் பல்வேறு உபாயங்களை மேற்கொள்கிறான். வில்விழவு ஒன்று ஏற்படுத்தி அதனைக் காரணமாகக் கொண்டு அக்குரூரனை அனுப்பிக் கண்ணனைத் திருவாய்ப் பாடியினின்றும் மதுரைக்கு வரவழைக்கின்றான். கண்ணனும் பலராமனும் மதுரையை நோக்கி வருகின்றனர். வழியில் கண்ணனைக் கொல்லுவதற்கென்றே குவலயா பீடம் என்ற யானை மதுவூட்டி நிறுத்தப் பெற்றிருக்கின்றது. முதலில் கண்ணனால் அந்த யானையின் உயிர் செகுக்கப்பெறுகின்றது. மலையின் மீதுள்ள இரண்டு கொடுமுடிகளைத் தகர்ப்பது போல் கண்ணன் இந்த யானையின் கொம்புகளைப் பிடுங்கி யானையைக் கொன்று அதன்மீது இவர்ந்திருக்கும் பாகனையும் எமபுரத்திற்கு அனுப்புகின்றான். அரண்மனை வாயிலைக் குறுகும்பொழுது சாணூரன், முஷ்டிகன் என்ற இரண்டு மல்லர்கள் சிறுவர்களை எதிர்க்கின்றனர். கண்ணன் அந்த இரண்டு மல்லர்களையும் தொலைத் தொழிக்கின்றான்.

அத்தாணி மண்டபத்தினுள்ளே நுழைந்தவுடன் கம்சனைச் சூழ்ந்து போர்க்கோலத்துடனிருந்த அரசர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து அரியாசனத்திருந்த கம்சனின் உயிரையும் போக்குகின்றான். இத்தனைச் செயல்களையும் ஒருசேர முடித்த கண்ணன் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றில் அர்ச்சை வடிவமாக எழுந்தருளியுள்ளான். அந்தத் திருப்பதியே தனக்குப் புகலிடமாகும் என்று திருவுள்ளமாகின்றார் ஆழ்வார்.

"வார்கடா அருவி யானைமா மலையின்
மருப்பினைக் குவடு இறுத்து உருட்டி
ஊர்கொள் திண் பாகன் உயிர்செகுத்து அரங்கின்
மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேல்
போர்கடா அரசர் புறக்கிட மாடம்
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள்சிற் றாயன் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்றாறு எங்கள்செல் சார்வே"

என்பது ஆழ்வாரின் பாசுரம். யானையைக் கொன்ற பாலகிருட்டினனின் தீரச்செயலை நினைத்து,

"கும்பமிகு மதயானை மருப்பு ஒத்து, கஞ்சன்
குஞ்சிபிடித்து அடித்தபிரான்"

என்று பெருமிதங்கொண்டு பேசுவர் திருமங்கை மன்னர். நம்மாழ்வாரின் பாசுரத்தை நினைத்தே ஆசாரிய இருதயம் இந்தத் திவ்விய தேசத்தில் சூரம், வீரம் முதலிய குணங்கள் விளங்கும் என்கிறார்.

"மகாமதிகள் அச்சம்கெட்டு அமரும்
சௌர்யாதிகள், சிற்றாற்றிலே கொழிக்கும்"



என்பது சூத்திரம். மகாமதிகள்—விதுரன் போன்றவர்கள்! சௌர்யம்—சூரனது தன்மை. குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன், கம்சன் முதலானவர்களைக் கொன்று வெளிப்படுத்திய சூரத்தனம் முதலானவைகள் இந்தத் திவ்விய தேசத்தில் ஆற்றுக்குள்ளிருக்கும் மணி, முத்து முதலானவைகள் கரையில் கொழித்துத் தோற்றுமாறு போலே பிரகாசிக்கும் என்பது கருத்து.

அடுத்த பாசுரத்தில் எம்பெருமானின் தன்மையையும் பெருமையையும் பேசுகின்றார் ஆழ்வார்.

" எங்கள்செல் சார்வு யாமுடை அமுதம்
இமையவர் அப்பன்என் அப்பன்
பொங்குமூ உலகும் படைத்தளித் தழிக்கும்
பொருந்துமு உருவன்எம் அருவன் "

'எங்கள்" என்றும் 'யாமுடை' என்றும் பன்மையாகச் சொல்வதனால் ஆழ்வார் சம்பந்தம் பெற்ற நம்போலியரையும் அவர் உளப்படுத்திக் கூறுகின்றார் என்று கருதலாம். 'கேசவன் தமர்க்குப்பின்பு தனியரல்லரே' என்பது ஈடு. 'குன்றம் எடுத்த பிரான் அடியாரோடும், ஒன்றி நின்ற சடகோபன், என்று தன்னைக் குறிப்பிட்டவர் அன்றோ ? 'இமையவர் அப்பன்' என்று சொல்லி உடனே 'என் அப்பன்' என்று கூறுவதனால் நித்திய சூரிகளை அடிமை கொண்டாற்போல், தம்மையும் அடிமை கொண்டவன் என்று உரிமை கொண்டாடுகின்றார் ஆழ்வார். "குறைவற்றார்க்கும் ஸத்தா ஹேதுவாய் குறைவுக்கெல்லையரான எனக்கும் ஸத்தா ஹேதுவானவன்" என்பது ஈடு. நான்முகனுக்கு அந்தர்யாமியாக இருந்து படைப்புத் தொழிலை நடத்தியும், தானான தன்மையில் காத்தலைப்புரித்தும், உருத்திரனுக்கு அந்தர்யாமியாக இருந்து அழித்தல் தொழிலை மேற்கொண்டும் இருக்கும் எம்பெருமான் தனது அச்சத்தைப் போக்கித் தனக்குத் தாரகனாகவும் இருக்கின்றான் என்பது ஆழ்வாரது நம்பிக்கை. படைப்பு முதலான முத்தொழில்களையும் நடைபெறச் செய்பவன் என்ற கருத்து இன்னொரு பாசுத்திலும் வற்புறுத்தப் பெறுகின்றது.

" படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
பரம்பரன் சிவபிரான் அவனே
இடைப்புக்குஓர் உருவும் ஒழிவில்லை அவனே
புகழ்வில்லை யாவையும் தானே "

ஆக்கல், அழித்தல், அளித்தல் இவையெல்லாம் தான் இட்ட வழக்காக இருப்பவன்; எல்லாப் பொருள்களையும் உடலாகக்கொண்டு தான் ஆன்மாவாக இருப்பவன்; சேதனம் அசேதனம் என்ற வேறுபாடு இன்றி எல்லாம் அவனுக்கு உரிமையாகும். இவையாவும் புனைந்துரையன்று. உண்மையே என்கிறார் ஆழ்வார்.

திருச்சிற்றாற்று எம்பெருமானது பெருமைகளை இன்னும் பலவாறாகப் பேசி இனியராகின்றார் குருகூர் வள்ளல்.

" பெரியமூ உலகும்
நிறையப்பேர் உருவமாய் நிமிர்ந்த
குறியமாண் எம்மான் குரைகடல் கடைந்த
கோலமா ணிக்கம்என் அம்மான் "

என்ற பாசுரப்பகுதியில் மாபலியின் வலியை அடக்கிய செயலும், கடல் கடைந்த செயலும் குறிப்பிடப் பெறுகின்றன. மூவுலகின் பெருமைக்குத் தக்கவாறு எம்பெருமான் தன் உருவத்திலும் பெருமை கொண்டான் போலும். திருவுருவத்தைப் பெரிதாக வளரச் செய்தது மூவுலகங்களையும் அளந்து கைப்பற்றிக் கொள்வதற்

காக அன்று; நடைபெற முடியாததையும் நடைபெறும்படி செய்ய வல்லவனுகை (அகடித கடநா சமர்த்தன்) எம்பெருமான் தன் சிறிய உருவத்தாலும் மூவுலகையும் வெல்ல வல்லவன், ஆயினும் இங்ஙனம் வளர்ந்த காரணத்தை நம்பிள்ளை, "தொடங்கிய காரியம் வென்ற மகிழ்ச்சி மிகுதியாலே ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே வளர்ந்தபடி" என்று அருளிச் செய்திருப்பது இன்சுவை மிக்கது. இந்த உலகில் ஒருவனுக்குத் தன் விருப்பம் நிறைவேறப்பெற்றால் உடல் பூரிப்பதை நாம் காண்கின்றோம் அன்றோ? அப்படியே இங்கும் எம்பெருமான் பக்கலில் பல்லைக் காட்டிப் பரிதாபம் தோன்ற நின்ற இந்திராணிக்குத் தான் துணை செய்யப் புகுந்து, அது நிறைவேறப் பெறுகையாலே உடல் பூரித்ததாயிற்று. 'குறியமாண் எம்மான்' என்று ஆண்டாள் ஈடுபடும்படி அழகே வடிவெடுத்ததாகக் கொண்ட வாமன வடிவத்தையும், இரவலனாய் நின்ற நிலையையும் காட்டித் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டவன் என்னும் கருத்து இதில் நிழலிடுவது கண்டு மகிழத்தக்கது. அன்றியும், பெருவிலையதான இரத்தினம் போல் இருக்கிற வடிவத்தைக் கொண்டல்லவா கடலைக் கடைந்தான் எம்பெருமான்? இங்ஙனம் தன் ஆற்றலையும் அழகையும் காட்டித் தன்னை அடிமை கொண்டான் என்ற குறிப்பு 'குரை கடல் கடைந்த கோலமாணிக்கம் என் அம்மான்' என்ற தொடரில் இருப்பதைக் கண்டு மகிழலாம்.

திருச்சிற்றாற்று எம்பெருமான் ஆழ்வாருக்கு அச்சமற்ற புகலிடம் தருபவனுவான்; அவருக்கு உயிர் போன்றவன்; நித்திய சூரிகட்குத் தந்தையாகவும் தாயாகவும் இருப்பவன்; விரிந்த திருப்பாற் கடலிலே அறிதுயில் கொண்டுள்ள அப்பெருமானின் தன்மை அவனாலேயே அறிதற்கரியது.

> எனக்குநல் அரணை எனதுஆர் உயிரை
> இமையவர் தந்தைதாய் தன்னைத்
> தனக்கும்தன் தன்மை அறிவுஅரி யானைத்
> தடங்கடற் பள்ளி அம்மானை "

என்பது பாசுரப்பகுதி. இத்தகைய பெருமானைத் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றில் கண்டதாகக் கூறுகின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் 'அயர்வறும் அமரர்கள் அதிபதியாய்' இருக்கும் எம்பெருமான் ஆழ்வாருக்கு நாதனுக இருப்பவன். அவனது பரத்துவத்தையும் சௌலப்பியத்தையும் ஒப்பிட்டு வியந்து பேசுகின்றார் ஆழ்வார். இந்த மாநிலம் பிரளயத்தில் சிக்கி மறைந்து போகாதிருக்குமாறு பாதுகாத்த பெருமான் அவன். அந்த வல்லமையைக் காட்டி ஆழ்வாரின் அநாதியான வலிய தீவினைகள் யாவும் 'தீயினுள் தூசு' போன்று ஒரு நொடிப் பொழுதில் மாளும்படி செய்து அவரை அடிமை கொண்ட பெருந்தகை. இதனை,

> " என் அமர் பெருமான் இமையவர் பெருமான்
> இருநிலம் இடந்தஎம் பெருமான்
> முன்னைவல் வினைகள் முழுதுடன் மாள
> என்னைஆள் கின்றஎம் பெருமான் "

என்ற பாசுரப்பகுதியால் அறியலாம். ஈண்டு இருநிலம் இடந்த செய்தியைக் குறிப்பிடும்,

> " சிலம்பின்இடைச் சிறுபரல்போல், பெரியமேரு
> திருக்குளம்பில் கணகணப்ப, திருஆ காரம்
> குலுங்க, நில மடந்தைதனை இடந்து புல்கிக்
> கோட்டிடைவைத் தருளியஎன் கோமான் "

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரப் பகுதி நினைந்து சுவைத்து மகிழத்தக்கதாகும்.

மேலும், இச்சிற்றாற்றங் கரையான் தேவர்கட்கும் புகலிடமாக இருப்பவன்; மிடுக்கான அசுரர்கட்குக் கூற்றை யொப்பவன்.

> " புகர்கொள்வா னவர்கள் புகலிடம் தன்னை
> அசுரர்வன் கையர்வெங் கூற்றை "

என்பது பாசுரப்பகுதி. இத்தகைய பெருமை வாய்ந்த எம்பெருமானைத் தவிரத் தனக்கு வேறு துணை இல்லை என்கிறார் ஆழ்வார்.

> " செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
> திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு
> அங்குஅமர் கின்ற ஆதியான் அல்லால்
> யாவர்மற்று என்அமர் துணையே "

என்பது ஆழ்வார் திருவாக்கு.

மேலும் இதனை "மெய்ம்மையே நின்ற எம்பெருமான் அடியிணை அல்லது ஓர் அரணே...பிறிது இல்லை" என்று வற்புறுத்துகின்றார். அவனுடைய இரண்டு திருவடிகளேயன்றித் தனக்கு வேறு பாதுகாவல் இல்லை என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை,

மற்ற திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் அனைவரும் திருச்சிற்றாற்றங்கரை எம்பெருமானைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் அல்லர் என்ற உண்மைப் பொருளைத் தாம் நன்கு அறிந்திருப்பினும், தம் உயிர் அப்பெருமானையன்றி வேறு ஒருவனைப் பொருந்தி விரும்ப மாட்டாது என்கிறார்.

> "அல்லதுஓர் அரணும் அவனில்வேறு இல்லை;
> அதுபொருள் ஆகிலும், அவனை
> அல்லதுஎன் ஆவி அமர்ந்துஅணை கில்லாது "

என்பதனால் இதனை அறியலாம். சிறிய திருவடி ராமனைத் தவிரப் பாமபதநாதனையும் வேண்டேன் என்று சொல்லவில்லையா? அது போலவே இவரும் கொள்ளுகின்றார். இதற்கு அவரவர் மனமே பிரமாணம் ஆகும். இங்ஙனம் அந்த எம்பெருமானைக் கிட்டப் பெற்று இனியராகின்றார் ஆழ்வார்.

> " அமர்ந்த நாதனை அவரவர்ஆகி
> அவர்க்குஅருள் அருளும் அம்மானை
> அமர்ந்ததண் பழனம் திருச்செங்குன் றூரில்
> ....................
> அமர்ந்தமா யோனை, முக்கண் அம் மானை,
> நான் முகனை அமர்ந் தேனே "

"முக்கண் அம்மானை, நான்முகனை" "சிவபிரானுக்கும் நான்முகனுக்கும் அந்தர்யாமியாக இருக்கும் எம்பெருமானை" என்பது குறிப்பு.

இந்த எண்ணங்கள் யாவும் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். இத்திருப்பதி எம்பெருமானின் திருநாமம் இமையவர் அப்பன் என்பது; தாயார் செங்கமலவல்லி. இவர்கள்

இருவரையும மனமாரச் சேவிக்கின்றோம். கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு நின்ற திருக்கோலத்தில் இவர்கள் சேவை சாதிக்கின்றனர். அவர்கள் சந்நிதியிலேயே திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றுத் திருவாய்மொழிப் பதிகத்தைப் பக்தியுடன் ஓதிப் பரவசம் அடைகின்றோம்.

" தேனைநன் பாலைக் கன்னலை அமுதைத்
திருந்துஉல குண்டஅம் மானை,
வானநான் முகனை மலர்ந்ததன் கொப்பூழ்
மலர்மிசைப் படைத்தமா யோனை "

என்று நம்மாழ்வார் அப்பெருமானை அநுபவித்தது போன்றே நாமும் அனுபவிக்கின்றோம்.

" இப்பத்தும், வானின்மீது ஏற்றிஅருள் செய்துமுடிக்கும்
பிறவிமா யக்கூத் தனையே "

என்று ஆழ்வார் பணித்த வண்ணம் நம்மைப் பரம பதத்தில் ஏறவிட்டு இறைபணியாகின்ற கைங்கரியத்தைப் பெறச் செய்து பிறப்பாகிய நாடகத்தையும் முடித்துவிடும் என்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். 'முந்துறப் பரம பதத்தைக் கொடுத்துப் பின்பு சம்சாரமாகிய நாடகத்தை அறுக்கும்' என்று சொல்லுவதை 'முன்னர் சம்சாரத்தை அறுத்துப் பின்னர்த் திருநாட்டில் கொண்டு செலுத்தும்' என்று சொல்லியிருக்க வேண்டும். பறைசாற்றிச் சொன்னதன் சுவையை நம்பிள்ளை வெளியிடுவதைக் காண்மின்; 'நாடு அராஜகமானால் முன்னம் ராஜபுத்திரன் தலையிலே முடியை வைத்துப் பின்னை விலங்கு வெட்டிவிடுமாப்போலே' என்று. மன்னன் மகன் ஏதோ குற்றம் புரிந்ததற்காகச் சிறையிலடைக்கப்பெற்று விலங்கிடப் பெற்றிருந்தான்; திடீரென்று மன்னன் இறந்தான்; சிறையிலிருந்த அரசகுமாரன் மீது முடி கவிக்க வேண்டியதாயிற்று. அந்நிலையில், ஒரு நொடிப் பொழுதும் நாடு அரசனற்ற நிலையில் இருக்கக் கூடாதென்று மன்னர் அவன் தலையில் கிரீடத்தை வைத்துப் பின்னர்ச் சிறைவீடு செய்வார்களாம். அது போல என்க. இந்த உணர்ச்சிப் பெருக்கில் திளைத்த நிலையில்,

" வரவேண்டும் கண்டாய்,
மகிகலங்கி விக்குள்
பொரவே உயிர்மாயும்
போழ்து – பரமேட்டி !
செங்குன்றூர் மாலே !
சிறைப்பறவை மேல்கனகப்
பைங்குன்றுஊர் கார்போல் பறந்து "

என்ற திவ்விய கவியின் வாக்கை நினைவு கூர்கின்றோம். நாமும் அப்பெருமானுக்கு அதே வேண்டுகோளை விடுக்கின்றோம். பக்திப்பெருக்கோடும் நிலையில் பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்தை அடையச் சித்தமாகின்றோம்.



திருத்தணிகை, மளிகை வியாபாரிகள் தரும சத்திர நிர்வாக ஒப்படைப்பு ஆவணத்தினை, உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. P. S. கைலாசம் அவர்கள், நமது அறநிலைய ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம், I. A. S. அவர்களிடம், வியாபாரிகள் சார்பில் வழங்குதல். (9-10-76)

# வாலி வழக்கு

"முதுபெரும் புலவர்"
திருப்புரிசை சு. முருகேச முதலியார்

(முற்றொடர்ச்சி)

மேலே வாலி இராமனை வினவிய வினக்கள், 15 பாடல்களால் தொகுக்கப் பெற்றவை. அவ்வினக்களின் உட்பொருள்கள், இராமனை மிகுந்த பெருமையோடு அழைப்பதும், உயர் மொழிகளால் வினவுவனவுமாக அமைந்திருத்தலைக் கண்டுளோம். இக்கருத்தினைக் கம்பர் "அனையனகூறினன்" என விளக்கினர். ஆயினும், வாலியின் மெய்ப்பாடு நேர் எதிர்மறையாக விளங்கினவாம். வாலி இக்கேள்விகளைக் கேட்ட நேரத்தில், அவனது பற்கள் நெறுநெறனக்கடிக்கப்பட்டனவாம். அவன் கண்களில் கனலெழுந்தனவாம். அவனுக்கு உள்ளன்பு மாறவில்லை. ஆயினும் உடல் வலியும் ஆறவில்லை. என்ன செய்வான் அவன்? அப்படி கடுமையாகப் பேசிய வாலியை நோக்கி நின்ற இராமன் எளியவனல்லன். ஆயினும் வாலிக்கு விடையளிக்கத் தொடங்கும்பொழுது இராமன் வெகுவாக நிலைமாறி நின்றனன். இராமன் பேசத் தொடங்கியது முதல், விடையளித்து முடிக்கும் வரை, மிக அமைதியாகவே மறுமொழியளித்தனன் என்று, இருவர் நிலைகளையும் ஒரு பாடலில் குறிக்கின்றனர் கம்பர்.

> "என்று தானும் எயிறு பொடிபடத்
> தின்று கான்று விழிவழித் தீ யுக
> அன்று அவ்வாலி அனையன கூறினன்
> நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்"
>
> (வா. வ. 91)

இராமனுக்கு வாலியை வதைக்கப் புறப்பட்டபோது இருந்த வெம்மை இப்போது இல்லை. சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்தனன் என்ற சொல்லைக் கேட்டவுடனே இராமனுக்குப் பெருங் கோபம் பிறந்தது.

> "உலகம் ஏழினேடு ஏழும்வந்து அவன்உயிர்க்குதவி
> விலகும் என்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
> தலைமை யோடுநின் தாரமும் உனக்கு இன்றுதருவேன்
> புலமையோய் அவன் உறைவிடம் காட்டு எனப் புகன்ருன்"
>
> (மரா. 113)

இங்கு கூறும் 'புகன்ருன்' என்ற சொல் மிகுந்த காரசாரமான இடங்களில் காணப்படுவது. "இராமனை இகழ்ந்து, இராவணன் மந்திரியொருவன் பேசுகின்றனனும். அவன் பெயர் புகைக் கண்ணனும், அச்செய்தியைப் "புகைநிறக் கண்ணனும் புகன்று பொங்கினன்" என்பர் கம்பர். அக்கம்பரே இராமன் வெகுளியை எடுத்துக்காட்ட "அவன் உறைவிடம் காட்டெனப் புகன்ருன்" என்றனர். அப்படி ஆத்திரங் கொண்டெழுந்த இராமன் வீரவில்லுந் தாங்கி வெற்றியும் பெற்று நிற்கின்ற இப்பொழுது, வாலிக்கு விடைகூறும் வகை "நிகழ்த்துவதாக" நிலவுகின்றது. அதுமுன் போலப் புகன்றுவிடுவதாக இல்லை.

நிகழ்த்துதல் என்ற சொல், கம்பரால் மனமகிழ்ச்சியான இடத்தில், கையாளப்படுகின்றது. விபீடணனுக்கு அடைக்கலங் கொடுத்தாயிற்று. இலங்கைக்கு அரசனுக்கியும் ஆயிற்று. அவனை அழைத்துத் தனது அருகில் இருத்திக் கொண்டனன் இராமன். அவ் விபீடணனைப் பார்த்து, உங்கள் இலங்கையின் மதில் வளம் சேனைகளின் வளங்களையெல்லாம் செப்புகவெனக் கேட்கின்றனர்.

> "ஆர்கலி இலங்கையின் அரணும் அவ்வழி
> வார்கெழு கனைகழல் அரக்கர் வன்மையும்
> தார்கெழு தானையின் அளவும் தன்மையும்
> நீர்கெழு தன்மையாய் நிகழ்த்துவாய்"

என்ருன்.

இது எவ்வளவு அமைதியான இடம். இச்செய்திகள் தான் எவ்வளவு ஆக்க வேலைக்குரியன? இது போன்ற இடங்களில் ஆளப்பெறும் நிகழ்த்துதல் என்ற சொல் மிகக்கடுமையாகச் பேசி முடித்த வாலிக்குச் சொல்ல வரும் விடைகளைக் குறித்து, "நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்" எனத் தொடங்குகின்றனர், ஒப்பநுட்ப முறப் பேசும் கம்பரென்ருல், நுணுகியநியத்தக்க காரணங்கள் உளவெனத் தோன்றுகின்றதல்லவா?

## இராமன் இரக்கமுடையவனுவதற்குரிய ஏதுக்கள் :

இராமன் தனது உள்ளத்தில் இடங்கொண்டிருக்கும் இனியவர்களையெல்லாம், வாலியின் உள்ளத்திலும் இடம்பெற்றிருத்தலை, அவன் ஏசும் மொழிகளுக்கிடையே கண்டனன். தனது தந்தை இறந்ததைக் கேட்டனன் இராமன். அப்போது "அறத்தின் தாயே" "தயா நிலையே" "அந்தோ இனி வாய்மைக்கு யாரே உளராவார்" என அழுதனன். தனது அத்தந்தையை "வாய்மையும்மரபும் காத்து மன்னுயிர்துறந்த வள்ளல்" என்று வாலியின் வாயால் உரைக்கக் கேட்டனன் இராமன். தனது தம்பியாகிய பரதனை இராமன் "சேண்உயர் தருமத்தின் தெய்வம்" என்று கூறி மகிழ்பவன். அப் பரதனை, ஓர் அடையும் கூற வேண்டாத உயர்வுடையோனெனக்கருதி "பரதன் முன் தோன்றினய்" எனச்சிறப்பித்துரைக்கின்றனன் வாலி. இராமன் தங்கள் குலப்பெரியோர் செய்த அறங்களையும், அவர்

களின் ஆற்றலையும் மெச்சி உருகுகின்றவன். "கருங்கடல் தொட்டனர், கங்கை தந்தனர், பொரும் புலி மானெடு புனலும் ஊட்டினர் அருமை என் குலத்தவர்" என அழுதுநைபவனும் ஆவன். வாலியும் "கோவியல் தருமம் உங்கள் குலத்து உதித்தவர்கட்கெல்லாம் ஆவியதன்றோ" வெனப் புகழ் பாடிக் கேட்கின்றனன். இராமன் மான் வேட்டையாடி வந்து தேவியைக் காணாது மாழ்கும்பொழுது,

"கைத்தசிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணான்
உய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடும் மறைதர வாங்கிப்
பொய்த்து ளார் கொள மயங்கி நின்றுரையும் போன்றான்"

(சடாயு உயிர் 159)

அங்கு இராமனுக்கு வந்து, நிலைத்த மயக்கத்தை, அருகில் நின்று அறிந்தவன் போல வாலி "ஆவியை சனகன் பெற்ற அன்னத்தை அமுதின் வந்த தேவியைப் பிரிந்தபோதே திகைத்தனை போலும்" என்கின்றனன்.

இராமன் எண்ணத்தால், இராமன் வாளியினால், துன்பத்தின் எல்லையைக் கண்டு நிற்கும் வாலி, இராமனை "ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்" என அழைக்கின்றான். வாய்ப்பற்ற நேர்பாட்டால், தான் வருந்த வேண்டிய செயலுக்கு வாலி வருந்துகின்றான். இராமனுக்கு வந்த நாணத்திற்குத் தான் நாணித் தலையும் குனிகின்றான். வாலி கோட்டை வாயிலைவிட்டு வெளி வந்தது முதல், இமைகொட்டாது அவனைப் பார்த்துக் கொண்டேயிருக்கும் இராமன், மேற்சொன்ன நிகழ்ச்சிகள் அனைத்தையும், தனது கண்களாலும் பார்த்துக், காதுகளாலுங் கேட்டு, உள்ளத்தாலும் உணருகின்றனனென்றால், கல்லையும் மரத்தையும் கனிவிக்கும் இந்த வாலியின், அன்பிற்கு ஆழங்காண முடியாத செயல்கள், ஒருகருணாமூர்த்தியை உருக்காமலா போகும்? இராமன் தனது ஏவினால் இடர்ப்பட்ட, வாலியின் நெஞ்சத்தில், தனக்கு இனியவர்களெல்லாம் இருக்கின்றார்களென்பதறிந்த பின், கலக்கமில்லாமலா இருக்க முடியும்? இத்தனை ஏதுக்களாலும் இராமபிரானின் நிலை மாறுதலுக்கிடமிருக்கின்றதல்லவா? அதனாலேயே வாலியின் வினாக்களைக் கேட்டு வெகுண்ட வீரனல்ல "நின்ற வீரன் இனைய நிகழ்த்துவான்" எனக் கம்பர் இதமுற இசைத்தனர்.

## வாலியின் முதல் வினாக்களுக்கு இராமன் விடையளித்தல்:

அசுரனைத் தொடர்ந்தழிக்கப் பிலத்திற் புகுந்தனை. நெடுநாள் வரவில்லை. உனது பிரிவிற்கு வருந்தி உன்னைத்தொடர உனது தம்பி முற்பட்டனன். அவனை உனது குலப்பெரியவர்கள் தடுத்து நிறுத்தி விட்டனர். மனம் நைந்து உயிர்விடத் துணிந்தனன் உன் தம்பி. அதனையும் தடுத்து அரசனாகவும் செய்து விட்டார்கள் குலமுதியர். அவர்கள் வற்புறுத்தலை மறுக்க முடியாத அவன், உனது வருகைக்கு மகிழ்ந்து எதிர் கொண்டு வணங்கினான். அவனது வணக்கத்தை ஏற்காது பிணக்கத்தைக் கொண்டனை. பின்னர் அவனைப் போருக்கழைத்துக் கொல்லவும் முற்பட்டனை. அவனைத் திசையனைத்துந் துரத்தினை. உனக்குச் சாபமுள்ள மலையில் ஒளித்ததனாலேயே அவன் உயிர்தப்பினன். இதுதான் இரக்கமா? மேலும் உனது தம்பிக்கு உரிய வளைக் கவர்ந்து கொண்டனை. இதுதான் அறமா? என்னை இரக்கமற்றவன் என்கிறாய். அறம்மாறியவனென்கின்றாய். இப்பிழைகளாலும், அவன் எனக்கு உயிர்த்தோழனாகப் பெற்றதனாலும், எல்லாந்தெரிந்துந் தீவினைக்கு அஞ்சாது உட்பட்டனையாதலாலும், உனக்குப் பெருந்தண்டனையளித்தேன். எனது நண்பனுக்கு நலஞ்செய்தேன். அடைந்தவரைக் காப்பதும், யாருமற்றவர்களுக்கு அருளலும் எங்கள் கொள்கை என்றனன் இராமன்.

"ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீரமாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றொரு வன்புணர்
தார மாவதைத் தாங்குந் தருக்கதோ"

(வா. வ. 99)

"ஆதலானும் அவன்எனக் காருயிர்க்
காதலான்என லாலும்நிற் கட்டனன்
ஏதி லாரும் எளியரென் றுரையும்
தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்தரோ"

"பிழைத்த தன்மை யிதுவெனப் பேரருள்
தழைத்த வீரன் உரைசெயத் தக்கிலாது
இழைத்தவாலி இயல்பல இத்துணை
விழைத்திறத் தொழில் என்ன விளம்புவான்"

(வா. வ. 103)

வாலி, ஐயா உங்கள் குலமுறையை எங்கள் முறையாகக் கொண்டு இப்படிச் செய்யலாமா? என வருந்தினான். அவன் ஒருவனோடு நட்பு கொள்ளலாம்; இப்படி, நாமே அவன், அவனே நாம, நம்இனமே அவன் இனம், அவன் இனமே நம் இனம், என்ற அளவிற்கு நட்புக் கொண்டால், அது தகைமைமிக்கவர்களுக்குப் பொருந்தாது, என்றனன். "இயல்பு அல இத்துணை விழைத்திறத் தொழில் என்று விளம்பினான்". அவனிடத்தில் நீங்கள் கொண்ட அளவு கடந்த உகப்பினால், நின்று நிதானித்தும் பார்க்காமல் என்னைக் காய்ந்து முடித்தீர்கள் என்பது வாலியின் வாதம்.

இராமன் "அவன் எனக்கு ஆருயிர்க் காதலான் எனலானும் நிற் கட்டனன்" எனக் கூறியதைச் சிந்திக்க வேண்டும்." "நாடாது நட்டலில் கேடில்லை நட்டபின் வீடில்லை நடாள்பவர்க்கு". உழவுத் தொழிலில் களையெடுத்தல் ஒருபகுதி. ஒருவன் வரகை நாற்றுவிட்டு நட்டனன். அதில் முன்னர் அறுவடை செய்த நெல் விதைகள் உதிர்ந்திருந்து மிகுதியாக முளைத்தன. அவன் களைவெட்ட ஆட்களை விட்டனன். எதிரிருந்து வேலைவாங்குகின்றனன், ஒன்று விடாது அந்த நெல் பயிர்களைச் சீத்துத்தள்ளுங்கள் என. அறவே நெல்லைத் தொலைத்து வரகையே வாழ்விக்கின்றனன். அவனே அந்த நிலத்திலேயே மறுபடி நெல் நாற்று நடுகின்றனன். அப்பொழுது அதில் வரகு முளைக்கின்றது. முன்னர் நெல் முளையைத் தொலைத்ததைப்போல் இப்பொழுது வரகு முளைகளை மாய்த்தொழிக்கின்றனன். அப்போது, களை என்பது எது? பயிரென்பது எது? களையென்பது, தான் நட்டதெதுவோ அதற்கு எதிரிடையானது. அவ்வளவுதான் உலக வழக்கம்.

"நட்டதோர் குழுவினை நடாததோர்குழு
ஒட்டலர் போல நின்று ஒறுத்தல் உன்னியே
அட்டனர் ராம்என அடாத வான்களைக்
கட்டனர் வேற்றுமை உணருங் காட்சியார்"

மற்றொரு காவியங்காட்டும் உவமையிது. நட்டல்—நண்பு கொள்ளுதல். ஒரு நண்பர் குழு ஒரு தலைப்

பயணம் செல்லுகின்றது. செல்லும் வழியில் தங்குமிடம் ஒன்றில் தங்களைச் சார்ந்த ஒருவனுக்கும் அவ்விடத்திற்கு வந்த ஒருவனுக்கும் ஒரு மோதலுண்டாகின்றது. ஒருங்கு சென்ற நண்பர்கள் நடந்தது என்னவென ஆய்ந்தறிய முற்படுவதேயில்லை. புதியவனைக் காய்ந்து அகற்றுவதிலேயே முற்படுகின்றார்கள். அவன் அகன்று மறைந்தான். இவன் வழக்கென்னவென்று விவாதித்தார்கள். புதியவன் மேல் பிழையில்லை. தம்மவன் செய்கையே தவறானதெனக் கண்டனர். அவனை வெறுப்பார்கள், தாங்களே தங்களையும் வெறுத்துக் கொள்ளுவார்கள். இத்துணை நன்மை தீமைகள் ஒருவரோடு நட்பு கொள்ளுவதனால் வருகின்றன.

## வாலி மேலும் கூறுகின்றனன்

ஐயனே! எங்கள் குலத்தியல்பு முறைப்படி பெண் ஏனையபொருள்களைப்போல, ஒருவன் வைத்து வாழ்ந்த பொருளை, மற்றொருவன் வைத்து வாழலாம்; அது குற்றமாகாது. உங்கள் குலத்து அரும்பெருங் கற்பு மாண்பு எங்கள் குலப்பெண்களின் பால் கொண்டொழுகும் வழக்காறில்லை. கைம்மாற்றுப் பொருளாகக் கருதிப்போனபோக்கில் முறை பட்டு வரும் எங்கள் குலத்தியலைக் கருதாது, இப்படிச் செய்து வெற்றியும் பெற்று விட்டீர்கள். உங்களுக்கு யான் என்ன சொல்லுவது என்றனன் வாலி.

## வாலியை நோக்கி இராமன் உன்னைக் குரங்கெனக் கூறுவதா? என்று சிறப்பித்தல் :

பிறந்தது தேவர்க்கரசனான இந்திரன் மகனாக. சிறிதும் ஐயமுற அறங்களையறிந்திருக்கின்றனை, உலகமறிந்த புகழாரம் பூண்ட சிறப்பினையுடையை, உன்னை நீ குரங்கெனக் கூறிக் கொள்ளுதல் பொருந்தவே பொருந்தாது.

தேவர் மக்கள் நரகரென்பது, உடம்பைப் பொறுத்தல்ல, உணர்வைப் பொறுத்ததே. கசேந்திரன் என்னும் யானையையும், சடாயுவென்னும் பட்சியையும், விலங்கென்றும் ஒரு பறவையென்றும் யாருங்கொள்ளுவதில்லை. நல்லது கெட்டது இன்னின்னதெனத் தெரியாததுதான் விலங்கு. உனக்குத் தெரியாத அறநூல்கள் ஒன்றுமேயிருக்க முடியாது. இதனை உனது வினைகளின் திறத்தினாலேயே உணரக்கிடக்கின்றது. தக்கது இது, இது தகாததுஎன ஆய்ந்தறிய முடியாதவர் மக்களுடம்பொடு நிற்றலால் மக்களாகிவிட மாட்டார்கள். இவ்வறிவையுடைய விலங்குடல்கொடு நிற்பினும் விலங்காகா. காலனைக் கடிந்த தேவனைத் திசையெட்டினும் சென்று வழிபடும் சிறப்புடையாய்நீ. அப்பத்திமையின் பயனாகப் பெருவலி படைத்த நிலநீர் காற்றென்னும் நாற்பெரும் பூதங்களின் வன்மைக்கும் மேன்மைப்பட்ட வன்மையுடையை. குற்றம் புரிவது உலகத்தில் புதிதல்ல. அறங்கோணாத நல்லவர்களும், வினைவசத்தால் பிழைபட்டவர்களும், அரும்பெருந் தவசிகளும், சிறப்புடைய தேவர்களும், பிழைபடுவது உண்டு. ஆனால், தங்கள் குறை தெரிந்து தாங்களே தங்கள் குற்றங்களுக்கேற்ற கழுவாய் தேடித் திருந்திவிடுவார்கள். அறிந்திருந்தும் பிழை செய்து ஒழுகுபவர் தங்கள் சிறப்பிற்கேற்ற தண்டனையாகப் பெருந் தண்டனைக்கு ஆளாகிவிடுவார்கள். எல்லாச் சிறப்பும், அறிவும் ஆற்றலும் மிக்க நீ குடிவாழ்க்கைக்கே தீங்கு செய்தனை. அதன் பயன் இதுவே என்றனன் மநுகுலச் செம்மலாகிய இராமன்.

> " தக்கவின்ன தகாதன வின்னவென்று
> ஒக்கஉன்னல ராயின் உயர்ந்துள
> மக்களும் விலங்கே மநுவின்நெறி
> புக்கவேல் அவ்விலங்கும்புத்தேளிரே "
>
> " காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
> பாலின்ஆற்றிய பத்திபயத்தலால்
> மாலினுற்றரு வன்பெரும் பூதங்கள்
> நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினாய் "
>
> " தேவரும் தருமத்துறை மேலினோர்
> ஏவரும் பவத்தால்இழிந்தோர்களும்
> தாவருந்தவரும்பல தன்மைசால்
> தேவரும்உளர் தீமை திருந்தினர் "
>
> "இனைய தாதலின் எக்குலத்துயாவர்க்கும்
> வினையினால்வரும் மேன்மையும் கீழ்மையும்
> அனைய தன்மை யறிந்தும் அழித்தனை
> மனையின் மாட்சியென்றான்மநு நீதியான் "
>
> (வாலி. வ. 112–113–114–115.)

இராமன் நிகழ்த்திய விடைகளை இருமுறையாகக் கேட்கக் கேட்க வாலிக்கு ஆத்திரங்குறைந்தது. அவன் மிக்க அமைதியுடையவனாகினன். இராமன் பெருமைகளைத் தான் உணர்ந்திருந்ததைப் போலவே, தன்னைப்பற்றியும் தன்னால் மதிக்கப்பெற்ற பெருந்தலைவன் அறிந்திருந்தனன் என்பதை வாலியறிந்தனன். தன்னை மிகச் சிறந்தவனாகக் கருதியிருந்த இராமனுக்குத் தனது குற்றம் பெரிய குற்றமாகக் கருத நேர்ந்துவிடுதல் இயல்பு தானே யென்றெண்ண நாணமும் அமைதியுந் தாமே வருமல்லவா? அமைதியுற்றனன் வாலி.

அமைதியுற்ற வாலி அண்ணலை முன்னையினுஞ் சிறப்பான சொல்லினால் "மாண்ட செவ்வியோய்", என அழைத்தனன்.

## வாலி குற்றத்தை ஒத்துக்கொண்டு தண்டித்த முறையை மறுத்தல் :

செம்மையால் சிறந்தோய் "பெற்ற பட்டத்தைத் தம்பிக் களிக்கும் பெரியவன் நீ. என் தம்பிபால் நான் கருத்து வேற்றுமை கொண்டது நினக்கொவ்வாததே. சனகன் பாவைக்கு "இந்தவிப்பிறவிக் கிருமாதரைச் சிந்தையாலுந் தொடேனென வாக்களித்ததைப் போல் ஒழுகிவரும் சீலச் செம்மல் நீ. ஒருத்தன் மனைவியை வவ்வினேன். தம்பியினிடத்திலேயே தவறு செய்தேனெனக் கேட்டால் வெகுண்டு வில்லெடுக்கத்தான் தோன்றும். (விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில் தீமை புரிந்தொழுகுவார்). உலகப் பழமொழியின் யெனக்கு நேர்ந்த மரணத்தையும் யான் ஒத்துக் கொள்ளுகின்றேன். ஆனால், தவறுகள் செய்த என்னைத் திருத்தவரும் தலைவன் நீ. என்பால் கண்ட இரண்டு குற்றங்களே நின்பாலும் நேரும்படியொரு தண்டனையா? நரன் குரங்கிற்கு அரசன்; நீ குவலயத்திற்கெல்லாம் அரசன். அரசர்கள் தாம் வெல்லப்புகுவோர்க்குமுன்னதாகத் தமதுவருகையைத் தெரிவிப்பார்கள். போரிடும் இடத்தை நியதி செய்வார்கள். போரில் பயன்படுத்தும் படைகளையும் தமது

எதிரி காண எடுப்பார்கள். இப்படி விளக்கமாக வெல்லுவதையே வெற்றியாகக் கருதுவார்கள். மறைந்து நிற்பானேன்? ஒரு படையும் பற்ருத என்னைப் படை கொண்டு கொல்லுவானேன்? என வினவினுன் வாலி. இவ் வினுக்களுக்கு உடனடியாக விடை வந்தது. அது, முதலில் பதினென்ருகவும் பிறகு ஒன்பதாகவும், பத்தொன்பது பாடல்களால் தொகுத்தபடி விடையளித்து வந்த, இராமபிரான் வாக்காலல்ல. இலக்குவனுர் வாக்கால் வந்தது, அந்த விரைவான விடை. வாலியின் இவ்விரு வினுக்களும், யாராக இருந்தாலும் நேராக விடையிறுக்க முடியாதவை இவ் வினுக்களுக்கு இராமபிரான் கடைசி வரையில் விடையிறுக்கவில்லை. இதுவே அப்பெருந்தகையின் மிகமேலான பண்பாட்டினை விளக்கி நிற்பது என்பது மறைமுகமான உண்மையாகும்.

அண்ணலுக்கு இடையூறு வருமென்று தோன்றுகின்ற பொழுதே, விரைந்து முந்திக் கொண்டு அதற்கான உண்மையை யெடுத்துக்காட்ட முன் வருவது இலக்குவனுர் இயல்பு. பஞ்சவடியில் மலர் பறிக்க வெளிவந்த சானகியார் ஒரு அழகிய மானைக் கண்டார்கள். சாலையின் உட்புகுந்து, அண்ணலிடம் வந்து பாருங்களேன் பொன்மையான மான், வாலும் காலும் மாணிக்கம் என்றனர் தேவியார். சென்று காணலாம் என்றனன் தலைவன். உடனே இலக்குவனுர் கூறினுர் காயம் கனகம், மணி, கால் செவி வால் எனலால் அது மாயம் என, அண்ணலார் புறப்பாட்டிற்கொரு தவக்கத்தைக் குறித்தவரும் இவர்.

தேவியைக் காணுது திகைத்து நின்றனர் அண்ணலார். தேர் வந்துசென்ற அடிச்சுவடு தெரிகின்றது. தொடுவதற் கஞ்சினனென்பது, சாலையோடகழ்ந் திருத்தலால் தெரிகின்றது, தூரத்தில் செல்வதற்குமுன் சென்று பிடிக்கவேண்டாமா? வல்லமையற்றவர்களைப் போலவாடியிருப்பதா புறப்படுங்களண்ணுவெனப் புறப்படுத்தியதும் இந்த இலக்குவப் பெருந்தகையே. வருவதைத் தெரிந்து துணிந்து தெரிவித்துக் கொள்ளுவதும், அண்ணல் உடன்படா விடினும் தொடர்ந்து சென்று துன்பம் வருமிடத்தில் தானே முந்தித் தலை கொடுப்பதும், இந்த இலக்குவனுர் செயலும், அவர் தாயிட்ட கட்டளையுமாகும் என்பதனை இந்த வழக்கில் மறந்துவிடக் கூடாது.

> ''அவ்வுரை அமையக் கேட்ட அரிகுலத்து அரசு மாண்ட
> செவ்வியோய்! அனையதுஆகச் செருக்களத்து உருத்து எய்தாது
> வெவ்விய புளிஞர் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
> எவ்வியது என்னை? யென்ருன் இலக்குவன் இயம்பலுற்ருன்''
> (வா. வ. 116.)

இலக்குவர் கூறியதென்ன? வாலி உனது தம்பி முன்னதாக வந்து முறையிட்டுக் கொண்டபோது அவனுக்கு அடைக்கலமளித்து முறை தவறிய உன்னைக் கொன்று நீக்குவதாகக் கூறிவிட்டனன் அண்ணல். பின்னர் உன் எதிர்வரின் நீயும் அடைக்சலம் கோரினுல் என்ன செய்வது என்று, தான் மறைந்துநின்று ஏவியது என்ற விடையே.

> ''முன்புநின் தம்பிவந்துசரண்புக முறையிலோயைத்
> தென்புலத்துய்ப்பன்என்று செப்பினன் செருவில்நீயும்
> அன்பினை யுயிருக்காகி அடைக்கலம் யானும்என்றி
> யென்பது கருதி யண்ணல் மறைந்துநின்றெய்ததுஎன்ருன்.
> (117)

முன்னம் இராமபிரானுக்கு இந்த சுக்கிரீவன் தன் அண்ணனைக் கொல்லும் யமனுகவே உங்களைக் கருதி நிற்கின்றனன். இவருடைய குரங்குத்தனமான போர் எனக்கு வருத்தத்தைத் தருகிறது என்ற இலக்குவன் தான். இப்பொழுது அண்ணலுக்கு ஆதரவாகப் பேசுகின்றனன். அது உண்மையா? அல்லது இது உண்மையா? என்ற ஐயம் வருகின்றது. அப்போது அங்கு யாவரும் இல்லை. ஏந்தலும் இளவலுமே இருந்தவர்கள். சுக்கிரீவன் போர்க் களத்தில் நின்ற நேரம் அது. இப்போது இங்கு மூன்ருவதாக வாலியிருக்கின்றனன். ஆதலால் தமையனிடத்தில் உயர்ந்த குணம் படைத்த தம்பி கட்டிச் சொல்லக் காரணமில்லை. இங்கே அயலவன் முன் அண்ணன் சொற் சோர்வுறுகின்ற பொழுது ஒரு அருமைத் தம்பி விட்டுக் கொடுக்க முடியாது. ஆதலால் இதுவே கட்டுமொழி யென்பதில் யாதொரு ஐயத்திற்கும் இடமில்லை. இப்படிச் சொல்லலாமா? என்றெல்லாம் போரிடுவதில் பொருளில்லை. "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்'' என்ற அறத்தாற்றைச் சிந்தித்தமைய வேண்டியவிடம் இதுவே. இதுவொரு புரை தீர்ந்த நன்மை பயக்குமா? பயந்து அத்தன்மை நிலை பெற்றும் நிற்கின்றதென்பதை வரும் நிகழ்ச்சியே நிலை நாட்டும்.

> ''கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை மனத்திற் கொண்டான்
> அவியுறும் மனத்தனுன் அறத்திறன் அழியச்செய்யான்
> புவியிடை யண்ணல் என்பதெண்ணினன் பொருந்தி முன்னே
> செவியுறு கேள்விச் செல்வன் சென்னியையிறைஞ்சிச்
> சொன்னுன்'' 118

வாலி வழக்கு ஒருபக்கம் முடிவிற்கு வருகின்றது. இம்முடிவிற்கு முன்னின்ற பெருந்தகை இலக்குவனே. இதனை விளக்கிக்கூறும் பாடல், இப்படலத்தின் நூற்றுப் பதினெட்டாவது பாடல்.

> "கவிகுலத் தரசும் அன்ன
> கட்டுரை கருத்திற் கொண்டான்;
> அவியுறு மனத்தன் ஆகி
> அறத்திறன் அழியச் செய்யான்;
> புவியுடை அண்ணல் என்பது
> எண்ணினன் பொருந்தி முன்னே
> செவியுறு கேள்விச் செல்வன்
> சென்னியின் இறைஞ்சிச் சொன்னுன்''

இப்பாடலில், வாலியின் உள்ளத்தில் இராமபிரான் பெற்றிருந்த இடமும், கம்பர் கருத்தில் வாலிக்கு வகுத்திருந்த சிறப்பும், கண்கூடாகக் காணக் கிடைக்கும். இப்பாடல் வாலியின் கருத்தில் தோன்றிய எண்ணங்களைக் காட்டுகின்றது.

> "தாய் என உயிர்க்கு நல்கித்
> தருமமும் தகவும் சால்பும்
> நீஎன நின்ற நம்பி
> நெறியினின் நோக்கும் நேர்மை
> நாய்என நின்ற எம்மால்
> நவையற உணரல் ஆமே?
> தீயன பொறுத்தி என்ருன்
> சிறியன சிந்தி யாதான்"

என அடுத்துவரும் பாடல், வாலி சிந்தித்தபின் வெளிப்படுத்திய விளக்கங்களைக் காட்டுகின்றது.

வாலி எளிய ஒருவன் அல்லன். அவன் தங்கள் வானர இனத்திற்கெல்லாம் அரசன். அவன் வெற்ருளாய் அரசாண்டவன் அல்லன். கற்றுச் சிறந்து

அரசாண்டவன். வாலி கற்றவன் மட்டுமல்லன், கேட்பன கேட்டவன். கேட்டதுமட்டுமல்ல, கேட்டவற்றைச் சிந்தித்து தெளிந்து, அகலாமல் கருத்தில் இருத்திக் கொண்டவன். அவன் கேள்வி இன்பத்தில், இராம பிரான் வரலாறும் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. திருமாலுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அது இராமாவதாரம் ஒன்றிலேயே உற்ற பெயர். அது என்னவெனில் "புருஷோத்தமன்'' என்ற திருப் பெயரே. இதன் பொருள் என்ன? இம்மண்ணுலகத்தில் மற்றுள்ள மக்களைப் போல ஒரு குடியில் தோன்றி வளர்ந்து, ஒக்கலொடு இருந்து உறவாடி, இன்ப துன்பங்களிலும் ஈடுபட்டிருந்து, எந்த இடருற்றபொழுதும் தனது அடிப்படைப் பண்புகள் கெடாமல், எல்லா வகைச் சிறப்புகளும் இயல்பாகவே அமையப்பெற்று இலங்கி, மனிதருக்குள் மேம்பாடுடைய பெருந்தகையோன் என்பன போன்ற கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி நிற்பது, 'புருஷோத்தமன்' என்னும்பெயர்.

இந்தப் புருஷோத்தமன் என்ற சப்தத்திற்கு, தமிழுரைத்தருள்கின்றார் நம் கம்பநாடர். "புவியினுக்கு அண்ணல்". புவி என்பது உலகம். இங்கே மண்ணுலகம் என்பது பொருளல்ல. "மனித உலகம்" என்று பொருள். அண்ணல் என்றால் மிகச் சிறந்தவன். எனவே மனிதர்க்கெல்லாம் மேலானவன். புருஷோத்தமன்.

வாலி, இராம அவதாரச் சிறப்பெல்லாங் கேட்டுக் கேட்டுத் தெளிந்து, அப்பெருந்தகைக்குத் தனது உள்ளத்தில் தக்கதோர் இடமளித்திருந்தனன். அதனால் தான், யாரோ இராம இலக்குவராம், அவர்கள் உனது தம்பிக்குத் துணை வந்துனராம் என்று, தனது மனைவி தாரைகூறிய உடனே, துடிதுடித்து, "அடிபாவி! பெண்புத்தியால் பிழைபட்டுவிட்டனையே, இராமனை யார் என நினைத்தனை" என்று மனைவியை அதட்டிப் பேசலாயினன். இவ்வளவு சிறப்பியல்பினனைகத் தன்னுள் மதிக்கப்பெற்றிருந்ததொரு தலைமகன், தனக்குச் செய்த கொடுமை என்றால், என்னதான் செய்வான் வாலி? மிகவுந் துடிதுடித்தான், ஏசினான், பேசினான், எல்லாம் முடிந்தன. தனது ஏச்சு வினாக்களுக்கு, எதிர்விடை அளித்த இராமனின் பேச்சு, ஏச்சாகவில்லை. அது அமைதியாக, நேர்ந்த நிலைமையைக் குறிப்பதாக இருந்தது. அப்பொழுதே, வாலிக்கு ஒருபடி அமைதி உண்டாகிவிட்டது. அங்கே "அவ்வுரை அமையக் கேட்ட அரிகுலத்தரசு" என்றனர் கம்பர். அப்படி அமைந்த அவன், தம்பியை எதிர்த்தது, அவன் மனைவியைக் கவர்ந்தது, அவனுக்காகத் தண்டித்தது சரி, மறைந்தடித்ததேன்? படையெடுத்ததேன்? என வினவினன்.

இவ்விரு வினாக்களுக்கும், மற்றவற்றிற்குமெல்லாம், விரைவாகவும் விளக்கமாகவும் விடையிறுத்து வந்த வீரன், மறுபேச்சு ஒன்றுமின்றி வாளாவிருந்தனன். இதுகாறும் இருப்பது தெரியாமல் அருகிருந்த தம்பி இலக்குவன், அண்ணன் இராமனுக்காக, ஓர் அழகிய விடையை அளித்தனன். அவ்விடை கற்பனையானது. ஆனால் பொருள் ஆழமுள்ளது. அது மிகவும் பொறுப்பும் நிறைந்தது.

இலக்குவப் பெருந்தகை இயம்பியது என்ன? "வாலி! உன் தம்பி முன்னமே வந்து சரண்புகுந்தனன். அவன் என்ன வேண்டிச் சரண் அடைந்தனன்? பெரிய வல்லமையுள்ள என் அண்ணன் ஒருவன். அவன் என்னைக் கொல்லத் துரத்துகின்றான். நான் இந்த மலையில் ஒளிந்து உயிர் தப்பினேன். அவன் என்னைக் கொல்லுவது உறுதி, என்னைக் காக்கவேண்டும். அடைக்கலம் புகுந்தேன்'' என்பது.

''முரனுடைத் தடக்கை ஒச்சி
முன்னவன், பின்வந் தேனை
இருள்நிலைப் புறத்தின் காறும்
உலகெங்கும் தொடர, இக்குன்று
அரண்உடைத் தாகி உய்ந்தேன்;
ஆருயிர் துறக்கல் ஆற்றேன்;
சரண்உனைப் புகுந்தேன் என்னைத்
தாங்குதல் தருமம் என்றான்'' (மராமரப் 63)

ஒரு தம்பியை அண்ணன் கொல்லத் துரத்துகின்றான். அஞ்சி ஓடுகின்றனன் தம்பி, அவன் இராமன்பால் அடைக்கலம் என்கிறான். இராமனோ தன் தம்பிக்காக உலகையெல்லாம் ஆளும் உரிமையை ஈந்த நல்ல அண்ணன். எப்படியிருக்கும்? அந்நிலையில் இராமன் கூறிய மறுமொழி என்ன? உன்னைக் கொல்லத் துரத்துகின்ற அண்ணன் யார்? அவன் பெயர் என்ன? ஊர்தான் என்ன? ஒன்றுமே கேட்கவில்லை. "ஏ! அண்ணனால் துரத்தப்படுகின்ற தம்பி. இனி உனக்கு அண்ணன் நானே, அவன் வானவனேயாக, மற்றவனேயாக, உன்னைக் காப்பதற்காக அவனை அழித்தொழிப்பேன்" என மிக உறுதியாக அடைக்கலம் தந்துவிட்டான் இராமன். இங்கே அரசைக் கவர்ந்தான், மாதைக் கவர்ந்தான், அவற்றை வாங்கித் தரவேண்டும் என்றெல்லாம் கேட்கவில்லை சுக்கிரீவன். இவ்வளவு இந்திரஜாலமாக அடைக்கலம் கேட்க வகை செய்த வல்லுநன், மந்திரியாகிய அந்த மாருதியேயாகும். வாலியின் பெருமைகளையும், அவன் பரமன்பால் பெற்றிருக்கும் வரத்தின் ஆற்றலையும் சொல்லாவிடினும், தான் இழந்த அரசையும் தாரத்தையும் வாங்கித் தரவேண்டுமென வேண்டியிருந்திருப்பானாயினும், ஒரு பெருங் காவியத்தைக் கறைபடியச் செய்துள்ள இந்த குறைபாடே வந்திருக்காது.

தனது தாரத்தைத் திட்டமிட்டுச் சதிசெய்து கவர்ந்து போன கொடியவன் இராவணன். அக்களவினைக் கண்ணாரக் கண்ட சான்று சடாயு. அவ்வளவு கொடியவனுக்கும் தூது அனுப்பி, 'எனது தேவியைவிட்டு உனது ஆவியைக்காத்துக் கொள்ளுக' எனப் புத்தி சொல்லும் இராமன், நேருக்கு நேரே போர்க்களத்தில் ஓசையற்றுப் பூசலற்றுத் தலைகவிழ்ந்து நிலங்கிளர்ந்து நிற்கும் அக்கொடியவனுக்கு எனது தாரத்தைவிடு, உனது தம்பிக்கு அரசைக்கொடு இன்னும் வெற்றியில் ஆசையா இன்றுபோ நாளைவா? என்றெல்லாம் சொல்லும் பெருங்குணம் படைத்த ஒரு பெருந்தகை, தனது குலங் குறைபட உடனுள்ள தம்பி தவிக்க, யார் மேலோ வாளி விடுகின்றோமெனக் கருதித் தனது குலமும் நலமும் குடிகொண்டிருக்கும், தஞ்சம் என்ற நெஞ்சைத் துளைத்தா நிற்பான்? நேமியை வைத்து வில்லேந்தி வந்த நீர்மையன். அவர்கள் வரம் வாங்கிக் கொண்ட வகையால் விளைந்தது இது.

இக்கருத்துக்களை யெல்லாம் சுருக்கிச் சொல்லுகின்றது இளவல் இசைத்த விடை. "முன்பு நின் தம்பி வந்து சரண்புக முறையிலோயை'' வாலியையல்ல, வாலி என்ற சொல்லே தான் அங்கு வரவேயில்லையே. மனைவியிழப்பு அரசிழப்பு ஒன்றுந்தான் தலைகாட்டவில்லையே. ஒரு தம்பியைக் கொல்லாநிற்கும் முறைகெட்ட முன்னவனை, "தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன்'' அவ்வொப்பத்திற்கேற்றபடி செப்பமிட்டாயிற்று. "செருவில்நீயும், அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானும் என்றி" என்பது கருதி, அண்ணல் மறைந்து நின்று எய்தது என்ருன்.

இவ்விளவல் உரையில் "முறையிலோயைத் தென்புலத்துய்ப்பனென்று செப்பினன்''. அது எப்போது? முன்பு பொருள், முதல் முதல் நடந்தது இது என்பதே. இவ் ஆழ்ந்த கருத்தெலாம் அறிந்த வாலி, தன் குறைகளை விரித்துக்கூறிக் கையடை பெற்று விட்டார்கள், பின்னர் தனது வரலாறுகள் அனைத்தையும் விளக்கி நின்ருர்கள். வரங்கொடுத்த வள்ளலுக்கு நேர்ந்த சூழ்நிலை இது, என்றதெல்லாம் அறிந்து கொண்டனன். பின்னர் மறைந்ததற்கு இளவல் கூறும் காரணம் நடந்ததுமல்ல, தனது தமையனேடு கலந்ததும் அல்ல. இடத்தையும் காலத்தையும் எண்ணி இளவலே புனைந்தது என்பதனையும் வாலி விளங்கிக் கொண்டான்.

"கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை (கொண்டானல்ல) (கேட்டுக் கொண்டானல்ல) மனத்தில் கொண்டான்'' மனமார ஆராய்ந்து கொண்டான் என்பது கருத்து. கட்டுரை என்ற சொல்லுக்கு, இன்றைய கருத்து, உரை நடையாக எழுதும் நூல் என்பது ஒன்றே. முன்னர், கட்டுரையென்ருல், கற்பனை, கட்டிப் பேசுதல், எனப் பொருள் கொள்ளப்பட்டது. இவ்விராமாயணத்திலேயே மற்ருெரு கட்டுரையையும் காண்கின்ருேம். இங்கு வருவது ஒரு மானவன் கட்டுரை, அங்கு வருவது ஒரு கூனவள் கட்டுரை. அவள் கட்டுரைத்தது, ஒற்றுமையாக வாழும் இருவரை வேற்றுமைப் படுத்துவதற்காக இச்செம்மல் கூறுவது வேற்றுமையுற்றிருக்கும் ஒரு அன்பனையும் ஒரு அருளாளனையும் ஒற்றுமைப் படுத்துவதற்காக.

தசரத மன்னனுக்கு இளந்தேவி கைகேயி, அவள் அரசனுக்கு யாரினும்பிரியாள், அசுரர் போரினும் பிரியாள். அம்மடந்தை தனது பள்ளியறையில் பஞ்சணையில் கவலையற்றுக் கண்ணுறங்கினள். அவள் பாதத்தைத் தீண்டினுள் கூனி. கூனியும் அவளாக வரவில்லை. அவளை ஒரு கொடுவினை தூண்டிற்று. கற்புநெறி நின்ற கைகேயி விழித்தனள். தூக்கமும் நன்ருகத் தெளியவில்லை. ஆயினும் அழுது தொழுது அவளுக்குச் சில சொல்லலாயினள் கூனி. ஆங்கவள் சொல்லப்புகுவன "கட்டுரை'' யாம்.

"தீண்டலும் உணர்ந்தனள் தெய்வக் கற்பினள்
நீண்டகண் அனந்தரும் நீங்குகிற்றிலள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினுள்''
(மந்தரை சூழ்ச்சி 44)

அங்கே, கூனியுரைத்தது கட்டுரை எனத் தெரியாமல், மயங்கி அவள் வழிப்பட்டனள் கைகேயி. இங்கே, இலக்குவனுரைப்பது கட்டுரையெனத் தெரிந்து தெளிந்து, இலக்குவன் வழிப்படுகின்றனன் வாலி. இப்படி மாறுவதற்கு ஏதுவென்னெனில், இரு கற்பனைக் காரரின் நெஞ்சகத்தின் நிலைமையேயாகும். ஒன்று ஒளிநிறைந்த உள்ளம், ஒன்று இருள் செறிந்த உள்ளம்.

வாலியும் அவன் தம்பியும் மற்போர் புரிந்தனர். அப்பொழுதே வள்ளலும் இளவலும், சோலைக்குள் சொற்போர் புரிந்தார்கள். அச்சொற் போரில் வள்ளல் சுக்கிரீவன் பக்கம் வாதமிட, இளவல் வாலி பக்கமாக வாதிட்டனன். இங்கு வள்ளலுக்கும் வாலிக்கும் நடக்கும் சொற்போரில், அந்த வாலிக்கு எதிராக இராமன் பக்கமிருந்து விடையிறுக்கின்றனன் இலக்குவன். இப்படி மாறுபட்ட இளவலின் இரண்டு உரைகளில் இது கற்பனையா? அது கற்பனையா? இதுவே கட்டுரை. ஏன்? அங்கு பன்னுள் பழகிய அண்ணனுந் தம்பியுமே இருந்தார்கள். அயலவர் ஒருவருமிலர். ஆதலால், அங்குக் கற்பனைக்கு இடமில்லை. இங்கு அயலவனுக வாலி நிற்கின்றனன். இவனுக்கு உரைக்கும் இதுவே கட்டுரையாக இருக்க வழியுண்டு.

வாய்மையைப் பற்றிக் கூறவந்த வள்ளுவர், "வாய்மை எனப்படுவது யாதெனில்?'' என ஒரு வினுவை எழுப்பினுர். நடந்தவற்றைக் கூறுவது வாய்மை, நடவாதவற்றைக் கூறுவது பொய்மை, எனவே எல்லோருங் கொண்டிருப்பது தெரியாமல், அவர் வினு. இப்படிக் கொள்வதில் ஒரு சிறந்த திருத்தத்தைத் தெரிவிக்கவே அப்படித் தாமேவினவித்தாமே விடையும் இறுக்கின்ருர். அப்படி வினவிய வள்ளுவர் எதனை வாய்மை என்கின்ருர்? "யாதுஒன்றும் தீமையே இலாதவற்றைச் சொல்லுவதை. அப்பொழுது, நடந்தது ஒன்றை வெளியிட்டு, அதனுல் ஒருவருக்குத் தீமை வருமானுல் அது வாய்மையல்ல என்று ஆயிற்று. இனி நடவாத ஒன்றையும் சொல்லலாம். அது, அந்த நேரத்தில், அந்த இடத்தில் நேர்ந்துள, அல்லது நேரவிருக்கின்ற துன்பத்தை நீக்கி இன்பத்தைச் செய்ய வல்லதானுல். இப்படிக் கூறும் "பொய்மையும் வாய்மையே". "பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனில்'' இங்குவரும் இடத்து என்றது காலத்தையும் இடத்தையும் குறிக்கும். அப்படியானுல் உலகமக்களெல்லாம் ஒரு பொய் சொல்லப்புகுங்கால், ஒரு பயனும் கருதாமல் யாரும் சொல்லுவதில்லை. அப்பயன் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமாகத்தான் இருக்கும். அப்பொழுது பொய்யெல்லாம் இத்திருக்குறளின்படி மெய்யாகி விடுமானுல், பின்னர் பொய்யென்பதும், மெய்யென்ப தொன்றுமே மிஞ்சாதே என்ன செய்வது?

இந்தத் துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் சொல்லுகின்ற ஒருவன் தனக்கே பயன்படல் கருதிச் சொல்லுவானுனல் அது பொய்யேயாகும். பிறர்க்கு வரும் துன்பத்தை நீக்குதல் கருதிச் சொல்லுகின்றபொழுது தான், இந்தத் திருக்குறள்குறுக்கிட்டு அந்தப்பொய்யை மெய்யாக்கத் துணை செய்யும் என்பதனை உன்னியுணர வேண்டும். இங்கே இராமபிரான், சுக்கிரீபவனுக்கு அடைக்கலங் கொடுத்துவிட்டேன். உன்னெதிர்வந்தால் நீயும் அடைக்கலமென்பாய், ஒருக்கால் அப்படி நேர்ந்தால் முன் கொடுத்த வாக்கு என்னுவது, என்று தான்

மறைந்து நின்றது எனக்கூறியிருந்தால், அது உறுதியான பொய்யேயாகும். மற்றவனை இலக்குவன் இசைப்பதனால் மிக உறுதியான மெய்யாகி விடுகின்றது அது.

ஒரு கணவனும் மனைவியும், ஒரு குருவும் சீடனும், ஒரு அண்ணனும் தம்பியும் உள்ளத்தால் பிரிக்க முடியாத ஒருவரேயாயினும், உருவத்தால் சேர்க்க முடியாத இருவரேயாவர். இது ஒன்றல்லாத ஒன்று, இரண்டல்லாத இரண்டு. "அத்துவைதம்" "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம்" அண்ணனைவிட்டு நீங்காத தம்பி. இந்த இலக்குவப் பெருந்தகையே. மற்ற இரு தம்பியருக்கும் அப்படியிருக்கவே ஆசை. ஆனால் அவர்களுக்கு அவ்வித வாய்ப்பு ஏற்படவில்லை. இராமற்கு நேர் இளவலான பரதனே "நான் என்றும் குறைவிலாத துன்பத்திற்கு ஏதுவானேன், அவன் அது துடைக்க நின்றான்" என இலக்குவற்குற்ற வாய்ப்பினை எடுத்துக் கூறினன். பின்னர் வந்த மாகவி வில்லியாரும் "இலக்குவன் ஒரு வாய்த்த திருத்தம்பி" என விளக்கஞ் செய்துளார்.

இந்த இளவல் என்றுமே அண்ணலுக்குத் துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் செய்துவரும் உலகத்திற்கொருவனை தம்பி. இப்படியுள்ள இளவல் இங்கு அரும்பெரும் அண்ணனுக்கு ஒருபுடை அறத்தை நோக்கிச் செய்த செயலே ஒருபுடை மறமாகி மாசுபடுத்த வந்த நேரத்தில், தலை கொடுக்காமலிருக்க எங்ஙனம் முடியும். வாலியின் வினைக்களுக்கு விறுவிறுப்பாக விடையிறுத்து வந்ததொரு வில்வீரன், ஒருசொல் வீரன் எதிர்நின்று சோர்வுறுகின்ற பொழுது, எப்படித்தான் வாளாவிருக்க இயலும். தனக்குத் தெரிந்த வழியெலாம் கொண்டேனும், அண்ணலைத்தாங்க வேண்டாவா. "அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போற்றாக்கடை" அறிவு நிறைந்த இலக்குவன் ஆய்ந்து பார்த்து, நாம் சொல்லப்புகும் சொல் யாதாயினும் அது "அங்கணத்து ளுக்க அமிழ்தாகாது "வாலி நம் கணத்தன் அல்லானல்லன்". அவன் நமகணத்தன். அண்ணனும் வாலியின் உளக்கிடக்கை அறிய வாய்ப்பில்லாது வந்து விட்ட செயல் இது. இங்கொன்றைச் சொல்லுவது இவ்விடத்துப் 'புரை தீர்ந்த நன்மை பயக்கும்' என்பது எனக்குத் தோன்றும் உறுதியெனக் கொண்டே இக்கட்டுரையைப் பயன்படுத்தினன். இளவல் என்பதை எல்லாம் வாலி நன்குணர்ந்தனன். அவன் "மனத்திற்கொண்டனன். எதனை? மன்னன் கட்டுரையை" அப்படி அவன் கொண்டதின் பயன் என்ன? அவன் "அவியுறுமனத்தனான்". எப்படிப்பட்ட நேரம் இது? இரு பெரியவர்களுக்கு உயிர்சோரும் நேரம். வாலிக்கு உடம்பில் உள்ளத்திலுள்ள உயிர் (மானம்) நிலை கலங்கி நிற்கின்ற நேரம். உடம்பை விட்டு ஓடிக்கொண்டிருக்கும் உயிரைத் தனது உள்ளத்தின் உறுதியால் பற்றிக்கொண்டு, இராமன் வாளியைக் கரத்தால் பற்றிக்கொண்டே பேசிக்கொண்டிருந்த பெருவீரன், வாலி. இராமன் பேச்சற்றிருந்த பெருமையையும், இளவல் ஈடுகொடுத்திசைக்கும் கற்பனையையும் வெறுக்கவில்லை. மிகவும் அவன் விரும்பினான். உயிரோயுமிடத்தில் தக்கவரைச் சார்ந்தோம் என்பது அவனது உள்ளக்கிடக்கை ஆயிற்று. அவன் மடங்கிநின்றனன். மனமடங்கல் ஆசையடுதல். "ஆராவியற்கை யவா" நீங்கினன் வாலி. பேரா இயற்கை பெற நிற்கின்றனன்.

இளவலின் கட்டுரை தன்னை எதிர்த்துத் தமையனை ஆதரித்துப் பேசுவதாக மட்டுமில்லை. வாலியின் உருக்கமுள்ள, ஆனால் ஆத்திரப் போர்வையைக் கொண்ட வினாக்களை எல்லாம் உற்று நோக்கிக் கொண்டிருந்த இளவல், இவ்வளவு அன்பு நிறைந்த நினக்கு அண்ணல் அடைந்த சூழ்நிலைகள் தெரியாதா? கடைசி நேரத்தில் உள்ளத்தில் ஒருமையுள்ள நீ வள்ளலோடு உலகமறிய, வெயிலும் ஒருமைப்பாடு காட்டலாகாதா? எனப் புத்தி புகட்டுவதாகவும் இருந்தது. அதனால் தான் மாயைக் கிடமான மனத்தையே அவித்துக் கொண்டனன் வாலி. வாலி இங்கு ஐம்புலன் அவித்தானல்லன். ஐம்புலங்களுக்கும் அரசாகிய மனத்தையே அவித்த பெருந்துறவியாயினன்

மனமடங்கக் கற்ற வாலி, அவன் அண்ணல்பால்பட்ட குணங்களை எல்லாம் நாடிச், சார்ந்தவரால் நேர்ந்த ஒரு சிறு குறையையும் நாடி, அவற்றுள் மிகைபட்ட குணநலமே முன்னிற்க, தான் முன்னமே கண்ட தலைமகன், தலைமகனே எனத் தனது உள்ளம் பகைமையின்றி மிகவும் பொருந்தினவனாயினன். ஒரு ஒப்பற்ற தலைவனையறிவது எது? அறிவு தான். அத்தலையறிவு தன்னையும் தலைவனையும் நன்கு அறியும் பொழுது தானே வணங்கும்.

வாலியின் தலை இராமனைக் கண்ணிற் காணாத பொழுதெல்லாம் இராமன் இயல்புகளை எண்ணிஎண்ணி வணங்கிக் கொண்டிருந்தது. எதிர் வந்தபொழுது வணங்கவில்லை. அதற்குக் காரணம் வாலியுமல்ல இராமனுமல்ல. "சிற்றினங் குரங்கின் செய்கை"யால் நேர்ந்த இடையீடு. இளவலுரையால் அவ் இடையீடு அகன்றது. வாலியின் சென்னி பழையபடி வணங்கத் தலைப் பட்டது. தனது கருத்திற் குடிகொண்ட இராமனைக் கண்களில் கண்ட பிறகு வாலி வணங்கும் முதல் வணக்கம் இதுவே. வணங்கிய வாலி தனது உள்ளக் கிடக்கையை வெளிப்பட உரைக்கவுந் தலைப் பட்டனன்.

வாலி முன்னரும் பலமுறை இராமனை அழைத்தழைத்துப் பேசினன். அவ்வழைப்புகளில் நிறைந்த பொருள்களிருந்தன. ஆனால், ஓசையின்பம் இல்லை. ஏன்? அவை நிறைந்த ஆத்திரமடைந்த நேரம். இப்பொழுது அழைக்கும் அழைப்புகள் ஒலியாலும் சிறந்தவை, பொருளாலும் பொலிவுடையவை.

"நம்பீ! நீ உலகத்துள உயிர்களுக்கெல்லாம் அவ்வவற்றை ஈன்று காக்கும் தாயாரை ஒத்தவன். நீ தருமத்திலும் தகுதியிலும் சான்றாண்மையிலும் ஒப்பவரிலாத ஒருவன். நல் வழியே நினது தொல்வழி. உன்னால் அணைக்கப்பட்டவனும் அழிக்கப்பட்டவனுமாகிய எனது தம்பியும், நானும் எப்படியிருக்கின்றோம் தெரியுமா? நாய் என நிற்கின்றோம். நாய்க்குணம் வேற்றுமையறியாது யாரையும் தழுவி வளர்க்கின்ற குணம். நாய்க்குணம் உடன் பிறந்த ஒன்றையும் இனத்திலுள்ள எல்லாவற்றையும் எதிர்த்துச் சீறிக் கடித்துத் துரத்தும் குணம். உனது உயர்ந்த வழியில் எங்கள் இழிந்த வழியெப்படிப் பொருந்தும். ஒரு சிறிதும் பொருந்தாததலால் தீயவை பல செய்துவிட்டேன். எனது சிறப்பை மறந்து பிறப்பின் பேதைமையால் செய்த செயல்களையெல்லாம் பொறுத்துக்

கொள்ள வேண்டுகிறேன் என வேண்டிக் கொண்டனன் வாலி. வாலியை முன்னே "கேள்விச் செல்வன்" என்றனர். "பிறர் பழிக்கும் நாணும் பெருங்குணத் தன்" என்றனர். இப்போது "சிறியன சிந்தியாதான்" எனக்கூறிச் சிறப்பிக்கின்றார் கம்பர்.

வாலி கடைசியாகக்கேட்ட, மறைந்து நின்றது, படை கொண்டடர்த்தது ஏனென்ற இரு குற்றச்சாட்டுகளில், மறைந்து நின்றதற்கு ஒருவாறு, இளவல் விடையிறுத் தனன். ஆனால், வெறுங்கையன்மேல் வில்லெடுத் ததற்கு, ஒருவரும் ஒருவிடையும் தரவில்லை. அக்குற்றச் சாட்டிற்குத் தானே விடையிறுத்துக்கொண்டு, அதனை விட்டு விட்டனன் வாலி. வாலி பொறுத்துவிட்டு விட்டால் விடட்டும், அரங்கத்திற்கு வந்த வழக்கில், அப்படி எந்த விடையை வாலி தானே வகுத்துக் கொண்டனன் என்பது அவன் வழக்கில் கண்ணோட்ட முற்று வரும் உலகவருக்கும் உணர்த்தவேண்டாமா? வேண்டும். அது "நாயெனத்தக்கவெம்பால்" என்ற சொல்லுக்குள் உளது. நாய் மனிதனைக் கடிக்கும், மனிதன் நாயைக் கடிக்க முடியாது. ஏன் அதைவிட உயர்வுள்ள ஒருவன் அச்சிறு தொழிலைச் செய்யா னென்பதற்காகவோ, ஆம். அன்றியும், நாய்க்குள்ள கூர்த்த பற்கள் மனிதனுக்கு இல்லை. அதனால் அவன் தனது பெருமிதத்தை விட்டுக் கடிக்கப் புகுந்தாலும் அது முடியும் செயலல்ல. அதனால்தான் "கூர்த்து நாய் கவ்விக் கொளக் கண்டும் தம்வாயால் பேர்த்து நாய் கவ்வினர் ஈண்டில்லை" எனக் கூறினர். பின்னை நாயை அடக்குவது எப்படி? நாய்க்குப் பல்லுண்டு, மனிதனுக்குக் கல்லுண்டு என்பதுதான் உலகியல். குரங்கிற்கு வாலுண்டு, மனிதன் அதை ஆட்டவேண்டு மானால் அது மதியாது. இவன் அதன் வாலைப் போல ஒருகோலைத்தேடிக்கொண்யால் தான் குரங்கினிடத்தில் சேவகம் செய்யமுடியும். "கோலாடியபடி குரங்காடும்" இந்நியாயம் உலகத்து மற்ற குரங்குகளுக்கு எல்லாம் சரிதான். ஏன், அவை பேசத் தெரியாத குரங்குகள், வாலி அப்படியா? வாலிக்கு வாலும் உண்டு, கற்று வல்ல நூலும் உண்டு. வாலியின் வால் அவனது உடலோடு ஒத்தது எனினும், அதைவிடப் படை யொன்றுங் கிடையாது. அது இருபது கைக்காரன் படைகளை எல்லாம் அதிரவைத்தடக்கும் படை. ஆனாலும், உனக்கும் வாற்படையுளதேயென இராம பிரானே இலக்குவப்பெருந்தகையோ, இசைப்பதற் குரிய நல்ல அந்த இயற்கையில் அமைந்த படை. இப் பெரும் படையாளியான வாலி, சொல்லமுடியாமல் உள்ள சூழலும், தனக்கு நெடுங்கால உறவினர் களாகிய இருவருமாக "குற்றமொன்றும் பாராட்டித் திரியாமல்" விட்டுக் கொடுத்து விட்டனன். இதனால் தான் "சிறியன சிந்தியாதான்" என்ற பெரும் பட்டம் தமிழகத்துப் பல்கலைக்கழகத் தலைவராக முக்காலத்திற் கும் இலங்கும் கம்பரால் பெற்றனன்..

"தாயென உயிர்க்கு நல்கித்
  தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி
  நெறியினில் நோக்கும் நேர்மை
நாயென நின்ற வெம்மால்
  நவையற வுணர லாமே ?
தீயன பொறுத்தி யென்றான்
  சிறியன சிந்தியா தான் (வா. வ. 119),

ஒரு பெரியவரைப் பார்த்து ஒரு சிறியவன், தன்னை "என்பால்" எனக் கூறுவனேயன்றி "நாயெனத் தக்க எம்பால்" எனப் பன்மையாகக் கூறுவதலால், இங்கு வாலி தன்னையும் தம்பியையும் சேர்த்துக் கொண்டு, நாய்களைப் போல நாங்கள் ஒருவனையொரு வன், வஞ்சித்து வாதிட்டுக்கொண்டு, உயர்ந்த பெருந் தகையான உனக்கு மாசளித்து விட்டோம். ஆதலின் என்னையே அன்றி நின்னை இக்குறைபாட்டிற்கு ஆளாக்கிய எனது பின்னவன் தன்னையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென வேண்டினன் வாலி என்பது தெற்றென விளங்குதலைக் காணவேண்டும். இவ்விடத் தில் தனது தமையனைத் தாங்கிப் பேசிய இளவலின் முன்னே தன்னைக் கொல்லுவித்த தம்பியைத் தாங்கிப் பேசுகின்றனன் வாலி என்றால், வாலியின் மேதக்க மேன்மையும் அவனுக்குக் கம்பர் தரும் ஊழி காணும் ஒல்காச் சிறப்பினையும் உளங் கொளல் வேண்டும். வாலி வழக்கு ஒரு பகுதி முடிவுறுகின்றது எனத் தொடங்கினோமல்லவா? "ஒருவன் பொறையிருவர் நட்பு" என்பது பழமொழியாதலால், வாலி பொறுத்துக் கொண்டது அன்றிப் பொறுத்துக் கொள்ளுங்கள் முழுதுமே, எனவும் கேட்டுக் கொண்டான். வழக்கு முடிந்தே விட்டதெனக் கொள்ளன்மின். வாலியின் வாதங்கள் முடிந்துவிட்டன. வாலியின் வேண்டு கோள்கள் பின்னுந் தொடருகின்றன. மற்றொரு பக்கத்து முதல்வனான இராமபிரான் நேர்பட ஒரு கருத்தும் வெளியிடவில்லை. ஆகலான் வழக்கு இன் னொரு பகுதி முடிவு பெறுமலே நிற்கின்றது. மேலும் நிகழ்ச்சிகளைக் காண்போம்.

இராமபிரானை முன்னர்த்தாயே என அழைத்த வாலி இப்பொழுது தந்தையே என அழைக்கின்றனன். தாய் உடம்பிற்கு உறுதி செய்பவள், தந்தை உயிருக்கு உறுதி செய்பவன். அவன் மேலும் பிறவியாகிய பெரும் பிணிக்கு மருந்தே எனவும் அழைத்தனன். வேண்டு வார் வேண்டியதெல்லாம் தரும் அருளாளன் எனவும் அழைத்தனன். இப்படி அழைத்த வாலி "எளியனேன் இன்னதிது எனத் தெரியாத புன்பிறப்பினேன் என்பதைக் கொண்டு யான் கூறியவற்றுள் வந்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டு கின்றேன். இன்னும் வேண்டுவது உளது எனப் பின்னும் பேசுகின்றனன்.

"இரந்தனன் பின்னும்எந்தை
  யாவதும் அறிதல் தேற்றாக்
குரங்கு எனக்கருதி நாயேன்
  கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தை வெம்பிறவி நோய்க்கு
  அருமருந்து அனைய ஐயா
வரந்தரு வள்ளல்ஒன்று கேள்
  என மறித்தும் சொல்வான் (வா. வ. 120)

மேலே வந்த பாடலில் மறித்துச் சொல்வானென வந்த சொற் பொருள்களுக்குத் தொடர்புடைய பாடல் 126 பாடலாக இருக்கின்றது. இடையில் வரும் "ஏவுகூர் வாளி, புரமெல்லாம் எரிசெய்த, மாவலிச்சூலியார், யாவரும் எவையும், உண்டெனுந் தருமமே என்ற தலைப்புகளையுடைய ஒரு ஐந்து பாடல்களும் துதிப் பாடல்களாகவே வருகின்றன. மேலும் அவற்றில் இடைப் பாடலாகவுள்ள மாவலிச் சூலியார் என்ற பாடல் சில பிரதிகளில் காணப்படவில்லை. அன்றியும்,

மேல்வரப் போகும் 132, 133-வது பாடல்களிலுள்ளதை விட, இப்பாடல்களால் திருமாலுக்கு மிகுந்த சிறப்புகள் ஒன்றும் காணப்படவுமில்லை. மற்றும், முன்னர்க் கம்பர் இராமபிரான் வாக்காக வாலிக்கு விடையிறுத்தற் பொருட்டுக் கூறும் காலமுற்றல் என்ற பாடலுக்கு நேர் எதிர்மறையான பொருள்களைக் கூறுவனவாகவும் இருக்கின்றன. ஆதலின் அவ்வைந்தனையும் சிந்தனைக் குரியன என்று வைத்து மேலே 126-வது பொருள் தொடர்புள்ள பாடலில் புகுவோமாக.

வாலி இராமபிரானை நோக்கி, ஏ தேவர்களினும் தேவனே! எனது தம்பி, மிகச் சிறுவர்களாகிய எங்கள் இனத்துள்ளார் சிலருடன் கூடி, என்னைக் கொல்ல என்று நின்னை அழைத்து வந்து, மிகச் சிறந்த உதவியை எனக்குச் செய்துவிட்டனன். நீ தேவருக்குந் தேவன்! அரசர்க்கும் அரசன். உன்னிடம் இவ்வுலக இன்பமும் அவ்வுலக இன்பமும் தரும் ஆற்றல்கள் உளதால், அற்பமான இவ்வுலகத்து அரசை அவன் பெற்றுக் கொண்டு, மேலான வீட்டின்பத்தை எனக்கு அளிக்கச் செய்துவிட்டனன் எனது தம்பி. இப்படி அவன் எனக்குச் செய்த உதவி பேருதவியாகும் என்றனன்.

"மற்றினி புதவி யுண்டோ
வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ நின்னை என்னைக்
கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடு
தெரிதரச் செய்த செய்கை
வெற்றர செய்தி யெம்பி
விட்டரசு எனக்கு விட்டான்" (வா. வ. 126)

வாலி மேலும் ஒன்று வேண்டுகின்றான். ஏ அழகனே! எனது தம்பி மதுவுண்டு மயக்கங் கொண்டு தவறுகள் ஏதேனும் இயற்றலாம். அப்படித் தவறி நடந்து மயக்க மிகுந்து ஏதேனும் செய்து விடுவனேனும் என் மேல் எய்த வாளியென்னும் எமனை அவன்மேல் விடா திருக்க வேண்டுகின்றேன் என்றனன்.

"ஓவிய வுருவ நாயேன் உள
தொன்று பெறுவ துன்பால்
பூவியல் நறவம் மாந்தி
புந்திவேறு உற்ற போது
தீவினை யியற்று மேனும்
எம்பிமேல் சீறி யென்மேல்
ஏவிய வாளி யென்னும்
கூற்றினை யேவல் என்றான்" (வா. வ, 127)

வாலி, மேலும் உனது தம்பிமார்கள் எனது தம்பியை இவன் தனது தமையனைக் கொன்ற தம்பியென ஏசு வார்கள். அப்படிச் செய்யா திருக்கும்படி அவர்களுக் குச் சொல்ல வேண்டுகின்றேன் என்றனன். வாலி இலக்குவன் கருத்தை உடனிருந்து அறிந்தவன் போல இப்படி இசைத்தனன். அவன் தனது இடத் திற்கு வந்த இராமபிரானுக்குத் தன்னால் ஒரு உதவி யும் செய்ய முடியவில்லையே என வருந்தினான். வாலி இராமனை நோக்கி அரசரேறே நான் உங்களுக்கு ஒரு உதவியும் செய்ய முடியாதெனினும் சற்று முன்னே உங்களோடு சந்திக்க நேர்ந்திருந்தால் எனது வாலால் அந்த இராவணனை இங்கு இழுத்துவரச் செய்திருப்பேன். பிறகு அவனே தேவியைப் பணிவோடு கொண்டு வந்து கொடுக்கவும் செய்திருப்பேன் காலங் கடந்துவிட்டதே என்ன செய்வேன், இனி இங்கு சற்று வல்லவனாகவுள்ளவன் இந்த அனுமன் தான். அவன் மிக நல்லவன். அவனை உங்கள் கரத் திலுள்ள கோதண்டம்போலப் பயன்படுத்தலாம். எனது தம்பியை உங்கள் தம்பியாகவே எண்ணுங்கள். பணிசெய்யத் தக்கவர்களில் இவர்களுக்கு ஒப்பான வர்கள் வேறு யாருமிலர். இவர்களால் அந்த தேவி யைத் தேடி நாடி அடையுங்கள் என்றெல்லாம், தனக்கு இடர் செய்வித்தவர் என எண்ணாமல், மிகப் பெரு மிதத்துடன் அனுமனாதியரை ஐயனுக்கு அறிமுகம் செய்து வைத்தனன் வாலி.

"மற்றிலேன் எனினும் மாய
அரக்கனை வாலில் பற்றிக்
கொற்றவ நின்கண் தந்து
குரங்கினத் தொழிலுங் காட்டப்
பெற்றிலேன் கடந்த சொல்லிற்
பயனிலை பிறிதொன் றேனும்
உற்றது செய் கென்றாலும்
உரியனிவ் வனுமன் என்றான்"

"அனுமன் என்பவனை ஆழி
ஐயநின் ஆழிச் செங்கைத்
தனுவென நினைதி யென்
தம்பி நின் தம்பியாக
நினைதியோர் துணைவ ரின்னோர்
அனையவர் இல்லை ஈண்டல்
வனிதையை நாடிக் கோடி
வானிலும் உயர்ந்த தோளாய்" (வா. வ. 130)

இத்தனையும் இராமபிரானை நோக்கி வேண்டிக் கொண்ட வாலி, கரத்தை நீட்டித் தனது தம்பியை வருக என்று அழைத்துத் தழுவிக் கொண்டனன். சுக்கிரீவன் வாலியின் மார்பகத்தில் பெருகிய இரத்த வெள்ளத்தைக் கண்டவுடன் சோர்ந்து விழுந்து அழுது கொண்டிருந்தனன். ஆதலால் வாலி அழாதே எனத் தம்பியை ஆற்றினான். ஆற்றி அவனுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறலாயினன்.

வாலி, தம்பியை மைந்தா என அழைத்தனன். எந்த நேரத்தில்? யாவர்முன்னர்? வாலியைக் கொல்லுவதற்கு ஒரு புதிய நமனைக் கண்டுபிடித்து விட்டேன் எனக் கூத்தாடிய அனுமன்முன்னர், அவர் கள் வழிநின்று உயிரொழிய வாலி ஏவிய இராமன் முன்பு, ஆவி அகத்ததோ புறத்ததோ என ஐயுற நிற்கும் நேரத்திலே, என்னே வாலியின் ஒப்புரவு? அப்படி அழைத்த வாலி அவர்களால் அழைத்து வரப் பெற்ற இராமபிரான் சிறப்புக்களை அவனுக்கே உணர்த்துகின்றனன்.

தம்பி! வேதங்கள் எதனை நாடுகின்றனவோ, தேவர்கள் எதனை நாடுகின்றனர்களோ, முனிவர்கள் எதனை நாடுகின்றனர்களோ, உலகெலாம் படைத்த பிரம்மதேவன் எதனை நாடுகின்றனனோ. அந்தப் பெரும் பொருளே, வில்லேந்தி வாளிப்புட்டில் கட்டிக் கொண்டு, மனித உருவம் எடுத்து, இராமன் எனப் பெயர் கொண்டு நமது முன்னே வந்து நிற்கின்றது. ஏன் வந்தது தெரியுமா? உலகத்தில் தரும வழியை மக்களுக்கெல்லாம் கற்பித்து வற்புறுத்தவே வந்தது. நான் கூறும் இக்கருத்துக்களில் ஒரு சிறிதும் சந்தேகப் படாதே என்றனன் வாலி:

"மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை யயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராம னாகி
அறநெறி நிறுத்த வந்தது
இறையொரு சங்கை யின்றி
யெண்ணுதி யெண்ணம் மிக்கோய் (வா. வ. 132)

தம்பி : நாள்தோறும் வஞ்சனையைச் செய்து வாழ்ந்து வந்த கொடியவர்களும், இவ்வீரன்வில்லடியுண்ட பொழுதே, உருவம் மாறித் தெய்வ உருவம் எடுத்து மேம்படுகின்றார்கள் என்றால், இப்பெருந்தகைக்கு ஏவல் செய்யும் வாய்ப்புப் பெற்றவர் நற்கதி பெறுவதில் ஐயமேது ? என்றனன்.

இப்படி பலவற்றைத் தம்பி சுக்கிரீவனுக்கு உணர்த்தினன் வாலி. உணர்த்திய பின் எதிர் நிற்கும் பேரழகினனாகிய இராமபிரானை நோக்கி, அரசருக்கெல்லாம் அரசனான பேரரசன் திருக் குமாரனே என அழைத்தனன். அப்படி அழைத்துத் தம்பி சுக்கிரீவனை இராமன் பக்கமாக அசைத்துவிடுத்து, அரசே : இவனை எங்கள் சுற்றத்தோடும் உனக்கு அடைக்கலமாகத் தருகிறேன். காத்தருள வேண்டும் எனக்கூறி, தனது உயர்ந்த கரங்களைத் தனது தலைமேல் குவித்து வணங்கினான். வாலியின் கரங்கள் தனது வாழ்க்கைக்காக எப்பொருளையும் யாரிடத்தும் வாங்காத கரங்கள், தன்னை வேண்டிய அமரருக்கும் ஆழியைக் கடைந்து அமுதத்தை அளித்த கரங்கள், பண்பாலும் உயர்ந்த கரமாயிற்று "உயர்கரம் உச்சிவைத்தான்". இவ்வணக்கம் வாலி இராமபிரானை நோக்கி வணங்கும் இரண்டாவது வணக்கம், முதல் வணக்கம் ? ஏந்தல் என்னை இக்கதிக்கு ஆளாக்கினான். ஆனால் எனது கேள்விகளுக்கு விடையிறுக்கும் அல்லலை அண்ணலுக்குக் கொடுத்ததும் அயலவரல்ல எனது தம்பியே, எங்கள் கூட்டமே எனின், பிழையெல்லாம் எங்களுடையதே எனச் சிந்தித்து உளம் ஒருமித்தபொழுது, முதல் முறை வணக்கஞ் செய்தனன் வாலி என்பதனையும் மறக்கக்கூடாது.

சுக்கிரீவனை அடைக்கலந் தந்து இராமபிரானை வணங்கிய வாலி, மறுபடியும் தனது தம்பியை நோக்கி தம்பி. உனது மகனை அழை, என்றனன். அவன் அண்ணன் மகனாகிய அங்கதனை அழைப்பித்தனன். தந்தைக்கு உற்ற பெருந் துன்பத் தொல்லையைக் கேட்ட அங்கதன். ஒரு பெருஞ் செல்வத்தில் வளர்ந்த செம்மல். அவனுக்கு அதுவரை துன்பமென்பதே தெரியாமல் செழித்து வளர்ந்தவன். அவன் ஓடிவந்து அழுது துடித்துத் தந்தை மீது விழுந்தனன்.

அங்கதன் எந்தையே எண்ணத்தாலோ செய்கையாலோ உலகத்தாரொருவருக்கும் ஒரு துயரும் செய்தறியாதோய், இப்படியாயினையே, உனது எதிரே கூற்றமும் வரத் துணிந்ததே என்று அழுதனன். மேலும் பார்வதிதேவியின் கணவனாகிய சிவபெருமானைத் தவிர வணங்கி அறியாத சிறப்பாளனே உனது உதவியைப் பெற்ற அமரர்கள் யாவரும் நரை திரையின்றி வாழுகின்றனரே, அவர்களுக்கு அமுதத்தை அளித்து நீயிந் நிலையாயினையே ! உன்னி யுணரும்பொழுது உன்னைவிடப் பெருங்கொடைஞர் ஒருவரும் உளரோ ? எனவுங்கூறி வருந்தினன்.

வாலி அங்கதனை வாரித் தழுவினன். அழாதே : சிறுபிள்ளைத்தனத்தை விடு. நீயெனது அறிவுரைகளைக் கேட்பாயல்லவா ? நீ பிழையறியாத தந்தையே என்கின்றாய். அமரருக்கு அமுதளித்த ஐயனே என்கின்றாயல்லவா ? இப்படியான் செய்த நல்லறங்களாலே நான் இப்பொழுது வீடுபேறு அடைகின்றேன். எனக்கு இந்த விடுதலையைத் தந்துதவும் பெருந்தகை இந்த இராமனே என்றனன் வாலி.

அங்கதா, உலகத்தில் தோன்றிய பொழுதே மறைவதற்காகிய திட்டமும் இடப்பட்டுள்ளது. எனது தவப்பயனால் இந்த நல்ல முடிவு கிடைத்தது. எனது இறுதிக்கு நீ வருந்தாதே. உனது உயிர்க்கு உறுதியைத் தேடு, மயக்கத்தைத் தருகின்ற பிறவிப் பிணிக்கு, மாமருந்தான ஒரு பொருளே, நமது கண்களுக்கு முன்னே வில்லேந்தி நிற்கும் இந்த இராமன் என வந்துள்ளது. நீயும், இப்பெருந்தகைக்கு ஏவல் செய்து வாழுக. போருற்றால், துணை நின்று போர் செய், என்பன வெல்லாம் இசைத்தனன் வாலி.

"தோன்றலும் இறத்தல் தானும்
துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுலகத் தினோர்க்கும்
மூலத்தே முடிந்த வன்றே
யான் தவமுடைமை யால்
இவ்விறுதி வந் திசைந்தது யார்க்கும்
சான்று என நின்றவீரன்
தான்வந்து வீடுதந்தான் (வா. வ. 147

"பாலமை தவிர்தி யென்சொல்
பற்றுதி யெனின் ஐய
மேலொரு பொருளு மில்லா
மெய்ப் பொருள் வில்லுந்தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த" (வா. வ. 148)

இப்படிப் பற்பல அறிவுரை அளித்த வாலி, தனது மகனை மறுபடியும் கட்டி அணைத்துக் கொண்டு, அரசருக்கு அரசனான அழகனை நோக்கி, மெய்ப் பொருள் அறியார்க்கு விளங்காத மேன்மையனே, இவன் எனது மகன் அங்கதன். இவன் அரக்கரென்னும் பஞ்சைச் சுட்டொழிக்கும் நெருப்பனைய தோள்களை உடையவன். ஆற்றலே அன்றித் தொழிலிலும் சிந்தையிலும் தூய்மையானவன். இவனை உன்பால் கையடையாகக் கொள்ள வேண்டுகின்றன் என்று கூறி அங்கதனை இராமபிரானுக்குக் காட்டினான் வாலி, இங்கு காணும் சொற்களை நுணுகி நோக்க வேண்டும். முன்னே தம்பியை அடைக்கலமாக்கினான் வாலி. அப்பொழுது சுக்கிரீவனை இராமன் எதிரே உந்தினான் என வருகின்றது. "உன்னடைக்கலம் என்று உந்தி உயர்கரம் உச்சி வைத்தான்" (வாலிவதை 138) இப்போது "கையடையாகு மென்றவ் விராமற்குக் காட்டுங் காலை" என வருகின்றது. பாடல் முழுவதும் காண்போம்.

" நெய்யடை நெடுவேல் தானை
நீல்நிற நிருத ரென்னும்
துய்யடைக் கனலி யன்ன
தோற்றத்தன் தொழிலும் தூயன்
பொய்யுடை யுள்ளத் தோர்க்குப்
புலப்படாப் புலவி மற்றும்
கையடை யாகு மென்றவ்
விராமற்குக் காட்டுங் காலை"

வாலி தனது மார்பில் மகனை அணைத்தபடியே இராம பிரானை நோக்கித் தனது மகனின் ஆற்றலையும் அன்புடைமையையும் தெரிவித்து, அணைத்தபடி உள்ள அங்கதனைச் சுட்டி, இவன் உனது அடைக்கலம் என்று கூறிக் காட்டினன் என வருதலை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்னே தம்பியை இராமன் முன் நகர்த்தினன் "உந்தி இப்பொழுது அங்கதனை அப்படி நகர்த்தினன்" என வரவில்லை. காட்டினன் என்றே வருகின்றது. இங்கே அங்கதனை இராமன் முன் உந்தினன் வாலி எனப் பாட்டில் காட்டாத ஒரு பொருளைத் தாமாகக் கொண்டு, வாலி அடைக்கலம் என்று உந்தியவுடனே அங்கதன் சென்று இராமன் அடிகளை வணங்கினன் என "தன்னடி தாழ்தலோடும்" என அடுத்த பாட்டில் வரும் சொல்லுக்கு அங்கதனைக் குறித்து, வாலியின் வழக்கைக் கேலிக் கூத்தாக்கிப் பொதுமையுள்ளம் படைத்த பெருமக்கள் உள்ளத்திற்குச் சிறிதும் பொருந்தாத வண்ணம் வாலி கையடை கொடுத்தான். அங்கதன் இராமன் அடிகளில் விழுந்தான். பெருமாள் கருணாமூர்த்தியல்லவோ, அவர் அங்கதனை ஆளாகக் கொண்டதற்கு அடையாளமாகத் தமது உடைவாளை அங்கதனுக்குக் கொடுத்து, இதைப் "பொறுத்துக் கொள்" என்று அனுக்கிரகம் செய்துவிட்டார். வாலிக்கும் மோட்சத்தைக் கொடுத்துவிட்டார், முடிந்தது வாலிமோட்சம் என்று சொல்மாரியாகப் பொழிந்து விடுகின்றார்கள். வாலி மோட்சம் போனால் போகட்டும், இராமன் நிலை என்ன? ஏணி தன்னை அடைந்தவர்களையெல்லாம் மாடிக்கு ஏற்றிக் கொண்டு, தான் இருந்த இடத்தைவிட்டு அகலாது இருப்பதுபோல, இராமபிரான் கிஷ்கிந்தையிலேயே, அரண்மனையில் அல்ல, களத்திலேயே நிற்கின்றனன் என்பதா பொருள்?

" தன்னடி தாழ்த லோடும்
தாமரைச் செங் கணனும்
பொன் உடைவாளை நீட்டி
நீயிது பொறுத்தி யென்றான்
என்னலும் உலகம் ஏழும்
ஏத்தின இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்
கப்புறத் துலக னானான்" (வா. வ. 152)

"பொன்னுடை வாளையீந்த நீயிது பொறுத்தியென்றான்" என்றிருந்தால், இராமன் அங்கதனுக்கு வாள் அளித்தான் என்று பொருள் கொள்ளலாம். அப்படியில்லை 'வாளை நீட்டி" என்றுதான் உள்ளது.

" அரியணை யனுமன் தாங்க
அங்கதன் உடைவா ளேந்தப்
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க
வெண்ணெ யூர்ச்சடை யன்றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி" (திருமுடி. 38)

இத் திருமுடி புனைந்த பாடலில் வரும் "அங்கதன் உடைவாளேந்த" என்ற குறிப்பை வைத்துக்கொண்டு இங்கு "பொன்னுடை வாளை நீட்டி" எனவரும் செய்தியையும் ஒன்றுபடுத்தி, மற்று இச்செய்யுளில் வரும் சொற் பொருள்கள் யாதொன்றையும் சிறிதும் சித்திக்காமல், தாங்கள் இராமபிரானுக்குக் கம்பரை விடச் சிறப்புச் செய்ய வல்லவர்கள் என ஒரு நினைவையுங் கொண்டு இப்படிப் பொருள் செய்து விடுவது பொருத்தமல்ல.

இப்பொழுது கொடுத்த வாளை அப்பொழுது அங்கதன் ஏந்தினன் என்றால், பரதனுக்குக் குடை எப்பொழுது கொடுத்தது, இலக்குவ சத்துருக்கர்களுக்குச் சாமரம் எப்பொழுது கொடுத்தது, அனுமனுக்கு அவன் தாங்கும் அரியணையைத் தாங்கும் அதிகாரம் எப்பொழுது தந்தது என்ற வினாக்களுக்கு எல்லாம் வரலாறுகள் தேடவந்துவிடும். சிறப்புக் காலங்களில் அரசாங்க சாலைகளிலுள்ள கருவிகளை ஒவ்வொரு தொண்டர்கள் கைப்பற்றிக் கொண்டு ஒவ்வொரு தொண்டில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு ஒரு ஏது வேண்டுமா?

உடைவாள் என்பது, வீரர்களிடம் எக்காலத்திலும் அகலாதிருக்கும் படை. அது உடையை வரித்துக் கட்டும் கச்சையில் செருகிக் கொள்ளுவது. உடையில் தரித்துக் கொள்ள அளவாக இருக்க வேண்டுமாதலால் அதற்கு உடைவாள் என்பதனுடன் அதன் வடிவத்தையுங் குறிக்கத் தக்க ஒரு பெயருண்டு அது, குற்றுடைவாள் என்பதே. மகளிருக்கு மங்கல நாண் எப்படியோ, அப்படியுள்ள சிறப்பினைப் பெறுவது அரசரிடத்து அவ்வாட்படை வணங்கா முடிசேகரன், என்று துரியோதனனைச் சொல்லுவார்கள். அவன் வீடுமனாதிய பெரியவர்களை வணங்கவில்லை யாயினும், அவனது மாமனாகிய சகுனியை அல்லும் பகலும் வணங்கிக் கொண்டு தானிருந்தனன். உள்ளபடி வணங்காமுடிசேகரன், இரணியன் ஒருவனே. இரணியன்முன் அவன் அறைந்த தூணிடத்தே நரசிங்கம் தோன்றிவிட்டது. அதனையும் அவன் எதிர்த்துப் போரிட முனைந்தனன். அப்பொழுது பிரகலாதன், தனது தந்தையாகிய இரணியனை நோக்கி, எதிர்க்காதே, வணங்கி வழிபடு, இத்தெய்வம் உன்னை மன்னித்துவிடும். இன்னும் நீடு வாழ்ந்திருக்கலாம் எனப் புத்தி புகட்டினன். இரணியன், நான் தலைவணங்குவது என்பது எக்காலத்திலும் எவ்விடத்திலும் இல்லை. இந்த நரசிங்கத்தை வெட்டி வீழ்த்தியபின் என்வாளை வணங்குவேன். நான் எனது பகைவனை வணங்குவேன் எனக் கூறினன்.

" கேளிது நியுங்காணக் கிளர்ந்த
கோளரி யின் கேழில்
தோளொடு தாளும் நீக்கி
நின்னையுந் துணித்துப் பின்னென்
வாளினைத் தொழுவ தல்லால்
வணங்குதல் மகளி ரூடல்
நாளினு முளதோ வென்ன
அண்டங்கள் வெடிக்க நக்கான்" (இ. வ. 146)

இந்த வணக்கமறியாத இரணியனும் வணக்கத்திற்குரிய தன் சென்னியினுஞ் சிறந்ததொரு சிறப்பு வாட்படைக்கு உண்டெனக் கூறினன் என்றால், மன்னவர் வாளை எவ்வளவு சிறப்புடையதாகக் கருதினர்கள் என்பது விளங்கும் (தொடரும்)



திருவேட்டீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட பொது மக்கள்

## திருவேட்டீசுவரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவில்



ஆணையர், திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள்
உரை நிகழ்த்துதல்



திருவேட்டீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில்,
வாகீச கலாநிதி, திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் உரை நிகழ்த்துதல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ் நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்,
அச்சிடுவோர் : பேரவைப் பதிப்பகம் (பி) லிட்., சென்னை-600 018.